வாரப்பதிப்பு விலை சதம் 20

தலைமைத் தபால் நிலையத்தில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

# சுதந்திரன்

SUTANTIRAN

194 A, SILVER SMITH STREET COLOMBO—12.

திறம் சலவைக்கு

மில்க் வைற் சோப்




மில்க் வைற் சோப் தொழிற்சாலை

யாழ்ப்பாணம்

புத்தகம் 14 திருவள்ளுவர் ஆண்டு 1990 கார்த்திகை திங்கள் 13-ம் நாள் (29—11—1959) ஞாயிற்றுக்கிழமை ஐ அவ்வல் பிறை 27 இதழ் 26

# பிரதமர் பதவி ஏற்க சேர் ஜோன் நிபந்தனை:

## சட்டம் - ஒழுங்கு, சமூக ஒற்றுமை, பொருளாதாரம்

## இவற்றிற்காக உழைக்க எவரும் தடையாக இருக்கக் கூடாது - சம்மதமா ?

### 'வா வா' என்று வற்புறுத்திய அரசாங்கத் தரப்பாரிடம் அழுத்தந் திருத்தமாகக் கேட்டார்

(சுதந்திரன் நிருபர்)

சேர் ஜோன் கொத்தலாவலையை இலங்கையின் பிரதமராகப் பொறுப்பேற்கும்படி கவர்ணர் ஜெனரல் சேர் ஒலிவர் குணதிலகா அழைக்கும்பட்சத்தில் அவர் அந்த அழைப்பினை ஏற்க வேண்டும் என்று வற்புறுத்துவதற்காக, இரண்டுஅமைச்சர்களும், இரண்டு பாராளுமன்றக் காரியதரிசிகளும், அரசாங்கக் கட்சியைச் சேர்ந்த மற்றும் ஏழு அங்கத்தினர்களும் சேர் ஜோன் கொத்தலாவலையை அவருடைய கந்தாவளைத் தோட்டத்தில் சந்தித்துப் பேசியதாகத் தெரிய வருகிறது.

முதலில் அந்த அழைப்பினைத் தாம் ஏற்க முடியாது என்று கூறிய சேர் ஜோன், கடைசியில் சென்றவர்களின் வற்புறுத்தலுக்கு இணங்கினார். ஆனால் அவர் கண்டிப்பான நிபந்தனைகள் விதித்தார் என்று தெரிகிறது.

சேர் ஜோன் கூறியதாக சுதந்திரனுக்கு எட்டும் தகவல் பின்வருமாறு:

"நான் பிரதமராகப் பதவியேற்பதானால் என்னுடைய முக்கியமான நோக்கம் மூன்றாக இருக்கும்.

#### முதல் நோக்கம் சட்டமும் ஒழுங்கும்

1. இந்த நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதே எனது முதலாவது நோக்கம். இந்த நோக்கத்தை நான் நிறைவேற்றும்போது பிக்குகளுக்கும், மகாசங்கத்துக்கும் மாறாக நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி நேர்ந்தால் யாரும் தலையிடக்கூடாது. இதே நோக்கத்தை வெற்றிகரமாக நிலைநாட்டும் முயற்சியில், பண்டாரநாயகா கொலை வழக்கில் வேண்டியவர்களும், வேண்டாதவர்களும், வணக்கத்துக்கும் மரியாதைக்குரியவர்களும் சிக்கலாம். ஆயினும் நேர்மையான முறையில் சட்டம் பிரயோகிக்கப்படுவதை யாரும் இடைநின்று தடுக்கக்கூடாது.

#### 2வது நோக்கம் சமூக ஒற்றுமை

"2. இந்த நாட்டில் சமூக இன ஒற்றுமையை நிலைநாட்டுவதே என்னுடைய இரண்டாவது நோக்கமாக இருக்கும். இந்த அடிப்படையில் சிறுபான்மை மக்களான தமிழ், முஸ்லிம் மக்களுக்கு என் மந்திரி சபையில் பதவி கொடுக்க நேர்ந்தால் யாரும் தடை சொல்லக்கூடாது. சிங்களம் மட்டும் சட்டம் சிறிதுகாலத்துக்கேனும் ஒரு புறம் தூக்கிப்போடப்பட வேண்டியது அவசியம். அந்தச் சட்டத்தைக் கட்டிக்கொண்டு அமுல் நடத்துமாறு என்னை உபத்திரவப் படுத்தக்கூடாது. 'வசதி போல் படிப்படியாக அமுல் நடத்த எனக்கு அதிகாரமளிக்க வேண்டும்.

#### 3வது நோக்கம் பொருளாதாரம்

"3. இந்த நாட்டின் பொருளாதார அபிவிருத்தியே எனது மூன்றாவது நோக்கம். இடதுசாரிகளின் அர்த்தமற்ற கூப்பாடுகளுக்குக் காது கொடுத்து பொன் முட்டையிடும் வாத்துக்களான வர்த்தகர்களையும், முதலீடு செய்பவர்களையும் என்னால் கொலை செய்ய முடியாது. சுயேச்சையான வர்த்தகம் செழிக்க வேண்டும். வர்த்தக வியாபாரத்துறைகளில் அரசாங்கத் தலையீடு குறைய வேண்டும்.

#### இழந்த புகழைச் சம்பாதிக்கலாம்

"என்னுடைய இந்த நோக்

(9-ம் பக்கம் பார்க்க)

---

சிறுபான்மைத் தமிழர்:

## மகாசபைத் தலைவர் மீது நம்பிக்கையில்லாப் பிரேரணை

### விரைவில் கொண்டுவரப்படலாம் உள்ளே பிளவும் பூசலும்

#### கோப்பாய் இடைத்தேர்தல் தந்த வினை

(சுதந்திரன் நிருபர்)

அகில இலங்கைச் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக்குள் பெரும் பிளவும்கொந்தளிப்பும் ஏற்பட்டிருக்கின்றன. தலைவரின்தவறான போக்கில் அருவருப்புக் கொண்ட பலரும் அவர் கௌரவமாகத் தாமாகவே பதவியிலிருந்து விலகுவதை எதிர்பார்த்திருக்கின்றனர். கடைசிக் கட்டததில் நம்பிக்கையில்லாத் தீர்மானம் நிறைவேற்றுவதற்கான முயற்சிகளும் திரை மறைவில் எடுக்கப்பட்டு வருகின்றன.

கோப்பாய் இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் கட்சி அபேட்சகருக்கு மகாசபையின் பேரால் பந்தம் பிடித்து ஆதரவு திரட்ட தலைவரும் மற்றுஞ் சிலரும் முயற்சித்து வருவதே இந்த அதிருப்தியான நடவடிக்கைகளுக்குக் காரணம் என்று தெரிகிறது.

சிறுபான்மைத் தமிழர் மகாசபை கம்யூனிஸ்ட் கட்சியின் கைப்பொம்மை என்ற உண்மையை தலைவர் திரு. சுப்பிரமணியமும் அவரது சகாக்களும் மறுத்து வந்தார்களெனினும். கோப்பாய் இடைத் தேர்தலில் மிகவும் சிக்கலான கட்டத்துள் மாட்டிக்கொண்டு விட்டார்கள். ஹரிஜன மக்களை எவ்வாறு மகாசபையின் பேரால் கம்யூனிஸ்ட் கட்சியிடம் அடைவு வைக்கலாமென்பதில் ஈடுபட்டிருந்த அவர்கள் இந்த இடைத் தேர்தலில் கம்யூனிஸ்ட் அபேட்சகர் நடராஜாவை ஆதரித்து மகாசபையின் டிக்கட்டிலேயே பிரசா

(9-ம் பக்கம் பார்க்க)

---

## கொழும்புத் தொகுதிகளில் தமிழரசுக் கட்சி போட்டியிடும்

### பொதுத் தேர்தல் பற்றி வி. ஏ. கந்தையா எம். பி. தகவல்

[சுதந்திரன் நிருபர்]

எதிர்வரும் பொதுத் தேர்தலில் மத்திய கொழும்பு கொழும்பு தெற்கு ஆகிய தொகுதிகளில் அபேட்சகர்களை நிறுத்தத் தமிழரசுக் கட்சி ஆலோசித்து வருகிறது என்று தமிழரசுத் தலைவர்களுள் ஒருவரும் ஊர்காவற்றுறைப் பிரதிநிதியுமான திரு வி. ஏ. கந்தையா சுதந்திரன நிருபரிடம் கூறினார்.

"இந்த இரண்டு தொகுதிகளிலும் தமிழ் பேசும் மக்கள் பெருமளவில் வசித்து வருகிறார்களாதலால் அவர்களுக்கு தமிழ் பேசும் எம். பிக்கள் பிரதிநிதித்துவம் வகிக்க வேண்டியது அவசியமாகிறது. ஆகவே தமிழரசுக் கட்சி தனது அபேட்சகர்களை நிறுத்த விரும்புகிறது" என்று

(9-ம் பக்கம் பார்க்க)

---

## இந்த சக்தி வாய்ந்த நிவாரணி மார்பு நோய்களை விரட்டுகிறது!

ரிச்லெட்ஸ் பெக்டோரல்

(Richelet's Pectoral)



ஒரு பிரசித்தி பெற்ற தயாரிப்பு குறிப்பாக சுவாச சய நோய்களுக்கென்றே விசேஷமாகத் தயாரிக்கப்பட்டது. ஆகவே, நோய்வுக்கு இது ஒரு வரப்பிரசாதம்!

● மூச்சு விடுதல் தடைபடுவதால் வேதனை ஏற்படுவதுடன் நின்று விடாது. சில சந்தர்ப்பங்களில் அபாயத்தை ஏற்படுத்தக் கூடும்! எனவே இதை ஒழித்துக் கட்டுவதில் அலட்சியமாய்யிருத்தல் கூடாது.

● ரிச்லெட்ஸ் பெக்டோரல் துரிதமாகப் பரவி வேலை செய்யக் கூடிய ரஸச் சேர்க்கையும் சக்தியும் கொண்டது. ஆகவே ஒன்றிரண்டு வேளை மருந்து சாப்பிட்டதுமே சுவாசப்பை, மூச்சுக் குழல் இவைகளில் ஏற்படும் அடைப்பை நீக்கி, கபத்தை உடைத்து, மூச்சுத் திணறலைத் தகர்த்து, சுவாசப் போக்கு வரத்தைச் சமநிலைப்படுத்துகிறது. பிசின்—நுரை—போன்ற சளியை இளகச் செய்து காரி உமிழ்வதை இலகுவாக்குகிறது.

● இடைவிடாத இருமல், இளைப்பு, நெஞ்சுவலி, தொண்டை ரணம், மூச்சடைப்பு; தொண்டையிலேற்படும் கர்ர் புர்ர் என்ற சத்தம், தடிமல், காய்ச்சல், குளிர், பீனசம், கக்குவான், போன்ற சகல நோய்களையும் தணிப்பதுடன், படிப்படியாக நிரந்தரமான—நிச்சயமான—குணத்தையும் அளிக்கிறது




ரிச்லெட்ஸ் பெக்டோரல்

தொய்வினால் துன்புற்ற பலர் ரிச்லெட்ஸ் பெக்டோரலின் புண்ணியத்தால் ஆச்சரியப்படத்தக்க விதத்தில் பூரண குணம் பெற்று வானளாவப் புகழ்கின்றனர்!

எங்கும் கிடைக்கும்.

ஏக. விநியோகஸ்தர்கள்:

வெஸ்டன் ஏஜன்சீஸ்.,

63, பாங்ஷால் வீதி, கொழும்பு-11.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

கிராமப் பொருளாதாரம்:

சென்ற வாரத் தொடர்ச்சி

# பல்தொழில் வளம் பெருக்க பனையும் தென்னையும் கித்துளும் உண்டு

## தாழை, ஈஞ்சு, பிரம்பொடு காட்டு மரங்களும் குடிசை கைத்தொழிலுக்கு மூலப் பொருட்கள்

## இவை சரிவரப் பயன் படுத்தப்படுவதற்கு அரசாங்கம் வழிகாட்ட வேண்டும்

விசேடமாக வடமாகாணத்திலும் தென் மாகாணத்திலுமிருக்கும் எண்ணற்ற கிராமவாசிகளுடைய பொருளாதாரத்தை வளர்ப்பதற்குள்ள தொழில்களுள் பனை மரத்துடன் தொடர்புடைய தொழில்கள் முக்கியமானவையாகும். பனை, தென்னை, கித்துள் ஆகியனவுள்ள இடங்களில் கருப்பட்டிச் செய்கையை குடிசைக் கைத்தொழில் அடிப்படையில் செய்யலாம்.

இந்தியாவிலிருந்து பெருமளவு கருப்பட்டி இங்கு இறக்குமதி செய்யப்படுவதாலும், புளிப்பேறிய கள்ளுக்குக் கூடிய விலையில் நல்ல விற்பனையுள்ளதாலும் இங்கு கருப்பட்டிச் செய்கையைச் செய்ய முடியாமலும் அத்தொழிலை விருத்தி செய்ய இயலாமலுமிருக்கிறது. இந்நிலையை மாற்ற வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

### சீனி உற்பத்தி

இலங்கை விஞ்ஞான கைத்தொழில் ஆராய்ச்சி நிலையத்தின் ஆலோசனையுடன் பனங்கள்ளிலிருந்து சீனி உற்பத்தி செய்வதற்கான ஆராய்ச்சிகள் நடைபெற்று வருகின்றன. அதன் பெறுபேறுகள் ஊக்கந் தருவனவாயிருப்பதால் பனை மரங்கள் ஏராளமாகக் காணப்படும் கிராமப் பகுதியிலுள்ளோர் சீனி உற்பத்தியில் கவனம் செலுத்தி தங்கள் வருவாயை பெருக்கிக்கொள்வதற்கு முன்வர வேண்டும்.

### வெங்காயக் கூடு

பனையோடு தொடர்பான மற்றொரு கைத்தொழில் வெங்காயக் கூடு செய்தலாகும். இத்தொழிலில் ஏறக்குறைய 2000 பேர்களே ஈடுபட்டுள்ளதால் வெங்காயங்களைப் பொதிவதற்கான கூடுகளை இந்தியாவிலிருந்தே பெருந்தொகையாக இறக்குமதி செய்ய வேண்டியிருக்கின்றது. எனவே வட மாகாணப் பிரிவைச் சேர்ந்த மேலும் பல கிராமவாசிகள் வெங்காயக் கூடு செய்யும் தொழிலில் ஈடுபட்டு தங்கள் வருமானத்தை பெருக்கிக் கொள்ள வாய்ப்புண்டு.

### பனந் தும்பு உற்பத்தி

பனையுடன் சம்பந்தப்பட்ட மற்றொரு கைத்தொழில் பனந்தும்பு உற்பத்தி செய்தலாகும். கடினமான பிரஷ்களை உற்பத்தி செய்ய பெரும்பாலும் பனந்தும்பு உபயோகப்படுகிறது. கடந்தகாலத்தில் தும்பு எடுப்பது கையினுலே செய்யப்பட்டமையின் இத்தொழில் சிக்கனமற்றதாகிவிட்டது; அதனுல் காலக்கிரமத்தில் இத்தொழிலும் அமிழ்ந்துபோயிற்று. ஆனுல் சமீபத்தில் தும்பு எடுப்பதற்கென ஒரு தும்பு பிடுங்கியை கண்டுபிடிப்பதில் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டுள்ளன. ஆராய்ச்சி வெற்றிபெறுமாயின் தும்பு உற்பத்தியை வியாபார அடிப்படையில் செய்வதற்கு பனை மரங்களுள்ள கிராமங்களில் இத்தகைய தும்பு பிடுங்கி இயந்திரங்களைப் புகுத்தலாம்: அதனுல்பனைத் தொழிலாளருக்கு ஊதிபந்தரும் வாய்ப்பை ஏற்படுத்தலாம்.

### பெட்டி இழைத்தல்

பனையுடன் தொடர்புடைய மற்றொரு கைத்தொழில் பெட்டி இழைத்தலாகும். இதில் கிராமப்புறத்து பெண்கள் அதிகமாக ஈடுபட வேண்டும். இக்கால இயல்புகளுக்கேற்ப பெட்டிகளை இழைப்பதில் உருவம், வடிவம், தன்மை ஆதியவற்றைச் சீர்திருத்துவதில் மிகுந்த கவனம் செலுத்த வேண்டும்.

### தாழை, ஈஞ்சு பொருட்கள்

தாழை, ஈஞ்சு போன்ற பல்வேறு மூலப்பொருள்களைக் கொண்டு திறமான பொருள்களை உற்பத்தி செய்வதற்கான வழிவகைகளும் ஆராயப்பட வேண்டும். தொப்பிகள், கைப் பைகள், சந்தைப் பைகள்,

அ. விஜயன் விக்டோரியா பி. ஏ.

மேசைப் பாய்கள், வளையற் பெட்டி வேலைகள், பெண்கள் கைப்பெட்டிகள் முதலியன வற்றைத் தத்தம் கிராமப் புறங்களிலிருந்து கிடைக்கும் மூலப்பொருள்களைக் கொண்டு மகளிர் செய்யலாம். இதனுல் நாட்டுப்புற பெண்கள் தங்கள் வாழ்க்கைத் தரத்தை உயர்த்திக் கொள்ள முடியும்.

### கயிற்றுத் தும்பு

பனை மரத்திலிருந்து பல பயன்களைப் பெறுவது போன்று தென்னை மரத்தினின்றும் பல பயன்களைநாம் பெற்றுவருகிறோம். தென்னை மரத்துடன் தொடர்புடைய ஒரு குடிசைக் கைத்தொழில் கயிற்றுத் தும்பு வேலையாகும். பாயிழைக்கும் தொழிற்சாலைகளுக்குத் தேவையான பலரகமான தும்புகளை சிக்கனமான முறையில் தேங்காய் மட்டைகளிலிருந்து சேர்ப்பதில் கிராமவாசிகள் ஈடுபடலாம்.

தேங்காய் மட்டைகளைச் சேகரிப்பதில் தரகர் ஏகபோக உரிமைகொண்டு கயிற்று வேலைத் தொழிலாளர்களுக்கு நட்டம் விளைவிப்பதால், அரசாங்கமே தேங்காய் மட்டை அழுகுங் குழிகளைத் தகுந்த விடங்களில் தோற்றுவிப்பதவசியம். அழுகிய மட்டைகளிலிருந்து தும்புகள் பெறவும் அடிக்கவும் சிறிய அளவினதான இயந்திரத்தைக் கண்டுபிடிப்பதற்கு ஆராய்ச்சிகள் செய்யப்படுகின்றன. இயந்திரச் சாதனத்தின் விளைவாக, கிராமப்புறங்களிலுள்ள தும்பு உற்பத்தி செய்வோரதும் பின்னுவோரதும் நிலைமை முன்னேறவும் அவர்களுக்குக் கூடிய வருமானம் கிடைக்கவும் வழி ஏற்படுவது நிச்சயம்.

### பிரம்பு வேலை

இந்நாட்டுக் கிராமங்களிலே பாரம் பரியமாக நடைபெறும் தொழில்களுள் பிரம்பு வேலையும் பெட்டி இழைத்தல் வேலையும் முக்கியமானவையாகும். ஆனுல் இத்தொழில்களில் கையாளப்படும் முறைகள் கரடு முரடானவையாயிருக்கின்றன. இவற்றின் உற்பத்திச் [illegible] கின்றது. கிராமப்புறங்களில் இக் கைத்தொழில்கள் வாழ வேண்டுமாயின் குறைந்த விலையுள்ள மூலப் பொருள்கள் பயன் படுத்தப்பட வேண்டும். சிக்கன முறையில் இக் குடிசைத் தொழில்கள் செய்யப்பட்டால் கிராமத் தொழிலாளர் கூடிய வருவாயைப் பெற முடியும்.

### மர வேலை

இலங்கைத் தீவிலுள்ள பிரதான குடிசைக் கைத்தொழில்களுள் மரவேலைத் தொழிலும் முக்கியமானதாகும். இது கிராமப்புறங்களிலுள்ள ஒன்றரை இலட்சம் மக்களுக்கு வேலை அளிக்கின்றது. இத்தொழிலால் கிராமவாசிகள் நல்ல வருவாய் பெறவேண்டுமாயின் மர வேலைகளில் சில பகுதிகளை இயந்திர சக்திமூலம் செய்ய வேண்டும். அரசாங்கப் பகுதியாலும் சில தனிப்பட்ட வியாபாரத் தாபனங்களாலும் நடாத்தப்படும் வேலைத்தலங்களில் மட்டுமே எந்திர சாதனங்கள் நிறுவப்பட்டுள்ளனவன்றி ஏனைய இடங்களிலெல்லாம் கை உபகரணங்களே உபயோகிக்கப்படுகின்றன. தொழிலாளர் பெரும்பாலும் மரங்களை இணைத்தல், அழகு படுத்துதல் ஆகியவற்றில் மட்டும் தம் நேரத்தையும் உழைப்பையும் ஈடுபடுத்தி, சாதாரண மக்களுக்கு நியாயமான விலையில் கிடைக்கக் கூடிய பாவிப்புக்கான மரச்சாமான்களை எந்திரச் சாதனங்களைக் கொண்டு உருவாக்குவதில் முனைய வேண்டும். அங்ஙனமாயின் மரத் தொழிலில் ஈடுபட்டுள்ள கிராமப்புறத் தொழிலாளர் நல்ல இலாபம் பெறுவர்.

### அரசாங்கத்தின் கடமை

ஈழ நாட்டுக் கிராமங்களிலுள்ளோர் சிறு தொழில்களைச் செய்வதற்கான கைத்திறமையைப் பரம்பரைச் சொத்தாகப் பெற்றிருக்கின்றனர். எனினும் அவர்களது பொருளாதார நிலை இரங்கத்தக்கதாயுள்ளது. அவர்களின் பொருளாதாரம் வளர்ந்தோங்க வேண்டுமாயின் நாடெங்கணுமுள்ள மக்கள் சிறு கைத் தொழில்களைத் திருந்திய முறையில் செய்வதற்கான துறைகளை ஆராய்ச்சிகளின் மூலம் காண்பித்துக் கொடுப்பதும், தேவையானவர்களுக்குக் கடனுதவி யளிப்பதும், பொருள்களைச் சந்தைப் படுத்தும் வாய்ப்புகளைச் செய்விப்பதும், தொழில் வளர்ச்சி கருதி மின்சார, இயந்திர வசதிகளைக் கிராமப் பகுதிகளில் தோற்றுவிப்பதும் அரசாங்கம் ஆற்ற வேண்டிய கடமைகளாகும்.


## ஆங்கிலம்

ஆங்கிலம் அழகாகப் பேச, வாசிக்க, எழுத ஆறே மாதங்களில் படிக்க விரும்பினுல் இலவச விபரங்களுக்கு எழுதுக.

அற்லஸ் ஹோல்,
723, மருதானை ரோடு,
கொழும்பு-10.
த. பெட்டி 649.


# யாழ்ப்பாண வவனியா பகுதிகளில் காணிகள்

## நிலமற்றவர்களுக்கு வழங்கப்படும்

### விவரமும் விண்ணப்பப் பத்திரமும் யாழ். தமிழரசுக் கட்சியில் கிடைக்கும்

யாழ்ப்பாண மாவட்டத்திலும், வவனியா மாவட்டதிலும் காணி இல்லாத கீழ்த்தர — மத்தியதர வகுப்பைச் சேர்ந்த மக்களுக்கு காணி நிலங்கள் வழங்க அரசாங்கத்தால் விண்ணப்பப் பத்திரங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன் படுத்தித் தமிழ் மக்கள் முடிக்குரிய காணிகளைப் பெறவேண்டும் என்று தமிழரசுக் கட்சியின் உதவிக் காரியதரிசியான திரு. எஸ். சின்னத்துரை சுதந்திரனுக்கு விடுத்துள்ள ஒரு செய்தியில்குறிப்பிட்டுள்ளார்.

பரந்தனில் உள்ள கோரக்கன் கட்டு என்னும் காணியை அரசாங்கம் காணியில்லாதவருக்குப் பங்கிட்டளிக்க முன் வந்திருக்கிறது. இந்த இடத்தில் நிலம் வேண்டுவோர் உரிய விண்ணப்பப் பத்திரத்தில் விவரங்களைப் பூர்த்தி செய்து 1959 டிசம்பர் 12-ந் தேதி பகல் 12 மணிக்கு முன்பதாக யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபருக்கு அனுப்பிவைக்க வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட ஒவ்வொருவரும் மானுவாரி நெற்பயிர் செய்கைக் கேற்ற 5 ஏக்கர் காணித் துண்டு பெறுவர்.

### முல்லைத் தீவில்

வவனியா மாவட்டத்தைச் சேர்ந்த அலம்பில், குமுளமுனை, கணுக்கேணி, உப்புமாவெளி ஆகிய கிராமங்களிலும் நிலங்கள் கொடுபடவிருக்கின்றன. இந்த இடங்களில் நிலம் கோருபவர்கள் 1959 நவம்பர் 30-ந் தேதியோ அதற்கு முன்பாகவோ உரிய விண்ணப்பப் பத்திரத்தில் வவனியா அரசாங்க அதிபருக்கு விண்ணப்பிக்க வேண்டும். இது சம்பந்தமாக முல்லைத்தீவு, கரைதுறை பற்று காரியாதிகாரி கந்தோரில் 1959 டிஸம்பர் 15-ந் தேதி காலை 10 மணிக்கு ஒரு காணிக் கச்சேரி நடைபெறும்.

### மேலும் விவரங்கள்

நிலம் பெறுவது சம்பந்தமாக மேலும் விவரங்கள் வேண்டுவோர் 1959 நவம்பர் 13-ந்தேதியைக்கொண்ட அரசாங்க கஸட் பத்திரிகையில் கண்டுகொள்ளலாம்.

உரிய விண்ணப்பப் பத்திரங்களும் விவரங்களும் யாழ்ப்பாணம் 2-ம் குறுக்குத் தெரு 25-ம் இலக்க இல்லத்திலுள்ள இலங்கைத் தமிழரசுக்கட்சிக் காரியாலயத்தில் இனுமாகப் பெற்றுக் கொள்ளலாம்.


## ஆனந்தா லேகியம்

இதன் குணத்தை ஒரே நாளில் அறிந்து கொள்ளலாம்.

நிர். 174, ஆனந்தா வைத்தியசாலை என்ற விலாசத்தைப் பார்த்து வாங்குங்கள்.

ஆனந்தா லேகியம் நாள் தோறும் மலஜலத்தை சுகமாகக் கழித்து, அசதி, சோம்பல், மேல், கால், கைகளுக்களில் வலி, அஜீரணம், பசியின்மை, பித்த வாய்வு, புளியேப்பம், வயிற்றுப் பொருமல், வயிற்று வலி, இடுப்பு வலி, நெஞ்சு வலி, சிரங்கு, பற்றுகள், சொறி, தேமல், நெஞ்சு எரிவு, பிரேகம் காந்தல், கண் எரிச்சல், உள்ளங் கால், கை எரிச்சல், வாய்வுக் குத்து, நெஞ்சடைப்பு, சகலவித வாய்வுகள், வாதக் கடுப்புகள் முதலிய அநேக வியாதிகள் தீரும். சில காலம் சாப்பிட்டு வந்தால் மூல வியாதி அடியோடு தொலைந்து போகும். பத்தியமில்லை.

பெரியது ரூ. 5-75. சிறியது ரூ. 3-00.

இத்துடன், "ஆனந்தா தைலத்தை"த் தேய்த்து வந்தால் அதிக உஷ்ணம், கண் எரிச்சல், மூலச் சூடு, பித்த மயக்கம், கை கால் எரிவு முதலான அநேக வியாதிகளை நீக்கி மூளைக்கு குளிர்ச்சியையும் கண்ணுக்குப் பிரகாசத்தையும் கொடுக்கும். சகல வியாதிகளுக்கும் விபரமடங்கிய கேட்லாக் எழுதினுல் இனுமாக அனுப்புவோம்.

பெரியது ரூ. 5-50. சிறியது ரூ. 3-00.
வி. பி. பி. செலவு வேறு.

தயாரிப்பாளர்:-
ஆனந்தா வைத்தியசாலை,
நிர். 174, செட்டியார் தெரு, கொழும்பு-11


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# கேட்டுப் பாருங்கள்

குயுக்தி

அ. அரசரெத்தினம், சேனையூர்.

கே: தமிழ்ப் படவுலகில் 'வில்லன்' பாத்திரம் தாங்குவதில் சிறந்தவர் யார்?

ப: பாலையாதான். அவர் இடத்தைப் பிடிக்க இன்னொருவர் இன்னும் பிறக்கவில்லை.

ஃ

வே. வ. வன்னியசிங்கம், கொல்லங்கலட்டி.

கே: கோப்பாய்த் தேர்தல் எதை நிரூபிக்கப் போகிறது?

ப: தமிழரசுக் கட்சியின் மங்காத செல்வாக்கை நிரூபிக்கப்போகிறது.

ஃ

சு. தங்கராசா, கொழும்பு.

கே: இலங்கை வந்திருக்கும் எம். கே முஸ்தபாவுக்கு நடிப்புத் துறையில் வழிகாட்டியாய் அமைந்தவர் யார்?

ப: வழிகாட்டி மட்டுமென்ன? நண்பனும் அன்பனும், ஆசிரியனும், குருவாய் அமைநதவரே எம். ஜி. ஆர். தான் என்று நிரம்பிய பண்போடு பகிரங்கமாகவே முஸ்தபா சொல்லியிருக்கிருரே.

ஃ

மஞ்சன் மகன், கல்லடி.

கே. வானெலி "அரசியல் குறிப்பு" எதைக் காட்டுகிறது?

ப: அதன் சிருஷ்டிகர்த்தா பத்திரிகையாசிரியர்களைக் கனவில் பூத வடிவில் கண்டு அலறுகிருர் என்பதைக் காட்டுகிறது.

ஃ

யூ. பேதுரு, மட்டுநகர்.

கே: ஓய், குயுக்தியாரே, நான் உம்மைக் கைத் துப்பாக்கியால் சுட்டுவிடப் போகிறேன்.

ப: நான் சுவர் கட்டி வாழாவிட்டாலும் உம்மால் முடியாது அப்பனே. புத்தம் சரணம் கச்சாமி.

ஃ

க. சுப்பையா, மாவிட்டபுரம்.

கே: யாழ்ப்பாணத்தில் தஹாவின் தயவுடன் இந்து சர்வகலாசாலை ஒன்றினை ஸ்தாபிக்கப்போவதாக ஜம்பமடிக்கிருரே ஒரு பிரகிருதி. அவரைப்பற்றி உங்கள் அபிப்பிராயமென்ன?

ப: அடடே, ஆளைத் தெரியாதா உங்களுக்கு? அவர் தானையா யு. என் பி. கட்சியைக் கட்டிப்பிடித்துக் கொண்டிருந்த சமயம் காங்கேசன்துறைத் துறைமுகத்தைத் திறந்து காட்டுவேன் என்று வாயை மட்டும் திறந்து காட்டியவர்!

ஃ

சு. பாலகிருஷ்ணன், தெமட்டக்கொடை.

கே: இறைவனை ஆராய்ச்சியால் காண முடியாது. அனுபவத்தால்தான் காண முடியும் என்று மாணிக்கவாசக சுவாமிகள் கூறுகின்ருர். உங்கள் கருத்தென்ன?

ப: மணியான வாசகமாகக் கூறிவிட்டார் மாணிக்கவாசகர். ஆள் புத்திசாலிதான். ஆராய்ச்சியால் காணலாம் என்று சொல்லியிருந்தால் சந்திரனையே இந்தப் பாடுபடுத்தும் ருஷிய விஞ்ஞானிகள் இறைவனையே துளைத்திருக்கமாட்டார்களா?

ஃ

சோ. வாமதேவன், கந்தரோடை.

கே: இன்றைய நிலையில் இலங்கையில் பெண்கள் அரசாங்கம் ஏற்பட்டால் எப்படியிருக்கும்?

ப: அரசாங்கத்தில் ஒரு பெண் இருந்தபோதே இத்தனை கோலாகலம் நடந்துவிட்டதென்ருல், அரசாங்கம் முழுவதும் பெண்மயமாகிவிட்டால் கேட்கவேண்டுமா?

ஃ

இ. கோபாலசிங்கம், சேனையூர்.

கே: தங்களுக்குப் பிடித்த அரசியல் கட்சி எது?

ப: தமிழரசுக் கட்சிதான். அந்தக் கட்சியில்தான் உண்மை ஜனநாயகம் நிலவுகிறது. அங்கு வேற்றுமையில் ஒற்றுமையைக் காண்கிருேம். புலியும் பசுவும் முடிவில் பசுவின் தொட்டியில் தண்ணீர் குடிக்கும் அதிசயத்தையும் அங்குதான் காணமுடியும். கொதிக்கும் நாகநாதனும் சில்லிட்டுப்போன செல்வநாயகமும் இறுதியில் முடிவு செய்யும் கட்டத்தை அடையும்போது தண்ணென்று ஆகிவிடுகிருர்கள் அல்லவா?

ஃ

மு. திருநாவுக்கரசு, வட்டுக்கோட்டை.

கே: தாங்கள் பார்த்த தமிழ் சினிமாப் படங்களில் தங்கள் மனதில் நிலையான இடம்பெற்ற ஐந்து படங்களைக் கூறுங்கள் பார்க்கலாம்.

ப: சந்திரலேகா, அந்த நாள், மனோகரா, வாழ்க்கை, கல்யாணப்பரிசு.

ஃ

கோணமலை, சேனையூர்.

கே: அறிவுடையவர்களிடம் பொருள் சேராததேன்? அறிவில்லாதவர்களிடம் பொருள் சேருவது ஏன்?

ப: செல்வம் நிலையற்றது என்பதையுணர்ந்து அறிவுடையவர்கள் அதை நல்ல வழிகளில் செலவிட்டுவிட்டு நிம்மதியாக மறைகிருர்கள். அறிவிலிகள் செல்வம் நிலையானது என்று எண்ணி அதைக் குவித்துக் காத்து இறுதியில் விட்டுப்பிரிய முடியாமல் மனம் புழுங்கி மாள்கிருர்கள்.

ஃ

பெ. இராசையா, யாழ்ப்பாணம்.

கே: சீனப் பெண்கள் கொழு கொழு என்று வாளிப்பாய் இருப்பதற்குக் காரணம் என்ன?

ப: காரணம் இரண்டு. ஒன்று அவர்களுடையசோம்பல் இல்லாத உழைப்பு. மற்றது அவர்களுடைய [illegible] தவளைக் கொழுப்பை [illegible]பிச் சாப்பிடுகிருர்கள். அது ஆளைத் தளதள என்று வைத்திருக்கிறது.

ஃ

எல். எம். ஜபர், காத்தான்குடி.

கே: ஜனுப் முஸ்தபா அடுத்து எதை எதிர்பார்க்கலாம்?

ப: தமிழரசுக் கட்சியின் அடிவானத்தில் தோன்றிய முஸ்தபா அவருடைய அரசியல் வாழ்வின் உச்சிப் பொழுதை வெகு வேகமாக அடைந்துவிட்டார். முஸ்தபா இனி எதிர்பார்க்கக் கூடியது அஸ்தமனத்தைத்தான்.

மிஸ்டர் குயுக்தியார்
C/o சுதந்திரன்.
த. பெ. 1183
கொழும்பு.—12

ஃ

செ. ஞானசிங்கம், யாழ்ப்பாணம்.

கே: ஒருவன் கவலையில்லாமல் வாழ்வதற்கு வேண்டிய முப் பொருட்கள் யாவை?

ப: ஆஸ்தி, அறிவு, ஆரோக்கியம்.

ஃ

கே. ஆர். பண்டிதநாதன், வட்டுக்கோட்டை.

கே: தமிழரசுக் கட்சியில் அரசாங்கம் நடத்தக்கூடிய ஆற்றல்வாய்ந்தவர்கள் இருக்கிருர்களா?

ப: இதென்ன கேள்வி தம்பி? தமிழரசுக்கட்சியின் கடைக் குட்டியாக அரசியல் வாழ்வை ஆரம்பித்த முஸ்தபாவே இந்த நாட்டின் நிதியமைச்சராக விளங்க முடியுமானுல் மற்றவர்களின் திறமையைப் பற்றித் தொடுகுறி சாத்திரம் வேறுபார்க்க வேண்டுமா?

ஃ

க. ச. இளையதம்பி, தெல்லிப்பழை.

கே: கொம்யூனிஸ்ட் கட்சியின் [illegible] கொடியின் அர்த்தமென்ன?

ப: அதன் உண்மையான அர்த்தம் தெரிந்தவர் ஒருவர்தான் உலகில் வாழ்ந்தார். அவரும் மாண்டுவிட்டார். அவர் பெயர்லெனின். இப்போது அந்தக் கொடிக்கு அர்த்தம் யாருக்குமே தெரியாது.

ஃ

ஐ. பாலசுப்பிரமணியம், வேலணை.

கே: சிறீலங்கா சுதந்திரக் கட்சி இனிச் சிங்கள மக்களிடம் செல்வாக்குப் பெறுமா?

ப: அதைத் தோற்றுவித்த போஸிசத்துவரின் தர்மபத்தினியே அதில் நம்பிக்கையிழந்து சுயேச்சையாக அத்தனகலைக்குப் போட்டியிடும்போது பொது மக்கள் மட்டும் அக் கட்சியில் நம்பிக்கை வைக்க அவ்வளவு பைத்தியக்காரர்கள் அல்லவே.

ஃ

சண்முகலிங்கம், காளாவி.

கே: எஸ். எஸ். ஸி. பரீட்சையை ஒழித்துவிடப் போகிருர்களாமே, எதற்காக?

ப: எஸ். எஸ். ஸி. படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டம் என்ற பிரச்னையை வெற்றிகரமாக ஒழிப்பதற்காக.

# அவளின் விழிகளா?

— "திமிலைத்துமிலன்" —

நில வானப் பெண்ணை நோக்கி நித்த முருகியே
நிலை மறந்து கடல் கிடக்கு—நெஞ்சு குமுறியே!
கோல வண்ணப் பட்டு டுத்தி குளிர்நி லாவெனும்
குமுத முகம் நீட்டி அங்கு குறும்பு செய்கிருள்
வேலை மிஞ்சும் மின்னல் விழிக் கோண விச்சிலே
மிளிரும் காதல் பிறந்து போச்சு விம்மும் மூச்சிலே!
கோழை யாகிக் காளை யவன் குழைந்து பார்க்கிருன்
"கொஞ்சு" என்று கெஞ்சி வானக் குமரி நிற்கிருள்!

ஆவ லோடு தாவி அலைக் கரங்கள் நீளுதே
அவ ளுளத்தும் அவனை அண்ம ஆசை மூளுதே
பாவ மவன் கரங்கள் ஓய்ந்து தலை கடுக்குதே
பார்த் திருந்த அவள் கழுத்தும் வலி யெடுக்குதே
கோபம் அந்தக் குளிர் முகத்தில் கோடு காட்டுதே
குறுக்கில் வந்து மேகக் குழல் திரையை நீட்டுதே
தாபம் பொங்கு மிந்த நிலை நாளும் நீளுதே
தவிக்கும் உள்ளத் துடிப்பும் சாக இருளும் மூளுதே!

அமுத நிலவு வதனம் ஏனோ அவனை வெறுக்குதே?
அவளைத் தழுவு துகிலின் 'விண்மின்' அலர மறுக்குதே!
குமுத விழிகள் சுழல வில்லை ஏங்கி யேங்கியே
குமுறிப் பொருமி நெஞ்சு துடிக்கும் ஓங்கி யோங்கியே
தமது நிலையில் அழுது அழுது கண்ணீர் வற்றியே
தடித்த உடலும் தளர்ந்து போச்சு கவலை முற்றியே
குமுகுமுவென உதிர்த்தும் துளிகள் அவளின் விழிகளா?
குளிந்து பொருமும் அவளின் கண்ணீர்—மழையின் துளிகளா?


# ஆஸ்த்மாவால் அவதிப்படும் அன்பர்களுக்கு....

ஆஸ்த்மா என்ற தொய்வு ஏற்படுவதற்கு மார்ச்சளி, மூக்கடைப்பு, இருமல், காலநிலை, மூச்சடைப்பு, மூத்திரக் கோளாறுகள் என்பன போன்ற பல காரணங்கள் உண்டு காரணம் எதுவானுலும்........................

## ஆஸ்த்மடிக்கா

வியாதியைப் பூரணமாகக் குணமாக்கும் என்பது நம் உத்திரவாதம்.

பாவித்த அன்பர்கள் கூறுவதைக் கேளுங்கள். வணக்கத்துக்குரிய பிதா தோமஸ் (டிரெக்டர் ஜெனரல்) ரோசரி ஆஸ்ரமம் வாசவிளான் எழுதுகிருர்.

தங்களது ஆஸ்த்மடிக்காவைப் பாவித்ததில் என் வியாதியஸ்தர் பெரிதும் குணமடைந்துள்ளார் என்பதை—நன்றியுடன் தெரிவிக்கிறேன்—என் வாழ்த்துக்கள்—ஆஸ்த்மடிக்காவுக்கு

Rev. Fr. B. A. Thomas (O. M. I.)
Rosary Asthrama,
VASAVILAN.

எனக்கு வயது 50 க்கு மேலாகிறது—கொழும்பில்உள்ள பெரிய கம்பெனி ஒன்றில் சித்திர லிபிகையாக Draughtsman) வேலை பார்க்கிறேன்.

சென்ற 20 வருட காலமாக ஆஸ்த்மா—மாரடைப்பு, மார்ச்சளி, இரவில் தூக்கமின்மை இவைகளால் பெரும் கஷ்டப்பட்டுள்ளேன். நான் காணுத டாக்டர்கள் இல்லை. எவ்வளவோ ஊசிகள் போட்டும் பலனில்லாமல்இருந்த எனக்கு ஆஸ்த்மடிக்கா 3 பாட்டில்கள் பூரண குணமளித்துள்ளது. என்பதை கடவுள் மீது ஆணையிட்டுச் சொல்கிறேன்.

எஸ். ஏ. தோமஸ்,
87, தெலன்கபாத ரோட்,
வத்தளை.

S. A. Thomas,
87, Telangapatha Road,
WATTALA.

ஆஸ்த்மா, மாரடைப்பு, மார்சளி, இருமல் இவைகளுக்கு ஆஸ்மடிக்கா ஒரு நவீன சஞ்சீவி.

3 அல்லது 4 பாட்டில்கள் தொடர்ச்சியாகப் பாவித்தால் வியாதி பூர்ண குணமடையும் என்பது உத்திரவாதம்.

ஆஸ்த்மடிக்கா சாதாரணம் ரூ. 5/-
ஆஸ்த்மடிக்கா ஸ்பெஷல் ரூ. 15/-
(மிக உபாதைத் தரக்கூடிய ஆஸ்த்மாவுக்கு)

வி. பி. பி. தனி
விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

# மொடர்ன் கிளினிக்,

255, காலி ரோட்,
பம்பலப்பிட்டிய கண்வண்ட் எதிரில்
பம்பலப்பிட்டிய
கொழும்பு—4.

கடுகண்ணுவையில் கிடைக்குமிடம்:

டி. பி. குஞ்சிமூசா & கோ,
கடுகண்ணுவை.

சம்மாந்துறையில் கிடைக்குமிடம்:

எம். வெள்ளைத்தம்பி,
புடவை வியாபாரம்,
3-ம் குறிச்சி,
சம்மாந்துறை.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழியக்கம்

"தேசமெல்லாம் தமிழியக்கம் செழிக்கச் செய்வோம்"

தமிழியக்கம் மக்களிடையே உண்டாக்கியுள்ள தமிழ் ஆர்வத்தைப்பற்றிப் பல தொண்டர்கள் விரிவாக எழுதியிருக்கிறார்கள்.

"தமிழியக்கம் இப்பொழுது பல நன்மைகளைச் செய்து வருகிறது. முன்னர் தமிழிலே முகவரி எழுதுவோரைக் கண்டால் ஒரு சிலர் சிரிப்பார்கள். இந்நிலை நீங்கி இப்பொழுது தமிழிலே எழுதுவோரைக் கண்டால் மொழிப்பற்றுடையோர் என்று மெச்சும் நிலை வந்துவிட்டது. வாரந்தோறும் வெளியாகும் கட்டுரைகள் உணர்ச்சியற்றோரை ஊக்குவிக்கின்றன. பலர் தமிழுக்கு முதன்மை கொடுக்க முன்வந்துளர்"- இது ஒரு தொண்டர் கூற்று.

மலைநாட்டுப் பகுதியிலும் தமிழியக்கம் மக்களிடையே பேருணர்ச்சியை உண்டாக்கியுளது.

### அங்கும் இங்கும்

"முன்பெல்லாம் எங்களுக்குச் சம்பளங் கொடுக்கும்போது பற்றுச்சீட்டில் ஆங்கிலத்திற் கையொப்பமிட்டோம். இப்பொழுது தமிழிலேயே கையொப்பமிடுகிறோம். தோட்ட நிருவாகிகளுடனும் தமிழிலேயே தொடர்புகொள்ளுகிறோம். இன்னும் அரசாங்கத்துடனும் இன்சூரன்சுக் கம்பனி முதலிய பிற தாபனங்களுடனும் தொடர்பு கொள்ளுவதும் தமிழிலேதான். தோட்டத் தமிழர் தமிழுக்காகச் செய்யும் சிறு தொண்டைக்கூட இலங்கைத் தமிழர் செய்வதில்லை. தோட்டத் தமிழர் இப்பொழுது கடிதங்களிலே தமிழிற்றான் முகவரி எழுதி அனுப்புகின்றனர்.

"இலங்கைத் தமிழர் ஆங்கில எழுத்துத் தெரிந்தாற் போதும், ஆங்கிலத்திலேயே முகவரியை எழுதுகின்றனர். ஆங்கிலம் தெரியாதவர்கள் தெரிந்தவர்களைக்கொண்டு எழுதி அனுப்புகின்றனர்"— இவ்வாறு மலைநாட்டுத் தொண்டர் ஒருவர் எழுதியிருக்கிறார்.

### சிங்களக் கடிதம்

மோட்டார்க் கார்ச் சொந்தக்காரருக்கு 1960ம் ஆண்டுக்குரிய உத்தரவுச் சீட்டைப் பெற்றுக்கொள்ளுமாறு மோட்டார் ஊர்திப் பதிவாளர் கடிதங்கள் அனுப்பியிருக்கிறார். இக்கடிதங்கள் யாவும் சிங்களத்திலேயே அனுப்பப்பட்டிருக்கின்றன. அச்சடிக்கப்பட்ட இக்கடிதப் படிவத்தின் இலக்கம் C.M.T. 112 (Sinhala).

தொண்டர்கள் பலரும் தமிழன்பர்கள் சிலரும் இந்தக் கடிதங்களைத் திருப்பி அனுப்பியிருக்கிறார்கள். ஒரு தொண்டர் பின்வருமாறு தாம் எழுதியிருப்பதாக அறிவித்திருக்கிறார்.

"பதிவாளர்,
மோட்டார் ஊர்திகள்,
கொழும்பு.

அன்புடையீர்,

நீங்கள் அனுப்பிய இக்கடிதத்தை வாசித்து அறிய என்னால் முடியாது. எனவே இதனைத் திருப்பி அனுப்புகின்றேன். இதனைத் தமிழிலே மொழிபெயர்த்து அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன். எனக்குத் தெரியாத மொழியில் இனி எனக்கு ஒன்றும் அனுப்ப வேண்டாம். எனது தாய்மொழி தமிழ் என்பதைக் குறித்து வைத்துக்கொள்க"

### நம் கடன்

இந்தத் தொண்டர் செய்துள்ளமாதிரி எல்லாத் தமிழர்களுஞ் செய்தல் வேண்டும். சிங்களந் தெரிந்தவர்களைத் தேடித் திரியாமல்— மானம் இழந்து வாழாமல் எமக்குத் தெரிந்த மொழியிலே எமக்கு அனுப்புபவற்றை அனுப்புமாறு வற்புறுத்துதல் நம்கடன். இதனைச் செய்யத் தவறுவோர் தமிழுக்குத் துரோகம் செய்பவர்களாவர். நாம் செலுத்தும் வரியினைப் பெறும் அரசாங்கம் எமது வசதிக்கேற்ப அலுவல்களைச் செய்யக் கடமைப்பட்டுளது. அது தன் கடமையிற்றவறினால்-வேண்டுமென்று எம்மை இழிவுபடுத்தினால்-அதை எதிர்க்க வேண்டியது மானமுள்ள ஒவ்வொரு தமிழனுஞ் செய்ய வேண்டிய ஒப்பற்ற கடமையாகும்.

### பாராளுமன்றஉறுப்பினர்

பாராளுமன்ற உறுப்பினராகவிருக்குந் தமிழர் சிலருக்கும் இச்சிங்களக் கடிதங்கள் அனுப்பப்பட்டுள. இந்த அநீதியையும் அக்கிரமத்தையும் அவர்கள் உடனே இதற்குப் பொறுப்பான திணைக்களத் தலைவருக்கும் அமைச்சர்களுக்கஞ் சுட்டிக்காட்டுதல் வேண்டும். இது தான நியாயமான தமிழ்மொழி உபயோகச் சட்டத்தினை நடைமுறைக்குக் கொண்டு வரும் முறை என்று அரசாங்கத்தைக் கேட்டல் வேண்டும். இதுபற்றிப் பாராளுமன்றத்திலும் கேள்வி கேட்கலாம்.

### எதிர்ப்பை தளர்த்தக்கூடாது

தமிழை ஒதுக்க மூலைமுடுக்குகளில் எல்லாம் எத்தனையோ காரியங்கள் திட்டமிட்டு நடைபெறுகின்றன. இவற்றை எல்லாம் அம்பலப்படுத்துதற்குத் தமிழ்ப் பத்திரிகைகள் பின்னிற்றல் கூடாது. இவற்றைப் பாராளுமன்றத்திலே எடுத்துரைத்தல் பாராளுமன்ற உறுப்பினர்தம் கடமையாகும். இவ்வாறு செய்வதால் ஒரு பயனும் வராது என்ற சோர்வு மனப்பான்மைக்குத் தமிழர் ஒருபோதும் அடிமைப்படுதல் கூடாது. பத்திரிகைகளும் பாராளுமன்ற உறுப்பினரும் அம்பலப்படுத்திய பல துறைகளிலே நன்மை உண்டாகியிருக்கிறது. எனவே நாம் இழந்த மொழியுரிமையை மீண்டும் பெறும்வரை நம் எதிர்ப்பை எக்காரணங்கொண்டுந் தளர்த்தல் கூடாது; நாம் சோர்வும் அடைதல் கூடாது.

### மூன்று விதத்தில் பயன்

நாம் சோர்வின்றி ஒன்றுபட்டுத் தமிழை வாழ வைப்பதற்காகவே தமிழ்ப்பற்றுடைய மானம்மிக்க தமிழர்களையெல்லாம் ஒன்று சேர்க்கும் தமிழியக்கத்தைத் தொடங்கினோம். ஆயிரக்கணக்கானோர் சேர்ந்து தமிழுக்காக உழைப்பார்கள் எனின் இதனால் உண்டாகும் நன்மைகள் பல. சேர்ந்தவர்களுக்கு "நாம்பலர்" என்ற உற்சாகம் உண்டாகும். சேராதவர்களுக்கு "இத்தகைய இயக்கத்தில் நாமும் சேர வேண்டும்" எனும் ஊக்கம் பிறக்கும். தமிழை ஒழிக்க நினைப்போருக்கு இந்த இயக்கத்தின் பெருமையுந் தொண்டும் அச்சத்தையும் அங்கலாய்ப்பையுங் கொடுக்கும். தமிழ் எங்கும் வாழும். எனவே இதுவரையும் தொண்டர்களாகச் சேராதவர்கள் உடனே உங்கள் பெயர், வயது, தொழில், முகவரி முதலியவற்றை எழுதிக் கையொப்பமிட்டுத் தமிழியக்கம், மே/பா சுதந்திரன், த. பெ. 1183, கொழும்பு எனும் முகவரிக்கு அனுப்புங்கள்.

### மாணவர் சேர்வு

கல்லூரிகளிலே இம்மாதக் கடைசியிலே பரீட்சைகள் நடைபெறுவதால் மாணவர்களைத் தமிழியக்கத் தொண்டர்களாகச் சேர்த்தற்குரிய கடைசித் தேதியை 1-2-60 ஆகப் பின்போடும்படி மாணவர் மன்றங்கள் பல கேட்டுள. இவர்களுடைய விருப்பப்படி முடிவு தேதியை 1-2-60 ஆக மாற்றியுள்ளோம். 25 ரூபா புத்தகப் பரிசிலைப் பெறுவதற்குப் போட்டியிடும் மாணவர் மன்றங்கள் 1-2-60 வரையும் மாணவர்களைச் சேர்த்தனுப்பலாம். ஒவ்வொரு மாணவருக்கும் ஒவ்வொரு சேர்வுப் படிவத்தை நிரப்பிக் கையொப்பமிட்டு அனுப்புதல் வேண்டும் என்பதை நினைவூட்டுகிறோம்.

(8-ம் பக்கம் பார்க்க)

## கடவுளுக்குக் கடிதம்

அன்புள்ள தெய்வமே,

எனக்கும் இந்த அரசியல் விவகாரங்களுக்கும் எட்டாம் பொருத்தம். ஆதலால் இனிமேல் செய்திகளைத் திரட்டி அனுப்புவதிலும் பார்க்க ஏதாவது கதை சொல்லலாம் என்று நினைக்கிறேன். கதை பெரிய தொடர் கதையாக இருக்கும். அதை அடுத்தடுத்துச் சொல்லி முடித்துவிடவோ எனக்குக் கற்பனை வராது. அவ்வப்பொழுது நல்ல 'மூட்' வருகிறபொழுது ஒவ்வொரு அத்தியாயங்களைத் திருவாய் மலர்ந்தருளுவேன். தொகுத்துப் படித்துவிட்டு பாராட்ட வேண்டியது உங்களுடைய முக்கிய கடமை.

ஆமாம், கதையோடு கதையாக ஒரு விஷயம் தெரியுமோ? நமது கோமதி வன்னியசிங்கம் கோப்பாய்த் தொகுதிக்கு அபேட்சகராக நிற்கும் பொழுது இன்னும் இரண்டு பேர் ஒற்றைக் காலில நிற்கிறார்கள். இவர்களுடைய விஷயமும் 'சிமோல்' விஷயம்தானா?

(8-ம் பக்கம் பார்க்க)

### மாணவர் சேர்வு-படிவம்

1. கல்லூரியின் பெயர்..........................................

2: தமிழ் மன்றத்தின் பெயர்..........................................

3. மாணவர் முழுப் பெயர்..........................................

4. வகுப்பு..............................வயது..............................

சொந்த ஊர்..........................................

நான் என்னுடைய கருமங்கள் யாவற்றையும் தமிழிலேயே செய்வேன் எனவும் என்னுடைய ஆசிரியரையும் சுற்றத்தாரையும் நண்பர்களையும் தமிழிலேயே அவர்களுடைய கருமங்களைச் செய்யுமாறு தூண்டுவேன் எனவும் உறுதிகூறுகிறேன். என்னைத் தமிழியக்கத் தொண்டராகச் சேர்க்குமாறு கேட்டுக்கொள்ளுகிறேன்.

.............................. ..............................
தமிழ் மன்றச் செயலாளர் கையொப்பம் மாணவர் கையொப்பம்

## மக்கள் குரல்

### நல்வாழ்த்து

அகில இலங்கை அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரிய சங்க பதவியாளர்களான கௌரவ காரியதரிசி திரு அ. தியாகராசாவும் உபதலைவர் திரு ஆ. க. சுப்பிரமணியமும் தாங்கள் செய்த பிழைகளைஉணர்ந்து, சங்க முன்னேற்றம் கருதி தாங்களாகவே இராஜினாமாச் செய்து /அங்கத்தவர்களை வாழவிட்டமைக்காக அங்கத்தவனென்ற முறையில், என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

—சி. பூபாலபிள்ளை
மட்டக்களப்பு.

### தலையங்கமும் கைத் துப்பாக்கியும்

தங்கள் ஆசிரியத் தலையங்கங்கள் அடிக்கடி காத்திரமும் நுட்பமுமான விஷயங்களில் துணிச்சலுடன் இறங்கி தாங்கள் ஆதரிக்கும் தலைவர்களைத் தானும் கண்டிக்க நேர்ந்தால கொஞ்சமும் தாட்சண்யமின்றி கண்டிக்கும் நெறிதவறு நேர்மையைப் பாராட்டாமலிருக்க முடியாது.

சென்ற முறை நடந்த தமிழரசுக் கட்சி மகாநாட்டில் தமிழ் நாட்டில் இராணுவம் திருத்தப்பட்டதையும் அதன் பேரில் தீர்மானம் நிறைவேற்றப்படாததையும் முறையாகக் கண்டித்தீர்கள் சென்றவாரம் "சு(ட்)டப்படவில்லை" என்ற தலையங்கத்தைக்கண்டு தடுமாறினேன். திரு பண்டாரநாயகா சுடப்பட்டார் வேறுயாரோ சுடப்படவில்லையாக்கும் அதற்குத்தான் "ட்" மிகுந்துவிட்டதோ என்ற சந்தேகத்துடன் படித்தேன். தமிழ்ப் பத்திரிகைகளில் இதற்கு முன் வாசியாத விஷயத்தையும் அது தகுந்த முறையாகக் கண்டிக்கப்பட்டதையும் கண்டு மகிழ்ச்சியடைகிறேன் அத் தலையங்கம் இலக்கண பாடத்தின் சுட்டெழுத்துக்களையும் ஞாபகப்படுத்தியது.

இவ்வாரம் (15-11-59) புத்த பிக்குகளின் திருகுதாளங்களையும் அருமையான கருத்துக்களுடன் கண்டித்தீர்கள். அதையும் நாம் மெச்சுகிறோம். ஆனால் யு. என். பி கட்சி மாத்திரம் பிக்குகளுக்கு அரசியலில் இடங் கொடுக்கவில்லையென்று பாராட்டினீர்கள் அது சேர் ஜோனைப் பாராட்ட வேண்டுமென்றாலும் பூரண பாராட்டுக்குரியதல்லவே!

இன்று புத்த பிக்குவின் கையிலிருந்து பண்டாரநாயக மந்திரிக்குக் குண்டு பாய்ச்சியதாகச் சொல்லப்படும் கைத்துப்பாக்கி பெறும் கௌரவம் அன்று யு. என். பி காலத்தில் தொழில்மந்திரிடாக்டர் கனீலுக்கு நீட்டிப் பின்வாங்கப்பட்ட புத்தபிக்குவின் கைத்துப்பாக்கிக்குக் கொடுக்கப்பட்ட கௌரவமாகத்தானிருக்க வேண்டுமல்லவா?

—டானியல் ஜேச்மன்னார்.

### மன்னிக்க முடியாத குற்றம்!

இவ்வாண்டு இலங்கை வானொலித் தமிழ்ப் பகுதியினர் திருகோணமலையிற் கலை விழாவை நடத்தினர் சங்கீத, நடன, நாடக, நிகழ்ச்சிகள் இடம்பெற்ற அவ் விழாவைத் திருகோணமலையில் நடத்தியதற்கு நன்றி தெரிவிக்கும் அதே நேரத்தில், அதை இட்டு முக்கிய குறை யொன்றையுந் தெரிவிக்க வேண்டியிருக்கிறது.

அவ்விழாவில் இடம்பெற்ற எல்லா நிகழ்ச்சிகளிலும், திருகோணமலைப் பட்டினத்தைச் சேர்ந்த பாடசாலைகளும், கலைச் சங்கங்களுமே பங்குபற்றின. பட்டினத்திற்கு வெளியேயுள்ள கொட்டியாபுரப்பற்று, தம்பலகாமப்பற்று, கட்டுக்குளம் பற்றுக் கிராமச்சங்கங்களிலிருந்து எந்த நிகழ்ச்சியுமே இடம்பெறவில்லை. இப்படி ஒரு விழா நடக்கப்போவதாகவே அயற் கிராமங்கட்குத் தெரியாது. இதனாற் திருகோணமலைப் பகுதியின் கிராமிய

(8-ம் பக்கம் பார்க்க)


## அன்பர்களே

நீங்கள் எவ்வளவு நல்ல உணவுகள் சாப்பிட்டாலும் உடல் மெலிந்துகொண்டே போகிறதா? பசியின்மை பல் ஈறு கரைதல், கை கால் நோவு, சோம்பல், சிறுநீருடன் சக்தி போகுதல் என்பன போன்ற வியாதிகளால் கஷ்டப்படுகிறீர்களா? அப்படியானால் மூன்று விதமான சிகிச்சைகள் தேவை.

உள் சுத்தி, புறச் சுத்தி, இரண சிகிச்சைகள் இச் சிகிச்சைகளுக்கு ஒரே வார்த்தையில் பதில்

**ஸ்பேமடோன் கொம்பவுண்ட்**

**( Spermatone Compound )**

ஒரு பிரபல ஜெர்மன் டாக்டரின் மருந்து சீட்டிலிருந்து தயார் செய்த ஒரு அற்புத சக்திவாய்ந்த மருந்தாகும்.

**8 அவுன்ஸ் பாட்டில் மருந்தின் விலை ரூ. 3/25**

**வி. பி. பி. தனி.**

விபரங்களுக்கும் வி. பி. பி. ஆடர்களுக்கும்,

டாக்டர்

**'மோடர்ன் கிலினிக்'**

**(MODERN CLINIC)**

**255, காலி ரோட், கொழும்பு-4.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நேருவுக்கு அண்ணா, ராஜாஜி ஆதரவு!

## நாடு காக்கும் விஷயத்தில் நிதானமாக நடப்பதாகப் பாராட்டு

### சீனா சதா தொல்லை கொடுப்பதாகக் குற்றச்சாட்டு

—சென்னை நவம்பர் 25

பாரதப் பிரதமர் நேருவுக்கு அண்ணாவின் தி. மு. கழகமும் ராஜாஜியின் சுதந்திரக் கட்சியும் பூரண ஆதரவு அளித்து வருகின்றன. இந்திய நாட்டைக் காப்பாற்றும் விஷயத்தில் பிரதமர் நேரு மிக்க நிதானமாகவே நடந்து வருவதாகவும் அவை பாராட்டுகின்றன. அதே வேளையில் சீனா வேண்டுமென்றே இந்தியாவுக்குச் சதா தொல்லை கொடுத்து வருவதாகவும் அவை சீனாமீது குற்றம் சாட்டுகின்றன.

பிரதமர் நேருவின் உள்நாட்டுக் கொள்கை சம்பந்தப்பட்ட மட்டில் தி. மு. கழகத்தினரும் சுதந்திரக் கட்சியினரும் நேருவின் வைரிகளாக இருப்பது நாடறிந்த விஷயம். இந்த இரு சாராரும் நாட்டுப் பாதுகாப்பு விஷயத்தில் நேரு எடுக்கும் நடவடிக்கைகளுக்குத் தம் பூரண ஒத்துழைப்பை அளிப்பதாக அறிவித்திருக்கிறார்கள்.

#### சம்பத் பாராட்டு

தி. மு. கழகத்தின் சார்பில் டில்லி பாராளுமன்றப் பிரதிநிதி திரு ஈ. வெ. கி. சம்பத் பத்திரிகை நிருபர்களுக்கு பேட்டி அளித்துப் பேசினார். திராவிடம் கோரும் தி. மு. கழகம் இந்தியா பிற நாடொன்றால் ஆக்கிரமிக்கப்படும்போது அதைப் பார்த்துக்கொண்டு சும்மா இருக்கப்போவதில்லை என்றும் நாட்டைக் காக்கத் தன்னாலான வகையில் உழைக்கும் என்றும் அவர் கூறினார். சீனாவின் மிரட்டலுக்கு இதுவரை பிரதமர் நேரு விட்டுக் கொடுக்காததையும் எதிர்முகாமான அமெரிக்காவோடு சேர்ந்து கொள்ளாததையும், நேரு தாமே சிந்தித்து நிதானமாகச் செயலாற்றுவதையும் அவர் பாராட்டினார்.

#### ராஜாஜி பாராட்டு

சுதந்திரக் கட்சித் தலைவர் ராஜாஜி மதுரையில் ஒரு கூட்டத்தில் பேசும்போது இந்திய சீனத் தகராறில் பிரதமர் நேரு நடந்துகொள்ளும் முறை பாராட்டத்தக்கது என்றார். நாட்டுக்கு அப்படியான நடைமுறைகளால் தான் பயன் உண்டு என்றும் ராஜாஜி மேலும்சொன்னார்.

இந்திய சீனத் தகராறில் சமீபத்தில் சமரசம் ஏற்படலாம் என்ற நிலைமை இல்லை. அதற்கான அடிப்படை அமைப்பதாகக் கூறிக்கொண்டு சீனத் தலைவர் திரு சூ-என்-லாய் எழுதும் கடிதங்களே பிரச்னையைமேலும் வலுப்படுத்துவனவாய் அமைந்திருப்பதாக அரசியல் வட்டாரங்கள் கூறுகின்றன.

#### டில்லி இயக்கம்

டில்லியில் ஒரு இயக்கம் தோன்றியிருக்கிறது. பாதுகாப்பு மந்திரி திரு வி. கே. கிருஷ்ணமேனன் மீது அவநம்பிக்கை கொண்டு விட்டது அந்த இயக்கம். அவரிடமிருந்து அந்த இலாகாவைப் பிரதமர் பிடுங்கி எடுத்துத் தாம் அதைத் தம் பொறுப்பில் வைத்துக் கொள்ள வேண்டும் என்று

**சென்னைக்கடிதம்**

சுதந்திரன் சென்னை நிருபர்
ஈழத்தரசன்

அந்த இயக்கம் பலமாக வற்புறுத்தி வருகிறது. எனினும் அவர்களின் சூட்டைப் பிரதமர் தணித்துவிடுவார் என்றே நம்பப்படுகிறது.

#### யுத்த முன் அறிவிப்பா?

பிரதமர் நேரு சமீபத்தில் பேசிய பேச்சு ஒன்று எல்லோர் மனதிலும் இன்னும் பசுமையாக இருந்து வருகிறது. எந்த நேரத்திலும் நாட்டின் பாதுகாப்புக்காக எந்த விதமான தியாகத்தையும் செய்ய நாட்டு மக்கள் அனைவரும் தயாராக இருக்க வேண்டும் என்று அவர் பேசினார். இந்திய-சீன யுத்தத்துக்கான முன்னறிவித்தலா இது? ஐயம் யாருக்கும் தீரவில்லை. விரைவில் தீரும் என்ற நம்பிக்கையும் இல்லை.

#### பம்பாய் மாகாணப்பிரிவு

குஜராத், மகாராஷ்டிரம் ஆகிய மொழிவாரி மாகாணங்கள் 1960 ஏப்ரல் முதல் நாள் அமைக்கப்படும் என பம்பாய் அரசாங்கத்துடன் நெருங்கிய வட்டாரங்கள் கூறுகின்றன.

பம்பாய், மாநிலத்தைப் பிரிப்பது பற்றி ஆராய அமைத்த 9 பேர் கொண்ட கமிட்டி டிச. 10-ல் கூடும் பொழுது இறுதி முடிவுகள் செய்யும். அதன் பேரில் யூனியன் மந்திரிசபை விவாதித்து பிரிப்பது சம்பந்தமான நகல் மசோதாவொன்றை பம்பாய் சட்டசபைக்கு அனுப்பி வைக்கும். பம்பாய் சட்டசபை அந்த நகல் மசோதாவை டிச. 30-ல் தொடங்கும் கூட்டத்தில் பரிசீலிக்கும் என்று தெரிகிறது. இவ் விவாதம் நான்கு நாட்கள் நடைபெறும். பின்னர் இறுதி முடிவுக்காக நகல்மசோதா, சபையின் கருத்துக்களுடன் பார்லிமெண்டுக்கு அனுப்பிவைக்கப்படும்.

## இந்தியருக்கு பர்மாவிலும் சோதனை

இலங்கையில் போல பர்மாவிலும் இந்தியருக்கு சோதனைக் காலம் ஆரம்பமாகிவிட்டது.

பீகாரிலிருந்து பர்மா சென்ற 12,000 இந்தியர்கள் பர்மாவின்குடியேற்றச்சட்ட விதிகளை அனுசரிக்கவில்லை என்று கூறி அவர்களை யெல்லாம் கைது செய்யப் பர்மா அரசாங்கம் ஆலோசித்து வருவதாகத் தெரிகிறது.

பர்மாக் குடியுரிமை கோரி மனுச்செய்ய இவர்கள் தவறிவிட்டார்கள் என்றும், இவர்கள்,மேலும் தொடர்ந்து பர்மாவில் இருக்க விரும்பினால் ஆண்டு தோறும் ரூபா 50/ செலுத்தி 'அந்நியர்' என்ற சான்றிதழ்பெற்றுக்கொள்ள வேண்டும் என்றும் கூறப்படுகிறது.


## சுதந்திரன் சந்தா விபரம்

வாரந் தோறும் சுதந்திரனைத் தவறாமல் பெற்றுக்கொள்ள நேயர்களுக்கு ஒரே ஒரு வழி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்வதுதான்.

வருடச் சந்தா ரூபா. 10-00

(தபாற் செலவு உட்பட)

ஒரு வருடத்துக்குக் குறைந்த சந்தா ஏற்றுக் கொள்ளப்படுவதில்லை.

சர்குலேஷன் மனேஜர்
சுதந்திரன்.

தபால் பெட்டி 1183,
கொழும்பு.



தலை முடியை சிவுவதல்ல உங்கள் பிரச்னை!

நீங்கள் விரும்புவதுபோல்

தலை முடியைச் சிவுவது எப்படி என்பதுதான்!

**நேத்திர லோக**

உங்கள் பிரச்னையை தீர்க்கிறது.

விசேஷ கலவைப் பொருட்கள் சேர்க்கப்பட்ட தனித் தயாரிப்பான நேத்திரலோக தைலம் தலையைக் குளிரச் செய்கிறது. உச்சந் தலையை சுத்தப்படுத்துகிறது. சொடுகு ஏற்படாமல் தடுக்கிறது. நீண்ட, அடர்ந்த, சுருண்ட, ஆரோக்கியமான கேசத்தை வளர்க்கிறது.

**நேத்திரலோக தைலம்**

★ தலை மயிர் நரைப்பதைத் தடுக்கிறது.
★ கண் பார்வையை துலக்குகிறது.
★ தலை சம்பந்தப்பட்ட எல்லா வியாதிகளையும்தடுக்கிறது.
★ கண் சம்பந்தப்பட்ட வியாதிகளைப் போக்குகிறது.
★ பீனிசம் ★ தலை எரிவு ★ தடிமல்
★ குளிர் ★ நரம்புத்தளர்ச்சி ★ தலைவலி
★ பல், காது சம்பந்தப்பட்ட சகல வியாதிகளையும் தவிர்க்கிறது.

நேத்திர லோகத் தைலம் இலங்கையடங்கிலும், அல்லது நேரில் எம்மிடமும் கிடைக்கும்.

விலை! 6 அவுன்ஸ் போத்தல் ரூபா 3/- தபாற் செலவு 50 சதம்.

**டபிள்யு. கே. ஜினதாஸ,**
ஆயுர்வேத வைத்தியர்
161, நோறிஸ்றோட், புறக்கோட்டை
கொழும்பு


**அறிமுகப்படுத்துகிறோம்**



## அடுத்தவர் புகழுக்கு தாம் பேனா நாட்டிய நாகராசன்

தாம் பாடுபட்டு எழுதிப் பிறருக்குப் புகழ் தேடிக்கொடுக்கும் எழுத்தாளர்கள் உண்டா என்ற சந்தேகம் யாருக்கும் வேண்டியதில்லை. அந்தப் பெருமைக்கு உரிய ஒருவரைத் தான்இங்கு அறிமுகப்படுத்தி வைக்கிறோம்.

சென்ற ஆண்டில் நிறுத்தப்பட்டுவிட்ட 'ஈழகேசரி' தன் கடைசிக் காலத்தில் வளர்த்துத் தந்த எழுத்தாளர்களுள் குறிப்பிடக் கூடியவர் திரு. இ நாகராஜன்.

1927-ல் பிறந்த திரு. நாகராஜனின் சொந்த ஊர் யாழ்ப்பாணம். பெற்றோர்: இராமு தம்பதிகள்.

சிறுகதை-கவிதைத் துறைகளில் ஆர்வம் மிக்க இவர் பன்னிரண்டு ஆண்டுகளுக்கு முன்னரே எழுத்துத் துறையில் கால் வைத்து விட்டார். இவரது கன்னிப் படையல்-ஒரு கவிதை. அது சுதந்திரனில்தான் பிரசுரமாகியது.

"என்னை ஒரு எழுத்தாளனாக முதன் முதலில் பிரகடனப் படுத்தியது சுதந்திரன் தான். பிறகு, என் ஆர்வத்தைத் தூண்டி, மொழி வளத்தை நல்கி, இலக்கிய உலகில் தலை நிமிரச் செய்தது 'ஈழகேசரி'" என நன்றி உணர்வோடு குறிப்பிடும் திரு. நாகராஜன் 60-க்கு மேற்பட்ட கவிதைகள்; 40 சிறு கதைகள்; சுமார் பதினைந்து கட்டுரைகள்; சில நாடகங்கள் ஆகியவற்றை இதுவரை எழுதியுள்ளார்.

உதயசூரியனின் குழுமையும், செழுமையும் நிறைந்த கவர்ச்சியை, மிடுக்கை, இவரது கவிதை நடையில் காணலாம். ஆனால் கொடுமைகளைக் கண்டிப்பதில் கோடைக் கதிரவனாக மாறிவிடுகின்றது இவரது பேனா.

கருத்தாழமும், இலக்கண அமைதியும், சந்தமும் அமைந்தவைகளாக, இவரது கவிதைகள் சிறந்து விளங்குவதற்கு ஒரு காரணம்,-எட்டு ஆண்டுகள் மலை நாட்டுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகவும், சில ஆண்டுகள் 'ஈழகேசரி' யில் உதவியாசிரியராகவும் பணி புரிந்ததால் இவருக்கு ஏற்பட்ட—பழைய இலக்கியங்களின் பரிச்சம் என்று சொல்லலாம்.

தமிழகத்து இதழ்களிலும் திரு. நாகராஜனின் படைப்புகளிற் சில வெளியாகியுள்ளன. 'உமா' நடாத்திய அட்டைப் படப் போட்டியில் இருவருக்கு முதலிடம் கிடைத்தது. 'வைராக்கியம்' என்ற இவரது சிறந்த சிறுகதை யொன்றை 'கைத்தறி' பத்திரிகை மறு பிரசுரம் செய்துள்ளது.

'சிலம்பு சிரித்தது!' கவிதை நாடகத்தையும், 'புத்தொளி' என்ற சிறு காவியத்தையும், இப்போது எழுதி முடித்துள்ளார்; அவை இன்னும் அச் சேற்றப்படவில்லை.

"ஈழ", சிலம்பன், கூட்டுக் கவிராயன், கவியரசன், என்பன இவரது புனை பெயர்கள். சிறுகதைத் துறையில் இவரது ஆதர்ச வழி காட்டிகள்: லா. ச. ராமாமிர்தம், தி. ஜானகிராமன், எஸ். பொன்னுத்துரை.

இலக்கிய உலகில் நூற்றுக்கும் மேற்பட்ட படைப்புக்களை சிருஷ்டித்துவிட்ட 'பிரம்மா'வாகத் திகழும் திரு. நாகராஜன் "நான் இன்னும் சரியான படைப்பைத் தரவில்லை என்ற தவிப்பில முயன்று கொண்டிருக்கிறேன்" எனப் பணிவாகக் கூறும் போது, அவரது தற்பெருமையற்ற சுபாவம்-அடக்கம் தெளிவாகத் தெரிகின்றது.

இத்தனை காலம் எழுத்துத் துறையில் ஈடுபட்டிருந்தும் அவருக்கு உரிய பிரபலம் கிடைக்காமற் போனது துரதிர்ஷ்டம். பத்திரிகாலயம் ஒன்றில் பணி புரிந்ததால் அடிக்கடி புனை பெயர்களை மாற்றிக் கொண்டு எழுதியதாலும்,பெயர் இல்லாமலும் கூட எழுதியதாலும், தாம் எழுதியவற்றை நெருங்கியவர் உரிமை கொண்டாடித் தம் பெயரில் வெளியிடவும் வேறு வகையில் கைச் சரக்காக உபயோகிக்கவும் அனுமதித்ததாலும் வந்தது வினை. அந்தப் படைப்புகள் போற்றப்பட்டாலும், அவற்றை வெளியிட்ட பத்திரிகாசிரியர் பாராட்டப்பட்டாலும் எழுதிய நாகராஜன் எப்பொழுதும் மறைந்தே இருந்தார்.

எழுதுவதையே தற்சமயம் தமது முழு நேரத் தொழிலாகக் கொண்டுள்ள திரு. நாகராஜன் மூன்று குழந்தைகளின் தகப்பனார். மனைவியார்: திருவாட்டி தவமணி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொழிற் சங்க இயக்கம்

## பிரான்சு தேசம்

சோ. வன்னியசிங்கம் B. Com., M Sc. (Econ) (Lond).
பொருளியல் விரிவுரையாளர்:
இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி,
அக்குவைனஸ் பல்கலைக் கழக கல்லூரி.

ஐரோப்பிய சமுதாயத்தில் சுதந்திரக் கிளர்ச்சியையும் ஜனநாயகப் போக்கையும் முதன் முதலாக வலுப்பெறவும் வேரூன்றவும் செய்தது 1789ல் நிகழ்ந்த சரித்திரப்புகழ்பெற்ற பிரஞ்சுப் புரட்சியேயாகும். தனிமனித சுதந்திரத்தின் தகைமையையும் ஜனநாயக சமூகத்தின் சிறிய பண்புகளையும் புரட்சிமூலமாக அகில உலகிற்கும் பிரகடனம் செய்தவர்கள் பிரஞ்சு மக்கள். எனினும் புரட்சி மனோபான்மை உச்சநிலையில் பரவியிருந்த சகாப்தத்திலேயே (1791ல்) இயற்றப்பெற்ற ஒரு சட்டமூலமாக பிரான்சுதேசத்தில் முதலாளிகளாயினும் சரி, தொழிலாளிகளாயினும் சரி ஒருமித்துத் திரண்டு இயங்குவது சட்டவிரோதமான செயல் என்று விதிக்கப்பெற்றது.

### சட்ட நிருபணம் செய்தவர்கள்

புரட்சிக்கு முன்னர் பிரான்சு தேசத்தில் நிலவி வந்த கொடூரமும் வகுப்பாதிக்கமும் நிறைந்த முடியாட்சி எத்தகைய தொழிலாளர் குழுக்களையும் சட்டவிரோதமானதென்று விதித்தமை இயல்பான செயலே. ஆனல் புரட்சிக்கால அரசாங்கமும் தொழிலாளர் கூடி இயங்குவதைத் தடுத்தமை மேற்பரப்பில் நோக்குங்கால் வியப்பாகவே தோன்றும். உண்மையில் வியப்படைவதற்கு நியாயம் இல்லை. புரட்சிககாலத்தில் சட்டநிரூபணம் செய்தவர்கள் தனி மனித சுதந்திரத்திற்கு விலங்கு பூட்டப்பட்டிருந்த முடியாட்சியின்கீழ் தத்தளித்தவர்கள்.

### வலுப்பெற்ற அபிப்பிராயம்

அவர்கள் மனதில் தனி மனித சுதந்திரமே சகல ஊழல்கட்கும் விமோசனம் அளிக்கும் என்ற அபிப்பிராயம் அபோகமாக ஊறிப் போயிருந்தது. ஜனநாயக ஆட்சியை அவர்கள் நடைமுறையில் அனுபவித்திராதவர்கள்; தர்க்கரீதியாக அதைப்பற்றி வியாக்கியானம் செய்ததுதான் அவர்கட்கு எட்டிய ஜனநாயக அரசியல் ஞானம். எனவே தனி மனித சுதந்திரத்தை அளவுமீறி உச்சரித்துவிட்டனர். தனி மனிதர் பலர் கூடி இயங்குவது தனி மனித சுதந்திரத்திற்கு முரண்பாடானதென்ற ஒரு அபிப்பிராயம் அவர்களைப் பீடித்திருந்தது. மேலும் 1789ல் நிகழ்ந்தபுரட்சிக்குப்பின்னர் தொழிலாளர் கூட்டங்களால் அநேக ஒழுங்கீனங்களும் தொந்தரவுகளும் நிகழ்ந்தமையால் தொழிலாளர் கூட்டு இயக்கங்களை சட்ட விரோதமானவையென்றுவிதித்தல் சாதாரணமானவிளைவே.

### கிறிமினல் குற்றம்

1791ல் இயற்றப்பெற்ற கூட்டத் தடைச்சட்டத்தின் தன்மையை இதர சட்டங்களும் பலம்பெறச் செய்தன. நெப்போலியன் ஆட்சியின் கீழ் திரட்டித் தயாரிக்கப்பெற்ற சிவில் சட்டத் தொகுப்பும் முதலாளிக்கும் தொழிலாளிகட்கு மிடையே வேதன வகையைப்பற்றி கூட்டு ஒப்பந்தம் நிறைவேற்றவொட்டாது தடை செய்தது. மேலும் கிறிமினல் சட்டத் தொகுப்பும் வேலை நிறுத்தங்களையும் சக தொழிலாளர் வேலைக்குப் போகாது வசீகரித்தலையும் தண்டனைக்குள்ளான குற்றமாக விதித்தது.

### சட்ட நடவடிக்கை

தொழிலாளர் கூடி இயங்குதல் சட்டவிரோதமானதென்று சட்ட நிருபண மன்றத்தில் விதித்தல் சுலபமான செயல். ஆனல் அச்சட்டத்தை நடைமுறையில் பரிபாலித்தல் இலகுவான கருமம் அன்று. எனவே, சட்டந் தடையாயிருந்த பொழுதும் அநேக தொழிலாளர் சங்கங்கள் இயங்கியே வந்தன. சட்டந் தடையாயிருந்ததன் விளைவு, காலத்திற்கு காலம் அநேக தொழிலாளர்களை சட்டவிரோதமான செயலைச் செய்தனர் என்று சிறையனுப்ப வசதி கிடைத்ததேயாகும். 1848ல் நிகழ்ந்த புரட்சி எத்தனமும் அதன் தோல்வியும் தொழிலாளர் இயக்கங்கள்மேல் சடுமையான நடவடிக்கையை அரசாங்கம் எடுக்கக்காலாக இருந்தது.

### சுதந்திர அந்தஸ்து

தொழிலாளர் கூட்டு இயக்கங்களும் வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளும் சட்டவிரோதமானவை என்ற நிலைமை 1864ம் ஆண்டுவரை நிலவி வந்தது. அவ்வாண்டில் இயற்றப்பெற்ற ஒரு சட்டத்தின் பிரகாரம் வேலைநிறுத்தம் கூடி இயங்குதல் முதலாய செயல்கட்கு விதிக்கப்பட்டிருந்த தடையும் தண்டனைகளும் ரத்துச் செய்யப்பட்டன. எனினும் நிரந்தரமான சங்கமாக இயங்குவது சட்டவிரோதமான செயலென்றே பெறப்பட்டது. ஆயினும் 1868ல் நிரந்தா சங்கமாக தொழிலாளர் இயங்குவதை அரசாங்கம் தடை செய்யாது என்று அறிவிக்கப்பட்டது. முடிவில் 1884ல் இயற்றப்பட்ட சங்கங்களைப்பற்றிய சட்டம்தான் தொழிற் சங்கங்கட்கு பூரண சுதந்திர அந்தஸ்தைக் கொடுத்தது.

[illegible]
[illegible]
அந்தஸ்தின் கொடூரமும் சுதந்திரம் பெறுவதில் ஏற்பட்ட காலத்தாழ்ச்சியும் பிரஞ்சுத் தொழிலாளர்களிடையே புரட்சி மனோபான்மையையும் தீவிர நடவடிக்கைகளில் பிரியத்தையும் பொறுமையற்ற மனோநிலையையும் வளர்ப்பதற்கு உதவியாக அமைந்தன.

### புரட்சி மனப்பான்மை

பிரிட்டிஷ் தொழிலாளரைப்போலல்லாது பிரஞ்சுத் தொழிலாளர் முதலாளியையும் அரசாங்கத்தையும் இரண்டறக்கலந்த ஒரே ஆதிக்கம் என்றே அபிப்பிராயப்பட்டனர். அரசாங்கத்துடன் வாதாடி தம் நயங்களைப் பேணவோ முன்னேறச் செய்யவோ முடியும் என்று எண்ணவில்லை. அரசாங்கத்தைக் கவிழ்த்துவிட்டு புரட்சி முறையான புதிய சமுதாய அமைப்பை வகுப்பதால்தான் தமக்கு விமோசனம் கிடைக்கும் என்ற எண்ணம் அவர்களிடையே பெரிதும் வலுத்து நின்றது.

எனவே தொழில்ரீதியாக சங்கம் அமைப்பதிலோ தனித் தனி முதலாளியுடன் பேரம் பேசுவதிலோ அவ்வாறு வேதன வரிசைகளைச் சீர்ப்படுத்துவதிலோ அதிக சவனம் செலுத்தப்படவில்லை. "பூரண வெற்றி; இல்லையேல் ஒன்றும் வேண்டாம்" என்பது அவர்கள் இலட்சியமாகத் தொனித்தது. நாட்டுப் பொருளாதாரம் முற்றையும் பாதிக்கும் பொது வேலைநிறுத்தத்திற்கு வழிவகை தயாரிப்பதுதான குறிக்கோள் என்று அநேகர் கருதினர். அத்தகையோர் வேலைநிறுத்தமும் பலாத்காரமும் ஒருங்கமையும் சாதனங்களேயென்று எண்ணினர்.

### குழப்ப நிலைமை

இந்த மனோபான்மை நிலவுவதால் அரசியல் கட்சிகள் தொழிற் சங்க உலகில் ஆதிக்கம் நடாத்துதல் இயல்பே. மார்க்ஸியவாதிகள் தொழிலாள இயக்கங்களை இலகுவாக ஆக்கிரமித்தனர். வேலைநிறுத்தங்கள் வேலைத்தலங்களிலும் அண்மையிலும் நிகழும் சிறு யுத்தங்களாகக் காட்சியளிப்பது இயல்பாகியிருந்தது. அரசாங்கம் சேனைகளை வேலை நிறுத்தம் நடக்கும் இடங்களில் கொண்டு சென்று நிறுத்துவதும் சிறு சிறு யுத்தங்கள் நிகழ்வதும் வீதிகள் பொதுப் பாதைகள் அடைக்கப்படுவதும் பொதுமக்கள் தம் இல்லங்களைப் பூட்டி வெளியேறுது வசிப்பதும் அநேக சந்தாப்பங்களில் சாதாரண நிகழ்ச்சிகளாக அமைந்தன.

இந்தச் சூழலில் 1909ல் அரசாங்க ஊழியர் வேலை நிறுத்தம் செய்யும் உரித்தற்றவர் என்று சட்டமியற்றப்பட்டது.

### வெற்றி இல்லை

எவ்வளவு தீவிர நோக்கும் புரட்சி மனோபான்மையும் பிரஞ்சுத் தொழிலாளர் உலகத்தில் பலம்பெற்றிருந்தும் [illegible] புரட்சிப் பாதையில் கணிசமான அளவு சித்தியெய்த முடியவில்லை. அதற்குப் பல காரணங்கள் உண்டு. தொழிற் சங்க இயக்கம் பெருவாரி அளவில் உற்பத்தி செய்யும் யந்திர பிரயோகம் மலிந்த ஆலைத் தொழில் பொருளாதாரத்தில் தான் பலமடைய முடியும். பிரான்சு தேசம் கிருஷிகத துறை உற்பத்தி பலிதமான நாடு. நகர வாழ்க்கை முறையும் பிரான்சில் முன்னேறவில்லை. நாட்டு வாழ்க்கையே பெருமளவில் செறிந்திருந்தது. பண்ணைத் தொழிலாளர் பரந்த தன்மையில் சிதறியிருப்பவர். ஓரிடத்தில் திரண்டு தொழிலாற்றி வாழ்பவரல்லர்.

### சந்தாப் பணம் செலுத்த வில்லை

நிலத்துடன் தொழிலாற்றி வேளாண்மையைப் போற்றி வாழும் மக்களிடையே புரட்சி இயக்கங்கள் பலம் பெறுவதில்லை. பண்ணைத் தொழிலாளர் பெரும்பான்மையினர்: நகரத் தொழிலாளர் குறைந்த எண்ணிக்கையினர்: எனவே மார்க்ஸியவாதம் மலிந்திருந்தும் புரட்சியியக்கங்கள் பலிதம் எய்தவில்லை.

புரட்சி நோக்கமுடைய தொழிலாளர்கள் நிதானமாகச சந்தாப் பணம் செலுத்தி நெடு நோக்குடன் அமைதியாகக் கருமமாற்றி வெற்றியெய்துவோம் என்ற எண்ணமும் பொறுமையும் இல்லாதவர். ஆகவே சங்க அமைப்புகளைக் கண்காணிக்கவோ கட்டுக்கோப்பை பலப்படுத்தவோ அவர்கள் எண்ணவல்லை. ஆவேசச் சொற்கள்

(9-ம் பக்கம் பார்க்க)

## கலைச் செல்வி ஆண்டு விழா

"பல இன்னல்களுக்கிடையேயும ஓராண்டுக் காலமாக ஓர் இலக்கியப் பத்திரிகையைத் தொடர்ந்து நடத்தி ஓர் ஆண்டு மலரையும் சிறப்பாக வெளியிட்ட 'கலைச் செல்வி' நிர்வாகிகள் பாராட்டுதலுக்கு உரியவர்கள்" என்று முதலியார் சின்னத்தம்பி கூறினர்.

'கலைச் செல்வி' முதலாவது ஆண்டு நிறைவு விழாவும், ஆண்டு மலர் வெளியீட்டு விழாவும் 8-11-59-ல் திருநெல்வேலி இந்து வாலிபர் சங்க மண்டபத்தில் நடைபெற்றபோது அந்த வைபவத்துக்குத் தலைமை தாங்கிப் பேசுகையிலேயே முதலியார் சின்னத்தம்பி மேற்கண்டவாறு கூறினர்.

திரு க. ந.வேலன் பேசுகையில் தமிழ் மக்களுக்குதமிழ்ப் பற்று இன்னும் வேண்டும் என்றும் அவர்கள் தங்கள் பிள்ளைகளைத் தமிழ் இலக்கியங்களையும் நல்ல தமிழ்ப்பத்திரிகைகள் சஞ்சிகைகளைப் படிக்கும்படி தூண்ட வேண்டும் என்றும கேட்டுக்கொண்டார்.

திரு இராஜ அரியரத்தினம், வித்துவான் க. ஆறுமுகம் ஆகியோரும் பேசினர்கள். திரு சு. இராசநாயகம் வரவேற்புரை நிகழ்த்தினர். 'கலைச் செல்வ' ஆசிரியர் திரு சி. சரவணபவன்(சிற்பி) நன்றியுரை கூறினர்.

கவிதைப் போட்டியில் முதற் பரிசு பெற்ற கவிஞர் மயிலன் அவர்களுக்கு தங்கப் பதக்கம் வழங்கப்பட்டது. பாரதிப் பேச்சுப் போட்டியில் மூன்று பிரிவுகளிலும் முதற் பரிசு தங்கப் பதக்கம் பெற்ற மாணவர்களும் பேசினர்கள்.

கவிதைப் போட்டி, நாவலர் கட்டுரைப் போட்டி, அறிவரங்கப் போட்டி ஆகியவற்றில் பரிசு பேற்றவர்களுக்கு யாழ்ப்பாண நகர மேயர் திரு அல்பிரட் துரையப்பா பரிசுகளை வழங்கினர்.

விழாவின் இறுதியில் திருமதி நீலா சத்தியலிங்கம் தமது குழுவினருடன் நடன விருந்தளித்தார்.



இலங்கையில் எல்லாப் பகுதிகளிலும்
4 அவுன்ஸ் மற்றும் 16 அவுன்ஸ் சைஸ்களில் கிடைக்கிறது.
சோல் ஏஜண்டுகள்:—
சிர்நூல் கதீர் அன் கம்பெனி,
43, இரண்டாம்குறுக்குத்தெரு, கொழும்பு 11.
டெலிபோன்: 6009 & 3710.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோப்பாய் தொகுதி இடைத் தேர்தல்

நடராசா, ஒரு ஆசிரியர். கோப்பாய் தொகுதியில் வசிப்பவர். சுப்பர், அயற் கிராமத்தில் இருப்பவர்; படித்தறியாதவராக இருப்பினும் உலக விஷயங்களில் நாட்டமுள்ளவர். ஓய்வு நேரங்களில் சுப்பர் நடராசா ஆசிரியடரிம் இடையிடையே வந்து புதினங்களை அறிந்து செல்பவர். நடராசா ஆசிரியரிடம் வந்திருந்த சுப்பர், அவருடன் சம்பாஷிக்கிருர்.

நடராசா: என்ன சுப்பண்ணை; கன நாளாய் இந்தப் பக்கம் காணவில்லை.

சுப்பர்: தெரியாதே தம்பி. மழை தண்ணி, மாடு கண்டு என்று இருந்திட்டன். இந்த மழை ஏதோ உலக அழிவுக்குத்தான் வந்திருக்குப் போல இருக்கு. வயலெல்லாம் ஒரே வெள்ளக்காடாயிருக்கு. இந்த முறை வெட்டு வெள்ளாமை நாசமாய் போச்சு. சரி தம்பி, ஏதோ படைச்சவன் படியளப்பன். பேப்பர் என்ன சொல்லுது. கன நாளாய் ஒண்டும் தெரியவில்லை. இந்தியாவுக்கும் சீனுவுக்கும் ஏதோ சண்டை வரப்போகுதாம். மெய்தானே?

நடராசா: அது பெரிய அக்கிரமம். கம்யூனிஸ்ட் சீனர் இந்தியாவின் எல்லையை மீறி 12 மைல் உள்ளே வந்திருக்கிருர்கள். இந்திய காவல் படைகளில் 10 பேரைப் பிடித்து வைத்திருக்கிருர்கள். மேலும் 9பது பேர் சுட்டுத் தள்ளப்பட்டிருக்கிருர்கள். பஞ்சசீலம் என்றதெல்லாம் பஞ்சாய் பறந்து போச்சு. புலி பசுத்தோல் போர்த்திருந்து வாழ்வது எத்தனை நாளைக்கு?

சுப்பர்: இந்தக் கொம்யூனிஸ்டுகள் வெட்டுவதும் சுடுவதுமாகத்தான் நெடுக கதைக்கிருங்கள். முந்தி ஒருக்கா ருசியாவில் பெரிய தலைவர்களை எல்லாம் கேள்வி மறுமொழியில்லாமல் துடிக்கத் துடிக்க சுட்டுத் தள்ளினுங்களாம். அவங்களுக்கேதோ அழிவுகாலம் தான் தம்பி அதிருக்கட்டும். தம்பி வன்னியசிங்கம் செத்தாப்போலை ஏதோ புது எலெக்சன் எண்டு கதைச்சினம் அது என்ன மாதிரி? கொஞ்சம் சொல்லு தம்பி அதைப்பற்றி.

நடராசா: வன்னியசிங்கத்தின் இடத்துக்கு ஒருவர் தேவையல்லே. அதுக்குத்தான் ஒரு இடைத் தேர்தல் நடக்கப்போகுது. பன்னிரண்டாம் தேதி காசு கட்டியாச்சு. மூன்று பேர் கேடகினம்.

சுப்பர்: ஆர் தம்பி அவையள். வன்னியசிங்கத்தின்ரை பெண்சாதியும் கேட்கிறதெண்டு பேசிச்சினம்.

நடராசா: ஓம் அண்ணை வன்னியசிங்கத்தின் பெண்சாதியும், எஸ். பி. நடராசா என்ற ஒரு சட்டம்பியும், சிவசுப்பிரமணியம் என்ற பிரக்கிராசியும்தான் போட்டி போடுகினம்.

சுப்பர்: இவை எந்தக் கட்சியிலை கேட்கினம்; மனுஷி தமிழரசு. மற்றவை?

நடராசா: நடராசா என்பவர் கொம்யூனிஸ்டு கட்சி. சிவசுப்பிரமணியம் என்பவர் சுயேச்சை. ஆனல் இவரோடை காசுகட்டப்போனவையளில் பலர் தமிழ் காங்கிரஸ் முறிந்த தூண்கள்.

சுப்பர்: அப்ப சுப்பிரமணியம் தமிழ் காங்கிரசு என்று சொல்லவெட்கப்படுகுதோ? அது சரி சமசமாசக் கட்சியும் போட்டி போடப்போவதாக பத்திரிகைகளில் கிடந்ததாம். அவை ஏன் ஒதுங்கி விட்டினம்?

நடராசா: அண்ணை; எல்லாரும் நான், நீ, என்று முன்னுக்கு வந்தால் போதுமே? பொதுசனங்களின் ஆதரவு மெல்லோ வேணும். போன எலெக்சனில் தமிழ் காங்கிரஸ் செத்துவிட்டது. அதன் வாடை ஒன்ருேடு நிக்குது. அவரும் இப்போ பாராளுமன்றம் போவதில்லை. வழக்கும் கணக்குமாக பணம் திரட்டுவதில்தான் இப்போ கண்ணேட்டம். போதாக்குறைக்கு இப்போது தூர கிழக்குக்கல்லே கப்பல் ஏறி விட்டார். சமசமாசிகளும் தமிழ் மக்களைத் தம்முடைய வலையில் சிக்க வைக்க தெண்டிக்கினம். இவர்களைப் போலத்தான் யூ. என். பியும் ஆரம்பத்தில் தமிழ் பிரதிநிதிகளை பதவி வலையில் சிக்க வைத்துப் பின்னர் ஓடஓடக் கலைத்தது; உதைத்துத் தள்ளியது. பட்டால் அறிவான் சண்டாளன். தமிழ் மக்கள் இப்போ தம்மைத் தாம் உணர்ந்துவிட்டார்கள். தன் கைதான் தனக்குதவி என்பது இப்போ மெய்யென அவர்கள் உணர்ந்து விட்டார்கள். இதை சமசமாசிகள் தெரிந்தது வைத்திருக்கிருர்கள்.

சுப்பர்: போன கலகத்துக்கெல்லாம் தமிழ் மக்கள் வடக்குக்கும் கிழக்குக்குந்தானே கப்பல் கப்பலாக வந்து சேர்ந்தவையள். தமிழர் வந்து சேர ஒரு இடமில்லாவிட்டால் அவ்வளவு பேரும் சாம்பல்தான்.

நடராசா: அதை ஏனண்ணை இப்ப பேசுறியள். அந்த அக்கிரம காலத்தில் [illegible]ந்தஇடதுசாரிகள் மூச்சுக்கூட விடவில்லை. தேர்தல் நெருங்க நெருங்க புது புது வாக்குறுதிகளைச் சொல்லுகிருர்கள். சொல்வது யாருக்கும் எளிது தானே.

சுப்பர்—நடராசா

சம்பாஷணை

எழுதியவர்: புத்தொளி

சுப்பர்: அப்ப இந்த மூண்டு பேரும் எலெக்சனுக்கு நிக்கினம். இன்னும் ஒருதரும் எங்கடை வீட்டுப் பக்கம் வரவில்லை. அவை இரண்டு பேரும் வரட்டும், அந்தப் பிள்ளையோடு போட்டி போட்டு மண்கவ்வி ஏன் ஆண்களின் மானத்தை வாங்கிறியள் எண்டு கேக்கிறன்.

நடராசா: அரசாங்கம் இண்டைக்கோ நாளைக்கோ என்று தவிக்குது. இழுத்துப் பறித்து வாழ்ந்தாலும் இன்னும் பதினேழு மாசத்துக்குத்தான். பிறகு புதுத் தேர்தல்.

சுப்பர்: பதினேழு மாதத்துக்குத்தானே இந்தப் போட்டி! எத்தனை ஆயிரம் செலவழியப் போகுது! வன்னியசிங்கம் எங்களுக்காகப் பாடுபட்டு, அடிபட்டு, இரத்தம் சிந்தி, மறியல் இருந்து, நோய்வாய்ப்பட்டு அடைந்த துன்பங்களை இவங்கள் மறந்துதானே போட்டி போடுருங்கள். ஏதோ போதாத காலம்தான்.

நடராசா: அண்ணை, வன்னியசிங்கம் எங்களுக்காகப் பாடுபட்டதை தமிழ் சமூகம் ஒருபோதும் மறக்கமாட்டாது அதுதானே அவர் மனைவியாரை பாராளுமன்றம் அனுப்ப எல்லாரும் பாடுபடுகினம். அவவின் கட்டுக்காசையும் பொதுசனங்கள்தானே சேர்த்துக்கட்டினவை. இனி வரும் எலெக்சனுகளுக்கு அதிக செலவில்லை அண்ணை. முந்தியைப்போல காருக்கென்றும், கொடிக்கென்றும், நோட்டீசுக்கென்றும் அதிகம் செலவழிக்க வேண்டியதில்லை. இப்ப எல்லாம் புதுப் புதுச் சட்டங்கள். எவரையும் காரில் ஏற்றக்கூடாது. நடந்துபோய்த்தான் வோட்டுப் போட வேணும். நோட்டீசுகளையும் தபாலில் அனுப்ப முத்திரைச் செலவில்லை.

சுப்பர்:- அதுதான் இவை எல்லாம் கேட்கினம். இந்த [illegible] வின்ரை வாக்குக் கிடைக்குமோ?

நடராசா:- அதெல்லாம் அந்தக் காலம். ஏழைச் சனங்களை ஏமாற்றும் தந்திரம் இனிப் பலிக்காது. தமிழரசுக் கட்சி சொற்ப காலத்தில் அதிசயிக்கத்தக்க சாதனை செய்திருக்கிறது. நல்லையாவை செனட்டுக்கு அனுப்பி தாழ்த்தப்பட்ட மக்களின் நல்வாழ்வுக்குப் பாடுபடுவதை செயலில் காட்டிவிட்டது. என்னுடைய வீட்டில் போன எலெக்சனில் நாளுெரு கட்சி, என்ரை பெண்சாதி ஒரு கட்சி. இந்த முறை என்ரை பெண்சாதி பிள்ளைகள் கோமதி வன்னியசிங்கத்தை பாராளுமன்றம் அனுப்பிப்போட்டுத்தான் மறுவேலை பார்ப்பதாக ஏதோபெரியமுஸ்தீப்புக்கள். வன்னியசிங்கம் உண்மையாகத் தமிழ் மக்களுக்காகப் பாடுபட்டார் என்பதைச் சிங்களவர் உணர இது ஒரு நல்ல சந்தர்ப்பம். அத்தோடு இனிச் சிங்களவரிடம் பணிந்து வாழ தமிழ் மக்கள் தயாராக இல்லை. சமஷ்டி ஆட்சிதான் சிறந்த ஆட்சி என்பதையும் அவர்களுக்கு இத் தேர்தல் உணர்த்த வேண்டும்.

சுப்பர்:- கொம்யுனிஸ்டுகள் ஊருக்கை இறங்குவினமோ?

நடராசா:- கொம்யூனிஸ்டுகள் பற்றித் தமிழ் மக்கள் நல்லாக அறிவார்கள். இந்தியாவின் எல்லைக் கோட்[illegible] சீன மீறியபோது இந்திய கம்யுனிஸ்டுகள் கண்மூடிவாய் பொத்தி இருந்தார்கள். சீன செய்வது அனியாயம் அக்கிரமம் என்று கண்டிக்க மாஸ்கோ, பீக்கிங் பக்தி விடவில்லை. மாஸ்கோவில் மழை பெய்தால் இங்கு குடைபிடிப்பார்களாம் கம்யுனிஸ்டுகள். மாத்தறையில் நடந்த ரவுண் கவுன்சில் கூட்டத்தில் தலைவர் ஆங்கிலத்தில் [illegible]தான் நிர்வாகம் நடைபெற வேண்டுமென வாதாடியபோது கொம்யுனிஸ்ட் மெம்பர் சிங்களத்தில்தான் நிர்வாகம் நடக்க வேண்டுமென தாய் மொழிப் பித்தனுக மாறிய பெருங்குணத்தைப் பத்திரிகைகள் வெளியிட்ட செய்தியைத் தமிழ் மக்கள் அறிவார்கள். சுயேச்சைகளுக்கும் இனி இடமில்லை. அவர்கள் மதில் மேல் பூனைகள். பதவி என்ற எலும்புத்துண்டுக்காக தன் மானத்தையும் துறக்கக்கூடியவர்கள். பட்டிருப்பு எதிர் மன்னர் பட்டப்பகலில் செய்த துரோகத்தைத் தெரியும்தானே?

சுப்பர்:-அது சொன்னியே சரிதான். எலெக்சன் எப்பவாம்?

நடராசா:-ஜனவரி ஒன்பதாம் தேதியாம் என்னத்துக்கு நேரை புள்ளடி போடுவது என்று தெரியும். தமிழரசுக் கட்சிக்கு வீடு. கொம்யுனிஸ்டுக்கு நட்சத்திரம், சுயேச்சைக்கு கை.

சுப்பர்:-போன முறையும் தமிழரசுக் கட்சிக்கு வீடு தானே! போன முறையும் வீட்டுக்கு நேரே தானே போட்டநாங்கள்.

நடராசா:-கோமதி வன்னியசிங்கத்தை வீட்டுக்கு நேரே புள்ளடி போட்டு பாராளுமன்றம் அனுப்புவதல்ல முக்கியம். மற்ற இரண்டு பேருக்கும் கட்டுக் காசில்லாமல் செய்ய வேண்டும். அப்பொழுதுதான் சிங்களவர், தமிழரசுதான் தமிழ் மக்கள் விருப்பம் என்பதை உணருவார்கள்.

சுப்பர்:-அவள் பிள்ளை எங்கடை வீடுகளுக்கு வரத் தேவையில்லை. நாங்களாகவே பாடுபட்டு பாராளுமன்றம் அனுப்ப வேண்டும். சரி தம்பி, நான் இன்னெரு நாளைக்கு வாறன். புதினங்களைச் சொல்லு.

நடராசா:-இனி புதினங்களுக்கு குறைவேது அண்ணை. அடிக்கடி வா அண்ணை, நான் எல்லாம் சொல்லுறன்.

சுதந்திரன் இல்லையேல் சுபீட்சமில்லை

நகைச்சுவைக் கவிதை

## சொள்ளையம்மாள் சொப்பனம்

போகாதே போகாதே மை டியரே—நான்
பொல்லாத சொப்பனம் கண்டு விட்டேன்
போனிரெயில் தோளில் புரளக்
கண்டேன்—ஐயோ!
போல் கொண்டை றிபனும் அவிழக் கண்டேன்!
அல்சேஷன் இருந்து குரைக்கக்கண்டேன்—குசினி
அடுப்பிலே எலக்ரிக் பியூஸ் போகக்கண்டேன்
கண்ணுக்குப் பூச ஐரெக்ஸ்எடுத்தேன்
அத்தான்—அது
புண்ணுக்கைப் போலவே ஆச்சுதத்தான்!
குளித்திட லக்ஸ் சோப்பை எடுத்தேன்
அத்தான் – அது
சன்லையிற் ஆகவே நுரைக்கக் கண்டேன்
பொளிஷ் பண்ண பூட்சை எடுத்தேன்
அத்தான்—அது
பூஞ்சணம் பிடித்திருக்க நானும் கண்டேன்!
டிரவலிங் பேக்கை எடுத்தேன் அத்தான்—அதில்
இறல் கருவாடுமிருக்கக் கண்டேன்
நைலோன் கிழியக் கனவு கண்டேன் ஐயோ!
நாட்டை விட்டு நாகரிகம் போகக் கண்டேன்
போகாதே போகாதே மை டியரே—நான்
பொல்லாத சொப்பனம் கண்டு விட்டேன்

—ந. இராமச்சந்திரன்.

★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா
★ லதா

கண்ணைக் கவரும்
வண்ணங்களிலும்

கருத்தைக் கவரும்
வடிவங்களிலும்
சிறந்த பாவனையிலும்
உறுதியான சாயத்திலும்

முன்னணி
வகிக்கிறது

லதா

கேம்பிரிக்

சட்டை, ஜாக்கெட், கவுண்,
பாவாடை, கிமோனு முதலியவைகளுக்குச் சிறந்தது.

இலங்கை முழுவதிலுமுள்ள புடைவை வியாபாரிகளிடம்

கிடைக்கும்.

ஏக விநியோகஸ்தர்கள்:

குண்டன்மால்ஸ்
26, கெய்ஸர் வீதி, கொழும்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரன்

SUTANTIRAN

1959 நவம்பர் மாதம் 29-ந் தேதி

194 ஏ, தட்டாதெரு, கொழும்பு. போன்: 3411 த. பெ. 1183


## முட்டிக்கொண்டு குனிதல்

சிந்தித்துச் செயலாற்றுவது புத்திசாலித்தனம். முட்டிக்கொண்டு குனிவது முட்டாள்தனம். நமது இலங்கை அரசாங்கம் இதில் எந்த வகையைச் சேர்ந்தது?

திரு பண்டாரநாயகாவின் தலைமையில் எம். ஈ. பி. அரசாங்கம் ஆரம்பமானபோதே எந்தப் பிரச்னையையும் தீரச் சிந்தித்து, ஆர அமர ஆலோசித்து, அமைதியாகச் செய்யும் பண்பு கைவிடப்பட்டது 'சிங்களம் மட்டும் சட்டம்', 'சிங்கள சிறீ திணிப்பு', 'தேசிய மயம்'போன்ற அவசர நடவடிக்கைகள் நாட்டில் விளைவித்த இன்னல்களும், இடைஞ்சல்களும், இரத்த வெள்ளமும் எத்தகையன என்பது உலகறியும்.

இவற்றுக்கெல்லாம் முன்னேடியாக பண்டாரநாயகா அரசாங்கம் செய்த மாபெரும் தவறு, தக்க ஆய்வும் பரிசீலனையும் இன்றி, மரணதண்டனையை ஒழிக்கும் முகமாக அதை விலக்கி வைத்ததாகும்.

1956ம் ஆண்டு மரணதண்டனையை விலக்கி வைக்கும் மசோதா பாராளுமன்றத்தில் வந்தபோது அதைச் சுதந்திரன் பலமாகக் கண்டித்து எச்சரிக்கை செய்தது நமது நேயர்களுக்கு நினைவில் இருக்கும் என்று நம்புகிறோம்.

திரு பண்டாரநாயகா பதவிக்கு வந்ததும் அவருடைய அரசாங்கம் முதலாவதாக நிறைவேற்றி வைத்த மசோதா மரணதண்டனையை விலக்கி வைக்கும் மசோதாதான்.

நாளுக்குநாள் கொலைக் குற்றம் மலைபோல் வளர்ந்து வரும் இலங்கை நாட்டில் மரணதண்டனையை விலக்கிவைப்பது ஒரு விஷப் பரீட்சை என்பதை அரசாங்கம் அப்போதே உணராதது துரதிஷ்டமாகும்.

அண்டை நாடான இந்தியாவில், ஒரே ஒரு இடத்தில் மட்டும், அதாவது, கொச்சின் சமஸ்தானத்தில் சிறிது காலம் மரணதண்டனை ஒழிக்கப்பட்டது அதனால் பயன் ஏற்படவில்லை; பாதகம்தான் மேலும் அதிகரித்தது! எனவே திரும்பவும் மரணதண்டனை அங்கு புகுத்தப்பட்டது. இந்த உண்மையையாவது இலங்கை அரசாங்கம் ஒரு பாடமாகக் கொண்டிருக்க வேண்டும்.

முதலில் மரணதண்டனையை விலக்கி வைத்துவிட்டுப் பின்னர் அரசாங்கம் என்ன செய்தது தெரியுமா? அதுதான் வேடிக்கை! மரணதண்டனை வேண்டுமா வேண்டாமா என்பதை ஆராய ஒரு கமிஷனை நியமித்தது. அதற்கு ஒரு தலைவரை வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்தது. அந்தத் தலைவர் ஏற்கனவே, மரணதண்டனை கூடாது என்ற பலமான சொந்த அபிப்பிராயம் உடையவர் என்பதைத் தெரிந்திருந்தும் அவரை அழைத்து இந்த முக்கிய பிரச்னைபற்றி விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொண்டது. எதிர்பார்த்தபடி மரணதண்டனை கட்டாயம் ஒழிக்கப்பட வேண்டும் என்று அந்தக் கமிஷன் தலைவர் தமது அறிக்கையில் அபிப்பிராயம் தெரிவித்தார். இந்த விழல் ஆராய்ச்சியில் இலங்கைப் பொதுமக்களின் வரிப் பணம் பல்லாயிரம் ரூபாய்கள் பாழாயின. மரணதண்டனை ஒழிக்கப்பட வேண்டும் என்று கருதிய அரசாங்கத்தின் தலைவரே ஒழிக்கப்படப்போகிறார் என்பதை யாரும் எதிர்பார்க்கவில்லை!

ஆம், மூன்றே ஆண்டுகள் முற்றாகக் கழியுமுன், யாரைத் தலைவராகக்கொண்ட அரசாங்கம் கொலைக் குற்றத்துக்கு மரணதண்டனை கூடாது என்று பச்சாதாபம் காட்டியதோ, அந்த அரசாங்கத்தின் ஸ்தாபகரையே பட்டப்பகலில் குளிர் இரத்தப் படுகொலைக்குப் பலிகொடுக்க வேண்டிய பரிதாப நிலையேற்பட்டது. இதைக் காலத்தின் கோலம் என்று கொள்வதா? அன்றி முட்டாள்தனம் தந்த முடிவு என்று முடிவுகட்டுவதா?

திரு பண்டாரநாயகாவைப் பலிகொடுத்த பின் ஏற்பட்ட தஹநாயகா அரசாங்கம் நிறைவேற்றியிருக்கும் முதலாவது சட்டம் மீண்டும் மரணதண்டனையை அமுல் செய்யும் சட்டமாகும். இந்தச் சட்டம் இவ்வாரம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ளது.

மரணதண்டனை வேண்டும் என்ற மசோதாவைப்பாராளுமன்றத்தில் சமர்ப்பித்துப் பேசிய நீதி அமைச்சரின் பாராளுமன்றக் காரியதரிசி கேட்முதலியார் காரியப்பர் இரண்டு உண்மைகளைப் பட்டவர்த்தனமாக வெளியிட்டார். அவர் கூறியதாவது:

1. "கி. பி. முதலாம், மூன்றும், நான்காம் நூற்றுண்டுகளில் இலங்கையில் சில சிங்கள மன்னர்கள் கொலைக் குற்றத்துக்கு மரணதண்டனை விதிப்பதில்லையென்று முடிவு செய்தார்கள். அப்படி முடிவு செய்த அத்தனை மன்னர்களும் முடிவில் படுகொலை செய்யப்பட்டே மாண்டார்கள் என்பது சரித்திரம்.

2. "திரு பண்டாரநாயகா ஒருசமயம் என்னோடு பேசிக்கொண்டிருந்தபோது, தம்முடைய அடுத்த நடவடிக்கை மரணதண்டனையை இந்நாட்டிலிருந்து முற்றாக ஒழித்துவிடுவதுதான் என்று என்னிடம் கூறினர். அந்த நடவடிக்கையை அவர் மேற்கொள்ளு முனபு அவரே படுகொலை செய்யப்பட்டு விட்டார்!"

மேற்படி கூற்றில் கேட் முதலியார் காரியப்பர் பண்டைச் சிங்கள மன்னர்களின் மோட்டுத்தனத்தையும், பண்டாரநாயகாவின் முட்டாள்தனத்தையும் எவ்வளவு அழகாகக் குத்திக் கிண்டல் செய்திருக்கிறார் என்பது குறிப்பிடத்தக்கதாகும். அவருடைய பேச்சின் தாற்பரியம் அரசாங்கக் கட்சியிலுள்ளவர்களுக்குப் புரிந்ததோ என்று ஆச்சரியப்படுகின்றோம்.

கல்லோயாக் கலவரங்களின்போதும், 1958 மே-ஜூன் கலவரத்தின்போதும் எத்தனையோ நிரபராதிகள்—ஏழைத் தமிழர்கள்-சுட்டு வதைக்கப்பட்டார்கள், உயிரோடு எரிக்கப்பட்டார்கள், படுகொலை செய்யபபட்டார்கள். அப்போதெல்லாம் மரணதண்டனையை மீண்டும் கொண்டுவர வேண்டும் என்ற ஆர்வமும், அங்கலாய்ப்பும், புத்தியும் அரசாங்கத்துக்கு ஏற்படவில்லை. 'மாண்டவர் மாற்ருர்; நமக்கேன் கவலை?' என்றிருந்தார்கள். ஆனல் கொலை வெறிதமது கூடாரத்துக்குள்ளேயே புகுந்து தயங்கு வேண்டியவரின்—தம் இனத்தவரின் உயிரைக் குடித்தவுடன்தான் 'ஞானேதயம்' எற்பட்டது இந்த நயவஞ்சகர்களுக்கு!

தீமைக்கு, தீய சக்திகளுக்கு ஆதரவு கொடுத்து வளர்த்தால், அவை தமிழர்களை மட்டுமல்ல, சிங்களவர்களையும் திருப்பித் தாக்கத் தயங்கமாட்டா என்ற கசப்பான உண்மையை உணர்ந்துகொள்ள, முட்டிக்கொண்டு குனியவேண்டிய துர்ப்பாக்கிய நிலையேற்பட் விட்டது இன்றைய அரசாங்கத்துக்கு.

விலக்கி வைத்த மரணதண்டனையை மீண்டும் அமுல் செய்வது என்று இவ்வாரம் அவசர அவசரமாக அவர்கள் நிறைவேற்றியுள்ள சட்டம் முட்டிக்கொண்ட பின் குனிந்து கொள்ளும் [illegible] ஒரு தக்க உதாரணம் அன்றி வேறு என்ன?

# 'மொனராகலை'யென புதிய நிர்வாக மாவட்டம் உதயம்

# தமிழர் பிரதேசத்தை வெட்டிக் குறைக்கும் மற்ருெரு முயற்சி

## தமிழரசுக் கட்சி இறுதிவரை எதிர்க்கும்

(நமது நிருபர்)

மொனராகலை மாவட்டம் என்று ஒரு புதிய அரசாங்க நிர்வாக மாவட்டம் உதயமாகப் போகிறது பதுளை மாவட்டத்திலிருந்து சில பகுதிகளையும், மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சில பகுதிகளையும் பிரித்தெடுத்துப் புதிய மாவட்டங்களின் எல்லைகள் நிர்ணயிக்கப்படுகின்றன. தமிழர்களுக்குப் பாதகமான இந்த முயற்சியைத் தமிழரசுக் கட்சி இறுதிவரை எதிர்க்கும் என்று தெரிகிறது.

1960ம் ஆண்டு ஜனவரி முதலாந் தேதியுடன் புதிய மொனராகலை மாவட்டம் ஆரம்பமாகப்போகிறது. இந்த மொனராகலை மாவட்டத்துள் இப்போதுள்ள பதுளை மாவட்டத்திலிருந்து சில பகுதிகள் பிரித்தெடுத்துச் சேர்க்கப்படுகின்றன.

பின்வரும் டி. ஆர். ஓ. பிரிவுகள் மொனராகலை மாவட்டத்தில் இடம்பெறும்: வெலஸ்ஸ பிரிவு, மொனராகலைப் பிரிவு, வெள்ளவாய்ப் பிரிவு.

### பதுளை மாவட்டம்

பதுளை மாவட்டத்திலிருந்து சில பகுதிகள் பிரித்தெடுக்கப்படுவதால் அவற்றை ஈடு செய்வதற்கு மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து சில பகுதிகளைப் பிரித்தெடுத்து பதுளையுடன் சேர்க்கின்றனர். இப்படிச் சேர்க்கப்படும் பகுதிகளுள் குறிப்பிடத்தக்கது விந்தனைப் பிரிவு ஆகும்.

புதிய பதுளை மாவட்டம் பின்வரும் டி. ஆர். ஓ. பிரிவுகளைக்கொண்டதாய் அமைகின்றது: விந்தனைப் பிரிவு வியலுவா பிரிவு, உடகிந்த பிரிவு, யட்டகிந்த பிரிவு, அப்புத்தளைப் பிரிவு.

### மட்டக்களப்பு மாவட்டம்

வெட்டிக் குறைக்கப்படும் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு வேறு எந்த மாவட்டத்திலிருந்தும் பகுதிகள் சேர்க்கப்படுவதாயில்லை. இது தமிழ்ப் பிரதேசத்தை மேலும் குறைக்கும் ஒரு சூழ்ச்சிச் செயலாகும் என்று தமிழரசுக் கட்சி சுட்டிக் காட்டுகிறது.

மட்டக்களப்பிலிருந்து பிரித்தெடுத்து பதுளையுடன் இணைக்கப்படும் விந்தனைப் பிரிவில் பல தமிழ்க் கிராமங்கள் இருக்கின்றன. புல்லுமலை, பெரிய புல்லுமலை என்னும் கிராமங்கள் குறிப்பிடத்தக்க பெரிய தமிழ் கிராமங்களாகும். இவற்றை மட்டக்களப்பு மாவட்டத்திலிருந்து பிரித்தெடுக்கக்கூடாதென்று தமிழரசுக் கட்சியினர் ஆட்சேபனை தெரிவித்துள்ளனர்.

### இறுதிவரை எதிர்ப்பு

அதுமட்டுமல்லாமல் பிரித்தெடுக்கும் விந்தனைப் பகுதிக்கு ஈடாக வடமத்திய மாகாணத்திலிருந்து மன்னம்பிட்டி, கல்லலைபோன்ற தமிழ்க் கிராமங்களை மட்டக்களப்பு மாவட்டத்துடன் சேர்க்க வேண்டும் என்றும் போராடி வருகின்றனர்.

இந்த விஷயத்தில் தமிழரசுக் கட்சி தனது எதிர்ப்பினை இறுதிவரை காட்டிப்போராடும் என்று தமிழரசுத் தந்தை திரு எஸ். ஜே வி. செல்வநாயகம் சுதந்திரன் நிருபரிடம் கூறினர்.

மொனராகலை என்பது தமிழில் "மயில்மலை" என்று பொருள்படும்.

## மக்கள் குரல்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

நிகழ்ச்சிகள் இடம் பெருமல் கலைவிழா திருகோணமலையைப் பிரதிபலிப்பதாகவே இருக்கவில்லை. இந்தக் கலை விழாவை நடத்தியவர்கள் விட்ட மன்னிக்க முடியாத குற்றம் இது.

இனிமேல் இப்படியான விழாக்களை நடத்துபவர்கள் கிராமங்கட்கு முக்கியத்துவம் அளிக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

—வ. அ. இராசரத்தினம்
மூதூர்.

குறிப்பு:

இதுபற்றி இலங்கை வானெலி (பதில்) தமிழ் நிகழ்ச்சி அமைப்பாளர் திரு பாலசுப்பிரமணிய ஐயரிடம் விசாரித்தபோது குறை நேர்ந்துவிட்டது ஏதோ உண்மைதான் என்றும் இனி வரவிருக்கும் கலை விழாக்களில் அவ்விதம் நேராதிருக்க உரிய ஒழுங்குகள் செய்யப்படும் என்றும் சொன்னார்.

போதிய அவகாசமின்மையாலும் வேறுசில வசதிக் குறைவுகளாலும் திருகோணமலைக்கு அப்பால் உள்ளவர்களின் நிகழ்ச்சிகளை விழாவில் சேர்த்துக் கொள்ளவில்லையே தவிர, மற்றப்படி அவர்களையெல்லாம் புறக்கணிக்க வேண்டும் என்பது இலங்கை வானெலியின் நோக்கமல்ல என்றும் திரு பாலசுப்பிரமணிய ஐயர் மேலும் தெரிவித்தார்.

## கடவுளுக்கு . . .

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சரி, நமது விஷயத்துக்கு வருவோம். கதை என்று சொன்னேன் இல்லையா? கதையில் பல திடுக்கிடும் சம்பவங்கள் குத்துக்கரணங்கள் எல்லாம் வரப்போகின்றன. கதைக்கு என்ன பெயர் வைக்கலாம என்று நினைக்கிறீர்கள்? யோசித்துத் தீர்மானியுங்கள் பார்க்கலாம்.

சரி, இது தான் கதை: ஒரு பெரிய காடு இருந்தது. அந்தக் காட்டில், மற்றக் காடுகளில் வசிக்கும் சகல விலங்குகள் பறவைகள் யாவும் வாழ்ந்து வந்தன. ஆனல் சிங்கம் மட்டும் இல்லை சிங்கம் இல்லையே என்று அழுது பொழுதைப் போக்கலாமா? மற்றைய பிராணிகளின் விருப்பப்படி ஒரு சிறுத்தை சிம்மாசனம் ஏறியது. அந்தச் சிறுத்தையின் அரண்மனையில் யாரும் சுலபமாக நுழைந்துவிட முடியாது. ஆனல் பூனைகளுக்கு மட்டும் விசேஷமாக சலுகைகள் தரபபட்டன. ஒரு நாள் ஒரு பூனை உருத்திராக்கமாலை அணிந்து கொண்டு அரண்மனைகுள் நுழைந்தது. சிறுத்தை அரசன் ஓடி வந்து கும்பிடப்போன சமயம், பூனை ஒரு சுழல் துப்பாக்கியை எடுத்து டுமீல் டுமீல் என்று சிறுத்தையைச் சுட்டது.

பிறகு நடந்த திடுக்கிடும் சம்பவங்களை அடுத்த கடிதத்தில் காண்க. முக்கிய இடத்தில் 'ஸஸ்பென்ஸ்' ஆக இருக்கட்டுமே என்று முதலாம் அத்தியாயத்தை முடித்துவிட்டேன். துடித்துக்கொண்டு இரண்டாவது அத்தியாயத்தை எதிர்பாருங்கள்.

நாரதர்.

20—11—59.

## தமிழியக்கம்

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

தமிழியக்கத தொண்டர்கள்

241 ச. மரியதாஸ், யாழ்ப்பாணம். 242 பா. பாலசண்முகநாதன், வண்ணர்பண்ணை 243 மு. சிவஞானம், வசாவிளான். 244 செ. இலிங்கநாதன். மாவத்தகம 245 செல்வி இராசேஸ்வரி பொன்னம்பலம், நயினதீவு. 246 தி. மாணிக்கவாசகம், மண்டூர் 247 இ சீனிவாசகம், மண்டூர் 248 அ. செல்லத்துரை, மண்டூர் 249 ஆ. அருளையா, மண்டூர். 250 வே. இரகுநாதன், யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அகில இலங்கை:

# அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கம்

## பிளவு முயற்சி தோற்றது

### கிழக்கில் புதுச் சங்கம் தோன்றவில்லை

(நமது விசேஷ நிருபர்)

"அரசினர் பாடசாலைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தில் வடக்கு, கிழக்கு என்ற பிரிவினையை ஏற்படுத்தவும் கிழக்கு மாகாணத்துக்கு தனியான ஒரு சங்கத்தை அமைக்கவும் சிலர் முயற்சிகள் செய்தது நல்ல வேளையாகத் தோல்வியாக முடிந்து விடடது. சங்கப் பொதுச் செயலாளர் பதவியை ராஜினமாச் செய்துவிட்டார் தலைவரும் தாமும் தமது பதவியை ராஜினமாச் செய்வதாகக் கடிதம் கொடுத்துவிட்டுப் பின்னர் புனராலோசனை செய்துவிட்டு அதை வாபஸ்பெற்றுக்கொண்டார்."

மேற்கண்டவாறு நமது விசேஷ நிருபர் கூறுகிறர். சங்க நிலைமையை அவர் பல வழிகளிலும் ஆராய்ந்து தமது அபிப்பிராயத்தை இங்கு தருகிறர். அவர் கூறுவதாவது:-

ஆசிரிய சமூகத்தின் ஒரு முக்கிய பகுதியாகிய அ. இ. அரசினர் தமிழர் ஆசிரியர்களின் கடந்த ஜூன் மாதப் பொதுக் கூட்டத்திலே நடந்த உத்தியோகத்தர்கள் தெரிவிலிருந்தே சங்கத்துக்குள் பல பிரிவினைகள் தோன்றிவிட்டன.

#### பிரிவினை ஆரம்பம்

இப்பிரிவினைகள் பற்றி விசாரித்த பொழுது இவை கடந்த பொதுக கூட்டம் கூட்டப்பட்ட வகையிலிருந்தே ஆரம்பமாயின என்று தெரியவந்தது. செயலாளர், அங்கத்தவர்களுள் ஒரு பகுதியினருக்கு அழைப்பு அனுப்பியும் இன்னெரு பகுதியினருக்கு அழைபபு அனுப்பாமலும் விட்டுவிட்டாா என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. தெரிவுசெய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் சங்கத்திலுள்ள பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவைப் பெற்றிருக்கவில்லை என்றும் கூறப்படுகிறது.

#### இரு பிரிவுகள்

மேற்படி குற்றச்சாட்டுகளின் பயனுக இத்தொழிற் சங்கத்தில் இரு பிரிவுகள் தோன்றியிருக்கின்றன. ஒரு பகுதியினர் தேர்தல்கள் நடந்த முறை சரியானதேயென்று கருதுகிறர்கள். தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்களை ஆதரித்து தெரிவுகள் ஒழுங்காக நடந்ததென நிருபிக்கப் பாடுபடுகிறர்கள். மற்றப் பகுதியினர் நடந்துபோனவற்றை மாற்றிவைக்கவேண்டுமென்றும் அன்றேல் அவை தொழிற் சங்கத்தின் ஆணி வேரையே சிதைப்பதாகுமெனவும் வாதிடுகிறர்கள்.

#### தோல்வி

இச்சங்கத்தில் 14 கிளைகளிருப்பதாகவும் இவற்றுள் சரிபாதிக் கிளைகள் உத்தியோகத்தரில் நம்பிக்கையில்லையெனத் தீர்மானம் நிறைவேற்றிச் சங்கத்தின் நிர்வாக சபைக்கு அனுப்பியிருப்பதாகவும் தெரிகிறது. உத்தியோகத்தரின் ஆதரவாளர்களுள் சிலர் தமக்கெதிராக அபிப்பிராயம் திரண்டிருப்பதையும், பெரும்பான்மையினர் தமக்கெதிராக இருப்பதையும் கண்டதும் சங்கத்தைத் தகர்த்துவிடுவதற்கு இயன்றவரை முயற்சி செய்தார்கள். வடமாகாணம், கிழக்குமாகாணம் என்ற அடிப்படையில் அங்கத்தவர்கள் பிரிந்துபோகும்படியான முயற்சிகள் செய்தார்கள். ஆனல் நல்ல வேளையாக இம்முயற்சிகள் பயனளிக்கவில்லை.

#### கிழக்கில் தனிச் சங்கம் இல்லை

கிழக்கு மாகாணத்திற்கென ஒரு தனிச் சங்கம் நிறுவப்படவில்லை. மாகாண அடிப்படையில் பிளவு எதுவும் ஏற்படவில்லை. விசுவாசமற்ற அங்கத்தவர்களின் முயற்சி தோல்வியடைந்தது அதிர்ஷ்டவசமானதே! செயலாளர் தமது பதவியிலிருந்து விலகிக்கொண்டார். தலைவரும் தாம் பதவியிலிருந்து விலகப்போவதாக ராஜினமாக் கடிதம் சமர்ப்பித்துவிட்டுப் பின்னுல் புனராலோசனையின் பேரில் வாபஸ் பெற்றுக்கொண்டார்.

#### சுமுகமான முடிவு

எதிர் வரும் பொதுக் கூட்டத்திற்கு பெருவாரியான அங்கத்தவர்கள் சமூகமளிப்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இக் கூட்டத்தில் சுமுகமான முடிவு வரும் என்று சங்கத்தில் விசுவாசமுள்ள அங்கத்தவர்கள் நம்பியிருக்கிறர்கள். ஆசிரியர்களில பெரும்பான்மையானவர்கள் தமது பொறுப்பை உணருகிறர்கள். சென்ற முறை நடந்த பிழைகளைத் தவிர்த்துச் சங்கம் ஒழுங்காக நடப்பதற்கு ஆகவேண்டிய வழிவகைகளில் ஒன்றுபட்டு இயங்கவேண்டுவதவசியம் என்பதை அவர்கள் உணர்கிறர்கள். — இவ்வாறு சுதந்திரன் விசேஷ நிருபர் தெரிவிக்கிறர்.

பிரதமர் கொலை

## 7 பேர்மீது வழக்கு தாக்கல்

### டிக்கி விடுதலை

பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயகா கொலை சம்பந்தமாகக் கைது செய்து காவலில் வைக்கப்பட்டிருந்தவர்களில் திரு டிக்கி டி சொய்ஸா விடுதலை செய்யப்பட்டார். மற்ற ஏழு பேர் மீதும் கடநத வியாழக்கிழமை கொழும்பு கோர்ட்டில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது.

சோமராமதேரோ பிரதமரைக் கொன்றதாகவும் பின்வரும் 7 பேரும் பிரதமரைக் கொல்லச் சதி செய்ததாகவும் குற்றஞ்சாட்டி வழக்குத் தாககல் செய்யப் படடிருக்கிறது.

1-வது எதிரி: மப்பிட்டிகம புத்தரககிடட தேரோ.

2-வது எதிரி: ஹேமச்சந்திரா பியசேன ஜெயவர்த்தன.

3-வது எதிரி: பி. அனுராடி சில்வா.

4-வது எதிரி: தல்துவ சோமராம தேரோ.

5-வது எதிரி: இன்ஸ்பெக்டர் டபிள்யு. ஏ. நியூட்டன் பெரேரா:

6-வது எதிரி: திருமதி விமலா விஜயவர்த்தன.

7-வது எதிரி: ஏ. ஏ. கரோலிஸ் அமரசிங்ஹா.

## கொழும்பு மாநகரசபை தேர்தலில் 139 பேர் போட்டி

### 6 பேர் எம். பிக்கள்-4பேர் பெண்கள்

கொழும்பு மாநகரசபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு மொத்தமுள்ள 37 வட்டாரங்களுக்கும் 139 பேர் தமது நியமனப் பத்திரங்களைக் கடந்த புதன்கிழமை தாக்கல் செய்தனர். இவர்களில் 6 பேர் பாராளுமன்ற உறுப்பினர்கள் என்பதும் 4 பேர் பெண்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

இத் தேர்தலில் யு. என். பி, சமசமாஜக் கட்சி, கம்யுனிஸ்டு கட்சி. எம். ஈ. பி; சிறிலங்கா சுதந்திரக் கட்சி, ஜாதிக விமுக்தி பெரமுனே, லங்காகொவி கம்கறு எக்ஸத் பெரமுனே, மஹாஜனபிரஜா தனதரவடபெரமுனே ஆகிய கட்சிகள் கலந்து கொள்கின்றன. பல சுயேச்சை அபேட்சகர்களும் போட்டியிடுகிறர்கள்.

போட்டியிடும் எம். பிக்களின் விவரம் வருமாறு:-

திருவாளர்கள் ஆர். ஈ. ஜெயதிலகா, பெர்னுட் சொய்ஸா, அனில் முனசிங்கா பீட்டர்கெனமன், மாககான் மார்க்கார், திருமதி விவியன் குணவர்த்தன.

இத் தேர்தலில் போட்டியிடும் பெண்களின் பெயர்கள் பின்வருமாறு:- திருமதிகள் ஐஷா ராவ்டா, விவியன் குணவர்த்தன, முத்துத்தந்திரீ, சோமாவதி பெரேரா.

## மகாசபைத் தலைவர் மீது...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ரம் செய்து வருகிறர்கள். இது கம்யூனிஸ்ட் அல்லாத சிறுபான்மைத் தமிழர் மகா சபை உறுப்பினரிடையே மிகுந்த ஆத்திரத்தையும் அதிருப்தியையும் ஏற்படுத்தியுள்ளது.

#### மனக்கொதிப்பு

மகாசபையின் சுயரூபம் இதுதான் என்பதை அறிந்து கொண்ட அவர்கள் கம்யூனிஸ்டுகளின் கைப்பொம்மைகளை அதிலிருந்து அகற்றிச் சுத்தப்படுத்துவது அல்லது சபையை விடடு வெளியேறுவது என்ற கட்டத்துக்கு வந்திருக்கிறர்கள்.

இந்த மனக்கொதிப்பு கடந்த வாரம் நிகழ்ந்த நிர்வாகசபைக் கூட்டத்தில் தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவரும் சந்தர்ப்பத்தை உண்டாக்கியதெனினும் அது ஒருவாறு சமாளிக்கப்பட்டு விட்டது. ஆயினும் மேற்கொண்டு அவர்மீது ஒழுங்கு நடவடிக்கைகள் விரைவில் எடுக்கப் படவிருப்பதாகத் தெரிகிறது.

#### சூழ்ச்சி

தலைவர் சுப்பிரமணியமும் மற்றும் சில நிர்வாகிகளும் மகாசபையை கம்யுனிஸ்டுகளுக்கு ஏற்கெனவே விற்றுவிட்டார்களென்பதை எடுத்துக் காட்டக்கூடிய மற்ருெரு சம்பவம் பற்றியும் மகாசபை வட்டாரங்களில் பேசிக்கொள்ளப்படுகிறது. சிறுபான்மைத் தமிழர் மகாசபையின் பிரதிநிதியாக ஒருவரை கோப்பாய் இடைத் தேர்தலில நியமிக்க வேண்டுமென்று ஏற்கனவே ஆலோசிக்கப்பட்டபோது சுப்பிரமணியம் கோஷ்டி அதனைத் தடுத்துவிட்டதாம் [illegible] ணம்? இதற்கு முன்பே கம்யூ[illegible]னிஸ்ட் கட்சி அத் தேர்தலுக்கு அபேட்சகர் ஒருவரை நியமித்துவிட்டதே.

மகாசபை போட்டியிட்டால் ஹரிஜன மக்களின் ஆதரவு கம்யுனிஸ்ட் அபேட்சகருக்குக் கிடைக்காமல் போய்விடும் என்ற காரணத் [illegible] சொல்லிக்கொள்கிறர்கள்.

### வ'வனியா

#### நியமனப் பத்திரங்கள் தாக்கல்

வவனியா இடைத் தேர்தலில் நான்குபேர் போட்டியிடுகிறர்கள். அவர்கள் தமது நியமனப் பத்திரங்களை கடந்த வியாழக்கிழமை தாக்கல் செய்தனர்.

போட்டியிடுவோர் விவரம் வருமாறு:-

டாக்டர் எஸ். ஏ. தர்மலிங்கம் (தமிழரசுக் கட்சி—சின்னம் வீடு), திரு டபிள்யு. பி. சிற்றம்பலம் (சமசமாஜக் கட்சி-சின்னம் திறப்பு), திரு பி. முத்தையா (வன்னிநாடு விவசாய இளைஞர் முன்னணி சின்னம்-சக்கரம்), திரு டி. சிவசிதம்பரம் (சுயேச்சை-சின்னம் மரம்).

### கொழும்பு...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திரு வி. ஏ. கந்தையா சொன்னர்.

திடுதிப்பென்று பாராளுமன்றம் கலைக்கப்பட்டு த தேர்தல் உடனடியாக வருவதானல் நீங்கள் கூறுவது சாத்தியப்படுமா என்று கேட்டபோது, "தேர்தல் எப்பொழுது நடப்பதானுலும் அது சாத்தியமாகும்" என்று கூறினர். இது விஷயத்தைக் கட்சி இன்னும் பரிசிலனை செய்து வருவதாகவும் விரைவில் ஒரு முடிவுக்கு வருமென்றும் அவர் மேலும் சொன்னர்.

## தொழிற் சங்க

(6-ம் பக்கத் தொடர்ச்சி)

நிறைந்த தீவிரப் பிரேரணைக்கு கையை உயர்த்தி ஆதரவு கொடுப்பதேயன்றி சட்டைப் பையுள் கையை புகுத்தி சந்தாப்பணம் செலுத்துவதற்கு மனம் ஒருப்படாதவர்—பிரஞ்சுத் தொழிலாளர் என்று கூறுவது வழக்கம். எனவே தொடர்ச்சியாக தொழிற் சங்க அங்கத்தவராகப் பதிவு செய்யப் பெற்றிருப்பவர் தொகை தொழிலாளர் எண்ணிக்கையில் ஒரு சிறிய பின்னமேயாகும்.

#### கம்யூனிஸ்டுகள்

கம்யூனிஸ்டு கட்சியினர் தொழிற் சங்கங்களைக் கைப்பற்றிய தினிமித்தம் கத்தோலிக்க தொழிலாளர் தனித்தியங்க முற்பட்டனர். ஆகவே ஆரம்ப 1919-ல் ஒரு கிறிஸ்தவ தொழிற் சங்க இயக்கம் ஆரம்பிக்கப் பெற்றது. நாட்டுத் தொழிற் சங்கங்கள் அனைத்தும் பிரிட்டனிற் போல் ஒருமித்து இயங்க முடியவில்லை. இரண்டு மூன்று சம்மேளனங்களாகவே தொழிலாளர் இயக்கங்கள் காடசியளிக்கின்றன. இடையிடையே சில சம்மேளனங்கள் கூட்டாகப் பிணைவதும் பின்னர் பிரிவதுமாக இருந்து வருகின்றன எனினும் சென்ற சில ஆண்டுகளாகப் பெரும்பான்மை தொழிற் சங்கங்கள் கம்யூனிஸ்டு ஆதிக்கத்துள் அடங்கியிருக்கின்றன.

பல சந்தர்ப்பங்களிலும் பல்வேறு அரசியற்கட்சிகளின் வெற்றி தோல்வி தொழிற் சங்கங்களின் செல்வாக்கைப் பாதித்தும் வருகின்றன. எனினும் சில வெற்றிகளை இந்த நேச உறவு தொழிலாளர்க்கு கொடுத்ததென்றே கூற வேண்டும் உதாரணமாக பிரிட்டனிற்கு முன்னதாகவே பிரஞ்சுத் தொழிலாளர்க்கு "40 மணித்தியால வாரம்" என்ற சலுகை சட்டமூலமாகக்கிடைத்தது.

#### சரியான அந்தஸ்து இல்லை

பிரஞ்சுத் தொழிற் சங்க இயக்கத்தில் விசேடமான இன்னுமொரு அம்சத்தைக் கவனிக்க வேண்டும். இதர தேசத் தொழிற் சங்க இயக்கங்களுடன் உறவு கொள்வது பிரஞ்சுத் தொழிலாளர் இயக்கங்கட்கு பொதுவான ஒரு அம்சம் அதனிமித்தம் பிரஞ்சுத் தொழிலாளர் முன்னேறினர் என்று சொல்வதற்கில்லை.

சகல விடயங்களையும் உற்று நோக்கின் பிரஞ்சுத் தொழிற் சங்க இயக்கம் பிரிட்டிஷ் தொழிற் சங்க இயக்கத்தைப் போல் சமூக அமைப்பில் மதிப்பும் கண்ணியமும் பெற்ற ஒரு அந்தஸ்தைப் பெறவில்லை. பரபரப்பையும் புரட்சியை வருவிப்பர் என்ற பயத்தையும் கொடுக்கும் ஒரு இயக்கமாகவே திகழ்கின்றது.

## பிரதமர் பதவி...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கங்களுக்கு நீங்களும் உங்கள் சகாககளும் இணங்கி வருவதானல் நான் ஸ்திரமான ஒரு கட்சியை அமைத்து இந்த நாட்டில் ஸ்திரமும் உறுதியும்வாய்ந்த ஒரு ஆட்சியை அமைக்கவும் இலங்கை இழந்த புகழையெல்லாம் ஆறு மாதங்களில் மீண்டும் சம்பாதித்துக் கொடுக்கவும் தயாராயிருககிறேன்"

சேர் ஜோனுடைய இந்த வெளிப்படையான பேச்சைக் கேட்ட தூதுகோஷ்டியினர் பதில் எதுவும் சொல்லாமல் தமது சகாக்களுடன் ஆலோசித்து முடிவு தெரிவிப்பதாகவும், மொத்தம் எத்தனை பேர் சேர் ஜோனை ஆதரிப்பதென்ற விவரம் அறிவிப்பதாகவும் சொல்லி வெளியேறினர் என்று அறியப்படுகிறது.


## கொழும்பில் கடைசி சந்தர்ப்பம்

நந்திகேஸ்வர நாட்டியாலயப் பொறுப்பாளர் திரு. சத்தியலிங்கம் அளிக்கும் பெருமைக்குரிய நிகழ்ச்சி.

# யாழ் சகோதரிகளின் நடன விருந்து

29—11—59 ஞாயிற்றுக்கிழமை மாலை 6-30 மணிக்கு லயனல் வெண்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெறும்.

இந்தியாவில் பல இடங்களில் நடனமாட ஏற்பாடாகி இருக்கும் நீலா, தயா, ஈஷா சகோதரிகள் மூவரும் சேர்ந்து நடனமாடுவது கொழும்பில் இதுவே கடைசி முறை.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தாயும் தாய்நாடும்

சிறுகதை — எழுதியவர்: "பொன்னு"

"தாய்நாட்டின் விடுதலைக்காக இராணுவத்தில் சேர்வதற்குத் தன்னலமற்ற, திடசித்தம் கொண்ட இளைஞர்கள் தேவை" என்று கொட்டை எழுத்துக்களில் விளம்பரம் வெளிவந்திருந்த பத்திரிகையைப் பத்திரமாகப் பிடித்தவண்ணம் வீட்டை நோக்கிக் காற்ருய்ப் பறந்தான் சிவசாமி.

வேலை செய்த களைப்பால் சோர்ந்த உடலுடனும் வாடிய முகத்துடனும் வரும் மகன் அன்று வழக்கத்துக்கு மாருக முகமலர்ச்சியுடன் வருவதை பார்த்த அவன் தாய் பாக்கியம் கூட உள்ளம் பூரிப்படைந்தாள். வயோதிபத்தால் சற்றுச் சுருங்கியிருந்த அவள் முகத்திலும் மலர்ச்சியின் ரேகைகள் காணப்பட்டன.

"என்னப்பா இத்தனை மகிழ்ச்சியுடன் குதித்துக் கொண்டு வருகிருயே, என்ன விசேடம் இன்றைக்கு?" என்ருள் பாக்கியம் மகிழ்ச்சி பொங்க.

"அதிர்ஷ்டம் வந்திருக்கிறதம்மா. நான் நீண்ட நாட்களாக எதிர்பார்த்திருந்த தருணம் வந்துவிட்டதம்மா. தாய்நாட்டைக்காப்பாற்றப் புறப்படப் போகிறேன்!... பட்டாளத்தில் சேரப் போகிறேன்!." என்று உள நிறைவுடன் கூறிய சிவசாமி பத்திரிகைச் செய்தியைத் தாயிடம் காட்டினுன்.

இத்தனை நேரம் மகிழ்ச்சியால் மலர்ந்திருந்த பாக்கியத்தின் முகம் அந்தச் செய்தியைப் படித்ததும் வாடி வதங்கியது. அவள் மனம் 'படக், படக்' என்று அடித்துக் கொண்டது. அவள் உடலெல்லாம் நடுங்குவது போலிருந்தது. அவள் நாவலுவிழந்து பேசக் கூடச் சக்தியற்று நின்ருள் சற்று நேரம்.

சிறிது நேர அமைதிக்குப் பின் "சிவசாமி! உன் தாயை ஏனப்பா இப்படியெல்லாம் சோதிக்கிருய்?..." என்று தளதளத்த குரலில் கேட்டாள் பாக்கியம்.

"இதில் என்ன சோதனையிருக்கிறது அம்மா? நம் தாய் நாட்டுக்காக நான் செய்யப்போகும் நீங்காத கடமையைப் பற்றித் தான் கூறுகிறேன்!" என்ற சிவசாமியின் குரலில் உறுதியிருந்தது.

"மகனே! உன் புத்தி ஏன் இப்படிப் போய் விட்டது? இந்த முடிவுக்கு நீ ஏன் வந்தாய்?...உனக்கு என்ன குறை வந்துவிட்டது, நீ இப்படிச் சொல்வதற்கு?"... இதைச் சொல்லும் போதே அவள் கண்கள் கலங்கின. கண்ணீர் வெளிவரத் தயாராய்க் காத்திருந்தது.

"எந்தக் குறையும் எனக்கு இந்த முடிவைக் கொடுக்கவில்லையம்மா. நீங்கள் எந்தக் குறையையும் எனக்கு விட்டு வைக்கவில்லையே. ஆனுல் நம் தாய் நாட்டின்-தெய்வத் திருநாட்டின்-விடுதலை என்னை அழைக்கிறது. இந்த நாட்டில் கடமையும் உரிமையும் உள்ள ஒரு குடிமகன் அல்லவா நான்? என் தாய் நாடு அன்னியர் கையில் சிக்குண்டிருப்பதைப் பார்த்துக் கொண்டு எப்படியம்மா என் போன்ற இளைஞன் சும்மா இருக்க முடியும்?...என் கடமையை நான் செய்ய வேண்டாமா?..." உறுதி சற்றும் குலையாமல் பேசினுன் சிவசாமி.

பாக்கியத்தின் வேதனையும் உணர்ச்சியும் இன்னும் அதிகரித்தன. தாளமுடியாத வேதனையுடனும் உணர்ச்சிப் பெருக்குடனும், "முடியாது சிவசாமி, முடியாது! நான் ஒருபோதும் சம்மதிக்க மாட்டேன்!..." என்று வெறி கொண்டவளைப் போல் கத்தினுள். அடுத்து விம்மி விம்மி அழுதாள்.

திடீரென்று கண்களைத் துடைத்துக்கொண்டாள். "ஆகட்டும், எழுந்திரு!..." என்ற வார்த்தைகள் அவள் மனச்சாட்சிக்கு மாருக வெளிவந்தன அவள் அடித்தொண்டையிலிருந்து. "பண்டைத் தமிழகத்து வீரத் தாயாக நீங்கள் மிளிர வேண்டும் அம்மா. 'சரி' என்று ஒரு வார்த்தை சொல்லுங்கள்" என்று சிவசாமி அவள் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு கெஞ்சியது அவ்வளவு தூரம் வேலை செய்திருக்கிறது பாக்கியத்தின் மனதில்.

* * *

பாக்கியம்!-- உண்மையில் 'பாக்கியம்' என்ற அந்தப் பெயர் அவளுக்குக் கொஞ்சம்கூடப் பொருத்தமில்லை.

ஆமாம், பாக்கியம் தன் வாழ்க்கையில் பாக்கியமாக இருந்த நாட்கள் மிகக் குறைவு.

பாக்கியத்தின் கணவன் உண்மையிலேயே நல்லவன். அவன் திடீரென இறந்து போவான் என்று பாக்கியம் கொஞ்சம்கூட எதிர்பார்க்கவில்லை வேண்டிய மட்டும் அழுதும் அவள் வேதனை தீரவில்லை. இந்தத் திடீர்த் தாக்கம் அவளைப் பெரிதும் பாதித்தது. அன்றைக்கே அவளும் உயிரை விட்டிருப்பாள். ஆனுல் உலகமறியாத ஒரு வயதுக் குழந்தை சிவசாமியின் பொக்கை வாய்ச் சிரிப்புத்தான் அவளை வாழ வேண்டும் என்று வற்புறுத்தியது. தனக்காக இல்லாவிட்டாலும் தன் குழந்தையைக் காப்பாற்றுவதற்காகவாவது தான் வாழ வேண்டும் என்று தீர்மானித்தாள்.

எத்தனையோ இன்னல்களுக்கிடையில் மகனை வளர்த்தாள்—படிக்க வைத்தாள்—பெரியவனுக்கினுள்—கடைசியில் உத்தியோகத்திலும் அமர்த்தினுள்.

இத்தனை அருமையாக வளர்த்த மகனைப் பிரிய வேண்டுமென்ருல்—அதிலும் இராணுவத்துக்கு அனுப்ப வேண்டுமென்ருல் எந்தத் தாய்தான் சம்மதிப்பாள்?...

சிவசாமி தன் அன்னையின் மேல் எவ்வளவு உயிராய் இருந்தானே, அதேபோல் சிறு வயதிலிருந்தே தாய் மொழி, தாய்நாடு என்ருலும் அவனுக்கு நிறைந்த பற்று. பாடசாலையில் படிக்கும் காலத்திலிருந்தே தாய் மொழியைப்பற்றியும் தாய் நாட்டைப்பற்றியும் தான் எப்போதும் பேசிக்கொள்வான். இதைப்பற்றி அவனிடம் யாராலும் வாதிட முடியாது. அப்படி வாதிடுபவர்கள் வாயடைத்துப் போகும்படிக்குத் தக்கபதில் கொடுக்காமல், அந்த இடத்தை விட்டு நகரமாட்டான். "தாயைவிடப் பெரியது தாய்மொழி. தாய்மொழியைவிடப் பெரியது தாய் நாடு" என்று அடிக்கடி கூறுவான்.

* * *

இராணுவத்துக்குப் போவோரை ஏற்றியிருந்த புகைவண்டி புறப்படுவதற்கான கடைசி மணி அடித்தது. மகனைத் திரும்பத் திரும்ப முத்தமிட்டாள் பாக்கியம். தாயின் கண்களிலிருந்து வடிந்த கண்ணீரைத் தன் கைகளால் துடைத்து விட்டு "அழாதீர்களம்மா. எந்தக் கவலையும் கொள்ளாதீர்கள்!..." என்று கூறித் தாயைத் தேற்றிவிட்டு வண்டியுள் ஏறிக்கொண்டான் சிவசாமி.

வண்டியும் நகர்ந்தது. கொஞ்சத்தூரம் மகனின் கையைப் பிடித்தவாறே வண்டியுடன் தானும் நடந்தாள் பாக்கியம். அப்பால் அவள் கையிலிருந்து அவன் கை விடுபட்டது இருவரும் கைகளை ஆட்டிக்கொண்டனர். தன் உடலைவிட்டு உயிரைப் பிரித்தெடுத்துக் கொண்டு போகும் யமன் போலத் தெரிந்தது புகைவண்டி அவள் கண்களுக்கு. இடைத்தூரம் அதிகரிக்க, அதிகரிக்க தன் மகன் தன்னை விட்டுவிட்டு மிக மிகத் தூரமான இடத்துக்கு—திரும்பிவராத இடத்துக்கு—போய்விட்டான் என்ற வேதனை உணர்ச்சி ஏற்பட்டது அவளுக்கு. கண்களில் நீர்வழிய, புகைவண்டி வெகுதூரம் சென்று கண்களுக்கு அப்பால் மறைந்த பின்னரும் கூட அவள் கையை ஆட்டிக்கொண்டே நின்ருள்.

* * *

சிவசாமி இராணுவத்தில் சேர்ந்து ஒரு வருடத்துக்குள்ளேயே அவன் பெயரும் புகழும் எங்கும் அடிபடத் தொடங்கிவிட்டன. பத்திரிகைகளும் வானெலியும் அவன் அஞ்சாநெஞ்சத்தையும், வீரத்தையும், திறமையையும் போற்றிப் புகழ்ந்து பாராட்டின. 'தாய் நாட்டின் விடுதலை இனிச் சமீபித்துவிட்டது. சிவசாமி விடுதலை வீரன்' என்ற பேச்சுக்களைப் பொதுமக்களின் வாய்களிலிருந்து கேட்க முடிந்தது.

சிவசாமியின் தீரத்தையும் திறமையையும் கண்ணுற்ற இராணுவத் தலைவனுக்குச் சிவசாமியை ரொம்பப் பிடித்துவிட்டது. இதனுல் அடுத்த ஆருவது மாதமே சிவசாமி ஒரு 'லெப்டினன்ட்' ஆக்கப்பட்டான்.

சிவசாமி தலைமைதாங்கிச் சென்ற எந்தப் படையினரும் அன்னியரை எதிர்த்து முறியடித்து வெற்றி கண்டனரேயொழியத் தோல்வி காணவில்லை.

மகனின் புகழைப் பத்திரிகைச் செய்தியிலும் வானெலிச் செய்தியிலும் கேட்கும்போது பாக்கியத்தின் பெற்ற மனம் பூரிக்கத்தான் செய்தது. இருந்தாலும் அவள் இதயத்தின் ஒரு மூலையில் வேதனைத் தேக்கம் பெருகி வந்தது. தன் உயிருக்குயிரான மகனைப் பிரிந்திருக்க நேரிட்டுவிட்டதே—தன்னைப் பிரிந்து அவன் போய்விட்டானே—என்பது தான் அவளுக்கிருந்த வேதனை.

* * *

தாய் நாட்டின் விடுதலை வெகு தூரத்தில் இல்லை என்ற நிலையிலிருந்தது யுத்த நிலைமை.

அந்த நிலையில் ஒரு நாள்—சிவசாமிக்கு அவன் அன்னையிடமிருந்து ஒரு கடிதம் மிக உருக்கமாக வந்திருந்தது. அதிலே இருந்த இரண்டு வரிகள்—

"இன்னும் பல நாட்கள் நான் உயிருடன் இருக்க முடியாது என்றே எண்ணுகிறேன். அதற்கிடையில் உன்னைப் பார்க்க என் உள்ளம், நிறைந்த ஆசையோடு தவியாய்த் தவிக்கிறது" என்று இருந்தன. சிவசாமியின் கண்கள் கலங்கின. அன்னையின் கடிதம் அவன் இதயத்தை நெகிழச் செய்தது. இருந்தாலும் அன்றைய யுத்த நிலைமை அவனைப் போக விடவில்லை. "இன்னும் இரண்டு வாரத்தில் நிச்சயம் யுத்தமே முடிந்துவிடும். அப்படியிருக்கிறது யுத்த நிலைமை.எனவே இன்னும் இரண்டு வாரத்தில் கட்டாயம் வருகிறேன்" என்று பதில் எழுதிப் போட்டான்.

* * *

ஒரு வாரத்தின் பின் ஒரு நாள்; மாலை ஆறு மணி இருக்கும். இராணுவ முகாமின் ஒரு பகுதியில் அமைதியாக உட்கார்ந்திருந்தான் 'லெப்டினன்ட்' சிவசாமி. அப்போது அங்கு வந்தான் இராணுவத் தலைவன்.

பீடிகை எதுவும் இல்லாமல் விஷயத்தை வெட்டு ஒன்று, துண்டு இரண்டாகச் சொல்லிவிட்டுச் சென்ருன் அவன். அவன் சொன்னது—

"உன் வீரத்தையும் உறுதியையும் போற்றுகிறேன். ஆனுல் நாளை நீ தலைமை தாங்கப்போகும் போர்தான் மிக முக்கியமானது. தாய் நாட்டின் வெற்றியின் குறுக்கே நிற்கும் கடைசிக் கல. அதில் நாம் ஜெயித்து விட்டால் சரி, அப்புறம் முழு வெற்றிதான். உன் வீரத்தின் மேலும் அதைத் தொடர்ந்து வரப்போகும் வெற்றியின் மேலும் எனக்குப் பூரண நம்பிக்கை உண்டு. அதனுல்

(15-ம் பக்கம் பார்க்க)

## யாழ்நகரில் ஆங்கில நாடகம்

## ஆக்ஸ்போர்ட் நாடக இல்லம் டிசம்பர் 5-ல் அளிக்கிறது

இலங்கை வந்துள்ள ஆக்ஸ்போர்ட் நாடக இல்லம் (Oxford Playhouse) எதிர்வரும் டிசம்பர் 5-ந் தேதி யாழ் நகரசபை மண்டபத்தில் ஆங்கில நாடக விருந்து அளிக்க ஏற்பாடாகியிருக்கிறது.

பிரபல ஆங்கில நாடகாசிரியரான ஷேக்ஸ்பியர் எழுதிய 'டுவெல்த் நைட்' (Twelfth Night) என்ற நாடகத்தை அவர்கள் நடித்துக் காட்ட இருக்கிருர்கள்.

யாழ் நகர மேயர் திரு அல்பிரட் துரையப்பாவும் யாழ் கல்வி அதிபரும் இதற்கான ஒழுங்குகள் யாவற்றையும் செய்துவருகிருர்கள்.

ஆக்ஸ்போர்ட் நாடக இல்லம் கண்டியிலும் நாடகங்கள் நடித்துக் காண்பித்திருக்கிறது. இலங்கையிலுள்ள பிரிட்டிஷ் தூதுவராலயத்தினரின் ஆலோசனையின் பேரில் யாழ் நகரிலும் நாடகங்கள் நடத்த ஆக்ஸ்போர்ட் நாடக இலத்தினர் இசைந்துள்ளது குறித்து யாழ் மக்கள் மிக்க மகிழ்ச்சி அடைவதாகத் தெரிகிறது.

## திருக்கல்யாண விழா

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோவிலில் சென்ற 8-11-59-ல் வள்ளி•திருமணசபை ஆதரவில் திருக்கல்யாண விழா•வும் ஸ்கந்தசஷ்டி 8-வது நாள் உற்சவ விழாவும் அதி விமரிசையாக நடாத்தப்பட்டது.


விழா ஆரம்பத்தில் திரு அ. வேல்சாமியால் கூட்டு வழிபாடு நடாத்தப்பட்டது. தொடர்ந்து திரு. கே. பி. இராசமாணிக்கம் கோஷ்டியாரது நாதஸ்வரக் கச்சேரியும் கொழும்பு கலாவிருத்திச் சங்கத்தாரால் இசை நடன விருந்தும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.


பணம்! சேமியுங்கள்!! பணம்!!!

இன்றே நாஷனல் பாட்டரிகளைப்




பாவிக்க ஆரம்பித்து
அதிக லாபம் பெற்று
ஆனந்தியுங்கள்.
நீடியகாலம் பாவிக்கிறது



விலையோ
மிகக் குறைவு

இறக்குமதியாளர்கள்!
எஸ். யூ. முகம்மது ஹாஜியார்,
70, டாம் வீதி, கொழும்பு. போன்: 7653 ★ 14... 525

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் உள்ள சொல்வளம்

## உருவத்தையும் பருவத்தையும் ஒருங்கே காட்டும் தனிச் சிறப்பு

—கி. ஆ. பெ. விசுவநாதம்—

உலகில் முதன் முதல் மக்கள் பிறந்த நாடு தமிழ்நாடு. அவர்கள் முதன் முதலில் வாய்திறந்து பேசிய மொழி தமது மொழி.

இவ்வுலகில் தோன்றி மறைந்த மொழிகள் பல. இன்றிருப்பன ஏறக்குறைய இரண்டாயிரம். இவற்றுள் வேறு எந்த மொழிக்கும் இல்லாத சிறப்புகள் பலவற்றை தமிழ் மொழி ஒன்று மட்டுமே பெற்றிருக்கிறது. அவை தொன்மைச் சிறப்பு தலைமைச் சிறப்பு, இனிமைச் சிறப்பு, இளமைச் சிறப்பு, எளிமைச் சிறப்பு, ஒலிச் சிறப்பு, உருபுச் சிறப்பு, தொடற் சிறப்பு, பண்புச் சிறப்பு, எழுத்துச் சிறப்பு, சொற் சிறப்பு, பொருட் சிறப்பு, கவிதைச் சிறப்பு, உவமைச் சிறப்பு, இலக்கியச் சிறப்பு, இலக்கணச் சிறப்பு என பதினாறு.

இவற்றுள் சொற் சிறப்பு என்பது தமிழில் ஒரு தனித் தன்மைவாய்ந்தது. இச்சிறப்பைப் பிற மொழிகளிற் காண இயலாது. அம்மொழிகளின் சொற்கள், பல எழுத்துக்களைக் கொண்டு நீண்டு காணப்படும். தமிழில் உள்ள சொற்களிற் சில 7 எழுத்துக்களைக்கொண்டவை பல ஐந்து எழுத்துக்களைக்கொண்டவை. 4, 3, 2 எழுத்துக்களைக்கொண்ட சொற்களே மிகை. ஒரு எழுத்துச் சொற்களும் இல்லாமலில்லை. இதனை ஓரெழுத்து ஒரு சொல் எனவும் கூறுவதுண்டு. அடியில் வருவனவற்றைக் காண்க.

| | | | |
|---|---|---|---|
| ஆ | பசு | ஏ | ஒரு உயிர் |
| கோ | மன்னன் | கை | ஒரு உறுப்பு |
| தா | கொடு | தீ | நெருப்பு |
| தை | மாதம் | நா | காக்கு |
| பை | சாக்கு | பூ | மலர் |
| போ | போக்குதல் | வா | வரவேற்றல் |
| மை | கல்லின்மை | வை | வைக்கச் செய்தல் |

இவையே ஓரெழுத்து ஒரு சொல் என்பன.

தமிழ் எழுத்துக்களின் எண்ணிக்கை 247

தனித் தமிழ் சொற்களின் எண்ணிக்கை ஏற்றவாறு 90,000 இவை எழுத்தின் பெருக்கத்தையும், சொல்லின் பெருக்கத்தையும், தமிழின் வளத்தையும் ஒருங்கே காட்டுவனவாம்.

பிறமொழிச் சொற்கள் உருவத்தை மட்டுமே காட்டக் கூடியன. தமிழ் மொழிச் சொற்கள் உருவத்தையும் பருவத்தையும் சேர்த்துக் காட்டக்கூடியன.

"பெண்" என்பதற்கு ஆங்கிலேயர் "உமன்" என்பர். வடமொழியினர் "ஸ்திரீ" என்பர். இவை இரண்டும் உருவத்தை மட்டுமே காட்டுகின்றன. பருவத்தைக் காட்டுவதாக இல்லை. காட்ட வேண்டுமானல் "யங்" "ஓல்டு" என்பதையும், "பால்ய" "வயோதிக" என்பதையும் சேர்த்துக் கூறியாக வேண்டும். இவை அம்மொழிகளிலுள்ள சொல் வளத்தைக் காட்டுவனவாயில்லை, தமிழில் உள்ள சொற்கள் உருவத்தையும் அதன் பருவத்தைவும் காட்டுவதைக் கண்டு மகிழுங்கள்.

| சொல் | உருவம் | பருவம் |
|---|---|---|
| பேதை | பெண் | 5 வயதுக்கும் கீழ் |
| பெதும்பை | பெண் | 10 வயதுக்கும் கீழ் |
| மங்கை | பெண் | 16 வயதுக்கும் கீழ் |
| மடந்தை | பெண் | 25 வயதுக்கும் கீழ் |
| அறிவை | பெண் | 30 வயதுக்கும் கீழ் |
| தெரிவை | பெண் | 35 வயதுக்கும் கீழ் |
| பேரிளம் பெண் | பெண் | 45 வயதுக்கும் கீழ் |
| மூதாட்டி | பெண் | 60 வயதுக்கும் கீழ் |
| கிழவி | பெண் | அதற்குமேல் |

பெண் என்ன? ஆண் என்பதைத்தான் பாருங்கள்.

| சொல் | உருவம் | பருவம் |
|---|---|---|
| பிள்ளை | ஆண் | குழந்தைப் பருவம் |
| சிறுவன் | ஆண் | விளையாட்டுப் பருவம் |
| பையன் | ஆண் | பள்ளிப் பருவம் |
| காளை | ஆண் | காதற் பருவம் |
| தலைவன் | ஆண் | குடும்பப் பருவம் |
| முதியோன் | ஆண் | தளர்ச்சிப் பருவம் |
| கிழவன் | ஆண் | இறுதிப் பருவம் |

இவை அனைத்திற்கும் "மேல்" எனும் ஆங்கிலச் சொல்லோ, "புருஷன்" எனும் வடமொழிச் சொல்லோ பொருந்துமா? என எண்ணிப் பாருங்கள் இவை அம்மொழிகளின் சொற்பஞ்சத்தையே காட்டுகின்றன.

ஆண், பெண் மட்டுமல்ல 'பூ' என்பதை எடுத்துக் கொள்ளுங்கள் 'புலவர்' என்பர் ஆங்கிலேயர். 'புஷ்பம்' என்பர் வடமொழியினர், அவ்வளவுதான். உருவத்தையும், பருவத்தையும், காட்ட அவர்களிடம் சொற்களில்லை. தமிழிற் பாருங்கள்.

| சொல் | உருவம் | பருவம் |
|---|---|---|
| அரும்பு | பூ | அரும்பும் பருவம் |
| மொட்டு | பூ | மொக்குவிடும் பருவம் |
| முகை | பூ | முகிழ்க்கும் பருவம் |
| மலர் | பூ | மலரும் பருவம் |
| அலர் | பூ | மலர்ந்த பருவம் |
| வீ | பூ | வாடும் பருவம் |
| செம்மல் | பூ | வதங்கும் பருவம் |

எப்படி தமிழில் உள்ள சொல்வளம்? பூவை விட்டு இலையைத்தான் எடுங்கள். வடமொழியினர் இதை 'பத்திரம்' என்பர் ஆங்கிலேயர் 'லீவ்' என்பர். அச்சொற்கள் 'இலை' என்ற உருவத்தையே காட்டுகின்றன; அதன் பருவத்தைக் காட்டவில்லை. தமிழ்ச் சொற்களோ உருவத்தையும் குறித்து, பருவத்தையும் காட்டி, இன்னும் ஒரு படி தாண்டி அதன் வண்ணத்தையும் கூட நினைவூட்டி மகிழ்விக்கின்றன.

(13-ம் பக்கம் பார்க்க)

# நியமன அங்கத்தவர்கள்

## பதவி நாடி ஆளுங் கட்சிக்கு தாளம் போடுவதா கடன்?

## அரசியல் அறிஞர் லாஸ்கி அவர்களுக்கு ஒரு சொல் கூறுகிறார்

இலங்கையின் இன்றைய அரசியல் வரலாற்றிலே, நியமன அங்கத்தவர்களின் 'தொண்டு' சரித்திரமே கண்டிராத மகத்தான ஒரு தொண்டாகும். சமீப காலத்தில். இலங்கையில் அரசாங்கம் நிலைத்திருப்பது நியமன அங்கத்தவர்களினுதரவினுற்றான் என்பது புலனுகியுள்ளது. நியமன அங்கத்தவர்கள் செய்த பெருந் 'தொண்டு'களிலே—செ[illegible]ல்களிலே இதுதான் மகத்தானது; மனச்சாட்சியை விற்று அரசாங்க சார்பாகத் தம் கைகளை உயர்த்தியது!

### அரசாங்கமும் நியமன அங்கத்தவர்களும்

30-10-59-ல் எதிர்க் கட்சி கொண்டுவந்த நம்பிக்கையில்லாத் தீர்மானம், ஐந்து வாக்குகள் பெரும்பான்மையினுல் தோல்வியடைந்தது எதனுல்? நியமன அங்கத்தவர்களால்தான். தங்களது 'ஒப்பற்ற' ஆறு வாக்குகளையும் அரசாங்கத்திற்கு அளித்துத் தம் மனச்சாட்சியை அடகு வைத்தார்கள். இவ் ஆறு கரங்களும் உயர்த்தப் பட்டிருக்காவிடில் அரசாங்கம் இன்று நிலைத்திருக்க வழியே இல்லை. அரசாங்கம் நிலைத்திருப்பதற்கு அரிய தொண்டாற்றிய நியமன அங்கத்தவர்களைப்பற்றிநாம றியவேண்டியது அவசியம். இவர்களின் நிலைமை என்ன? கடமைகளென்ன? என்பன போன்ற விவரங்களை கீழே ஆராய்வோம்.

### சிறுபான்மை சமூகத்தினர்

சிறுபான்மையினருக்கு, சன நாயக நாடுகளில் பாது காப்பளிப்பதற்குப் பல வழி வகைகளைக் கையாளுகின்றுர்கள் அவைகளில் ஒன்று, சிறுபான்மையினரின் நலவுரிமைகளைப் பேணுவதற்காக ஒருகுறித்த தொகை அங்கத்தவர்களைச் சட்டசபைக்கு நியமிப்பதேயாகும் இந் நியமன அங்கத்தவர்கள் நாட்டினரசாங்கத்தில் முக்கிய தானத்தை வகிக்கின்றுர்கள்.

இலங்கையில் சிறுபான்மைச் சமூகத்தவர் நாட்டின் பல்வேறு பாகங்களில் வசித்துவருவதால் தனியங்கத்தவர் தொகுதிகளை நிர்ணயிப்பது சிக்கலான விடயமாகும். இதனுற்றான் இலங்கை அரசியல் திட்டத்தில் சிறுபான்மையோருக்குப் பிரதி நிதித்துவ மளிப்பதற்காக ஆறு நியமன ஸ்தானங்கள் சட்டசபையில் ஒதுக்கப்பட்டிருக்கின்றன.

இச் சிறுபான்மைச் சமூகத்தவருள் முக்கியமானவர்கள் பறங்கிக்காரர், ஐரோப்பியர் மலாயாக்காரர், மலை நாட்டுத் தமிழர் முதலியோராவர். இவர்கள் தங்களது நல உரிமைகளைப் பேணுவதற்காக, நியமன அங்கத்தவர்களாக நியமிக்கப்படுகின்றுர்கள். இவர்கள் பிரதம மந்திரியின் ஆலோசனைப்படி, மகா தேசாதிபதியால் நியமிக்கப் படுகின்றுர்கள்.

### அறிஞர் கூற்று

நியமிக்கப்பட்ட அங்கத்தவரது பிரதான கடமை [illegible] யர் லாஸ்கி கூறுகிறார்:

"ஒரு தெரிவு செய்யப்பட்ட அங்கத்தவரின் பிரதான கடமை ஆளுங் கட்சியின் ஊழியராகத் தொகுதியில் கடமையாற்றுவது அன்று. தனது அறிவு விவேகத்திற் கேற்ப—மனச் சாட்சிக்கேற்ப—சிறந்த முறையில் தொண்டாற்றுவதேயாகும்".

லாஸ்கியின் கூற்றுப்படி இலங்கையின் நியமன அங்கத்தவர்கள் நடந்து கொண்டார்களா? இல்லை! அறிவு

க. தவேந்திரராஜா

விவேகமா?— ஆளுங்கட்சிக்குதவிப் பந்தம் பிடிப்பது என எண்ணினர். மனச்சாட்சியா—? அது விலை கூறி விற்கப்பட்டது!

ஒரு பிரதிநிதி தமது வாக்காளருடன் நெருங்கிய தொடர்பேற்படுத்திக் கடமையாற்ற வேண்டுமென்றும், தேசம் முழுவதற்கும் எதிரான செயலொன்றையும் ஒரே நேரத்தில் செய்யக் கூடாதென்றும், அவர் பாராளுமன்றத்தின் அங்கத்தவராக வேதெரிவு செய்யப்படுகிறுரென்றும், தொகுதியங்கத்தவராக மாத்திரம் தெரிவு செய்யப்படுவதில்லை என்றும் பேர்க் என்ற அரசியல் ஞானி கூறுகிறுர்.

இலங்கையின் நியமன அங்கத்தவரும், குறித்த சமூகத்தினரின் பிரதிநிதியாகக் கடமையாற்றும் போது ஏனைய சமூகத்தவருக்குப் பாதகமான முறையில் செயலாற்றக் கூடாது. தத்தம் சமூகத்தினரின் நலவுரிமைகளுக்கு உழைக்கும் போது பாராளுமன்ற அங்கத்தவர் என்பதை மறந்து விடக் கூடாது. மக்களின் பகைமைக்காளாகாமல் சுதந்திர ரீதியாக முடிவிற்கு வருமுரிமை நியமன அங்கத்தவருக்கிருக்க வேண்டும். ஆனுல்—

இலங்கையில் நியமன அங்கத்தவர்கள் இத்தகைய மகத்தான சாதனை எவற்றையும் நிலை நாட்டியதாகத் தெரியவில்லை; ஆளுங் கட்சிக்கே ஆதரவாளர்களாக—உயிர் நாடியாக—இவர்கள் இருந்து வருகிறுர்கள்.

### பதவிப்பித்து

ஆளுங்கட்சியை எதிர்த்தால் மீண்டும், மீண்டுந் தமக்குப் பதவி கிடையாதென, அஞ்சியே அவ்வாறு செய்கின்றனர் என்று நம்ப வேண்டியிருக்கிறது. பதவிக்காகத் தங்கள் சுதந்திரத்தையும், வாக்கையும் விற்கின்றுர்கள்.

நியமன அங்கத்தவர்கள் கட்சிவசப்பட்டோ, வேறு குறுகிய மனப் பான்மை கொண்டோ கடமையாற்றுமல் தமது சமூகத்தவர் எல்லோருக்கும் பிரதிநிதியாக உழைக்க வேண்டும் அரசியல் கட்சிகளை ஆதரித்துத் திறமையற்ற முறையில் கடமையாற்றக் கூடாது. ஆளும் அரசியல் கட்சியின் கைப் பொம்மைகளாக இவர்கள் [illegible]றினுல்எவ்வாறு தத்தம் சமூகத்தவருக்காக உழைக்க இயலும்?


### பிரதிநிதித்துவம்

பாராளுமன்றத்தில் நியமன அங்கத்தவர்களுக்கு இடமளிக்கக் கூடாதென வாதிப்போருமிருக்கிறுர்கள். பல நாடுகளின் பாராளுமன்றங்களில் நியமன அங்கத்தவர்களில்லை. அரசியல் கட்சிகள் நன்கு விருத்தியடைந்த நாடுகளில் சிறு பான்மையோருக்கு இனமொழி, கலாச்சார அடிப்படையில் தான் பிரதிநிதித்துவமளிக்க வேண்டுமென்ற அவசியமில்லை. சமஷ்டியமைப்பு மூலமும், மேற் சபை மூலமும், பல அங்கத்தவர் தொகுதிகள் மூலமும் அலலது வேறு வழிகளிலும், சிறுபான்மையினருக்குப் பாது காப்பளிக்கலாம்.

(13-ம் பக்கம் பார்க்க)


இந்தியாவின் உயர்ந்த ரக உற்பத்தி!
மங்கையர் மனதுக்குகந்தது

உஷா தையல் மெஷின்களே




● ஒருவரின் ஆயுள் காலம்முழுவதும் உழைக்கக்கூடிய வெகுமதி

● மாதத் தவணைக் கட்டணங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

● இலங்கை பூராகவும் விற்பனையாகிறது.

● உங்கள் உள்ளூர் விற்பனையாளர்களைக் கேளுங்கள்.

சோல் ஏஜண்டுகள்:
ரெய்மூசன்ஸ் லிமிட்டெட்,
88 A, மெயின் வீதி, கொழும்பு-11
போன்: 4243, 5060

கல்கத்தாவிலுள்ள இந்தியன் என்ஜினியரிங் எக்ஸ்போர்ட் புரொமோஷன் கவுன்ஸிலால் நடாத்தப்படுவது


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org



"பாகப் பிரிவினை" என்ற படத்தில் எம். ஆர். ராதாவும், பத்மினி பிரியதர்சினியும்.

## நடிகர் திலகம் இலங்கை வருகை

வெற்றி முரசு கொட்டும் வீரபாண்டிய கட்டபொம்மன் படத்தின் 100-வது காட்சி நாள் விழாவில் கலந்து கொள்ள நடிகர் திலகம் சிவாஜி கணேசன் இலங்கை வருகிறார். 28-11-59 சனிக்கிழமை பகல் 1-30 மணிக்கு இரத்மலானை விமான நிலயத்தில் வந்து இறங்கும் அவர் மறு



நாளே தாயகம் திரும்புகிறார்.

அவரோடு கட்டபொம்மன் படத் தயாரிப்பாளர்-டைரக்டர் பந்துலுவும், சக்தி கிருஷ்ணசாமியும் வருகிறார்கள். அவரும் சனிக்கிழமை கொழும்பு எல்பின்ஸ்டன், கெயிட்டி ஆகிய தியேட்டர்களில் எல்லாக் காட்சிகளின் போதும் மேடையில் தோன்றி ரஸிகர்களை மகிழ்விப்பார்கள் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

—

நாடக விமர்சனம்:

## கட்டபொம்மன்

நீர்கொழும்பு அர்ச் மரியாயின் கல்லூரி மாணவர்கள் அணிமையில் நடித்துக் காட்டிய வீரபாண்டிய கட்டபொம்மன் நாடகம் பார்த்தோரை கட்டபொம்மன் காலத்துக்கே அழைத்துச் சென்றது எனலாம். ஆடை அணிகளும், ஒப்பனையும், காட்சி அமைப்புகளும் அவ்வளவு சிறப்பாக இருந்தன.

இவற்றிற்கு எதிர்மாருக ஒலி அமைப்பு இருந்தது. ஒளி அமைப்பு பாராட்டுக்கு உரியது. இசை அமைப்பு எடுபடவில்லை.

நடிப்பு பொதுவாகக் கம்மி. கட்டபொம்மனுகக் கமலநாதனும், ஊமைத்துரையாக ராமநாதனும், மந்திரி தானுபதிப் பிள்ளையாக ஆனந்தசிவமும், பானர்மேனுக விஜயரத்தினமும், எட்டப்பனுக அலெக்சாண்டரும் நடித்தார்கள்.

இந்த நாடகத்தை அரங்கேறப் பல வகைகளிலும் உழைத்தவர் ஆசிரியர் சோமாஸ்கந்தர் என்று தெரிகிறது. எத்தனை குறைகள் தாம் இருந்தபோதிலும் அவரின் உழைப்பு வீண் போகவில்லை என்பதை மட்டும் உறுதியாகச் [illegible] வாம்.

—எஸ். என். ஆர்.

## நாகர்கோயில் மகாதேவன் இசைக் கச்சேரி

நாகர்கோயில் திரு. கே. மகாதேவன் சினிமாவில் பாடிப் பெயர் எடுத்தவர். கொழும்பு கமலா மோடி மண்டபத்தில் ரஸிகர்கள் முன்னிலையில் கடந்த வாரம் பாடினார். எடுத்த பெயர் இன்னமும் நிலைத்திருக்கிறதா என்று கேட்க வேண்டிய தர்ம சங்கடம் ஏற்பட்டுவிட்டது.

இதற்கு அவரைக் குறை கூறிப் பயன் இல்லை. சுமார் மூன்றரை மணி நேரம் பந்துவராளி கல்யாணி ராகங்களும் இன்னும் சிலவும் சுத்தமாகப் பேசச் சுருதி கூட்டிப் பாடத்தான் செய்தார். இசை ஞானமும், இதமான சாரீரமும் இருந்தால் போதுமா? பாடுவதற்கு உற்சாகமும் வேண்டுமே. அதை அளிக்க நிறைந்த சபையல்லவோ அவசியம்.

கச்சேரியை ஏற்பாடு செய்தவர்கள் போதிய விளம்பரம் கொடுத்திருந்தால் மகாதேவனின் மானம் காப்பாற்றப்பட்டிருக்கும்; ஏற்கனவே அவர் தேடிவைத்த புகழுக்கும் பங்கம் வந்திருக்காது. கச்சேரியை ஒழுங்கு செய்தவர்களுக்கும் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கும் பத்திரிகைக்காரர்களுக்கும் மட்டும் பாடு என்று அவரை வற்புறுத்தினுல் பெயருக்கு பாட்டு வரலாம் ஆனுல் அதில் ஜீவன் கலந்திருக்காதே. கேட்ட குறுகிய வட்டத்தினர் சம்பிரதாயத்துக்கு "சபாஷ்" போடுவதும் கை கொட்டுவதும் வேறு விஷயம்.

இருந்தவர்கள் தமது ரஸிகத்தன்மையைப் புலப்படுத்த சினிமாப்பாடல்கள் பாடும்படியும் அவரைக் கேட்டார்கள். காலி நாற்காலிகள் கண்களை உறுத்த அவற்றையும் பாடினார் திரு. மகாதேவன். பாவம், நாடு விட்டு நாடு வந்த நல்ல பாடகருக்கு ஈழத்திலுள்ள நாம் இந்த வரிசை கொடுத்திருக்கத் தேவையில்லை.

அன்று பக்கவாத்தியம் இசைத்த இலங்கை வானெலி வாத்தியக் கோஷ்டியினரும் (திரு ஜி. சண்முகானந்தம் வயலின், திரு. டி. இரத்தினம் மிருதங்கம், திரு. கே. கே. அச்சுதன் கடம்) தமது கைவரிசையைக் காட்டத் தவறியிருந்தால் அவ்வளவுதான். விளக்கம் வேண்டியதில்லை என்று நம்புகிறேம்.

—கே. கே. ஆர்.

## படத்துறையில் அதிசய சாதனை

முதல் நாள் படம் பிடித்து அடுத்த நாள் திரையிடும் அதிசயம் சோவியத் நாட்டில் நடந்தது. சுமார் இரண்டு மணி நேரம் ஓடும் படத்தைப் பிடித்த மறுநாளே மாஸ்கோவில் திரையிட்டார்கள்.

ருஷியாவில் ஆண்டுதோறும் நடக்கும் அக்டோபர் புரட்சி தின வைபவங்கள் பற்றிய படம் இது. இந்தப் படத்தைப் பிடிப்பதற்கும் தயாரித்து வெளியிடுவதற்கும் சுமார் 150 பேர் மட்டுமே உழைத்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

—

## ஞாயிறு நாட்டிய விருந்து

யாழ் சகோதரிகள் என்று அழைக்கப்படும் நீலா, தயா, ஈஷா ஆகியோரின் நாட்டிய நிகழ்ச்சி 29-11-59 ஞாயிறின்று கொழும்பு லயனல் வெண்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற விருக்கிறது.

இவர்கள் மூவரும் எதிர்வரும் டிசம்பரில் இந்தியா சென்று சென்னை சங்கீத அக்கடமி உட்படப் பல பிரபல கலா ஸ்தாபனங்களில் நடனம் ஆடுவதற்கு ஏற்பாடு



திருமதி. நீலா சத்தியலிங்கம்

செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பது தெரிந்ததே. இலங்கையில் இம் மூவரும் சேர்ந்து ஆடுவது இதுவே கடைசி முறையாக இருக்கும் என்று அறிய வருகிறது. ஆடுவதற்கு வேற்று நாடு செல்லும் நம்மவர்களின் தகுதி காண இது ஒரு நல்ல சந்தர்ப்பம் அல்லவா!

—

## விஜயகுமாரியின் கண்டிப்பு

இலட்சிய நடிகை விஜயகுமாரி தாம் கண்டிப்பான பேர்வழி என்பதை ஜயந்திரிபுக்கு இடமில்லாமல் காட்டிவிட்டார். நடிகைகளை 'வந்தாள்', 'போனுள்', சொன்னுள்", என்று இப்படியே "ள்" போட்டு அவமானப்படுத்தும் பத்திரிகைக் காரருக்குத் தாம் பேட்டி அளிக்கப் போவதில்லை என்று திட்டவட்டமாகச் சொல்லிவிட்டார்.

நடிகை விஜயகுமாரி தினத்தந்திக்கு பேட்டி அளிக்க மறுத்ததைத் தொடர்ந்து சுதந்திரன் சென்னை நிருபர் விஜயகுமாரியை சந்தித்து பேசியபோது விஜயகுமாரி மேற்படி தகவலை வெளியிட்டார். தினத்தந்தி "ள்" க்குப் பதிலாக "ர்" போடுமானுல் தாம் [illegible] தயார் என்றும் அவர் சொன்னார்.

விமர்சனம்:

# பத்மினி தஹநாயகா நாட்டிய விருந்து

கமலா ஹரிஹர ஐயரும் பகவதி ரங்கராஜனும் தீங்குரலில் தமிழிசைப் பதம் பாட இலங்கை வானெலித் தமிழ் பகுதி வாத்தியக் கோஷ்டியினர் அனுசரணையாக இன்னிசை வழங்கப் பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த பத்மினி தஹநாயஹா கடந்த புதன் கிழமை கொழும்பு ரேயல் கல்லூரி மண்டபத்தில் தேர்ந்த நடன இசை வழங்கினார். பார்க்கப் பெருமையாக இருந்தது.

பரதநாட்டியத்தோடு கதகளி நடனமும் மணிப்புரி நடனமும் ஆடினார். பொன்நிற மேனிக்கு பொருத்தமான ஆடையணிந்து மெல்ல வந்து முல்லை நகை காட்டுவதோடு சபையை அடிமைப்படுத்திக்கொள்கிறார். அதிலிருந்து விடுபட்டு, பெருமை எண்ணத்துக்கும் ஓய்வு கொடுத்துவிட்டு ஆட்டத்தைப் பார்த்தால் "பூ......இவ்வளவுதானு?" என்ற உணர்வு தலையெடுக்கிறது.

லளிதமும் லாகவமும் ஓரளவு குறைந்த கதகளி, மணிப்புரி நடனங்களில் பத்மினி தஹநாயகா சோபிக்கிறார். பரதநாட்டியத்தில் பாவமும் நளினமும் கற்பனை வளமும் போதுமான அளவு இல்லை. எல்லாவற்றிற்கும் மேலாக அவருக்கு பரதநாட்டியம் ஆடுவதற்கான தெம்பு (Stamina) வேண்டிக்கிடக்கிறது குறிப்பாக, முதல் ஆட்டமான அலாரிப்பு இக்கட்டு இல்லாமல் நடந்தது. தொடர்ந்து வந்த ஜதிஸ்வர ஆட்டத்தில் அசந்துபோனார். சிறிது ஓய்வுக்குப் பின்னர் வந்தது பதம். சிறிதளவு செய்து தப்பினார். அடுத்து வந்தது தில்லானு. ஆளையே கொல்லாமல் கொன்றுவிட்டது நெஞ்சும் கும்பியும் விம்மிப் புடைக்க மேல்மூச்சுக் கீழ்மூச்சு வாங்கினார். சிறுமி, பாவம், பார்க்கப் பரிதாபமாக இருந்தது.

இந்தக் குறைபாடு இருப்பதை உணர்ந்து வேண்டிய ஆயத்தங்களோடு மேலும்



செல்வி. பத்மினி தஹநாயகா

மேடையில் ஆடிப் பரிச்சயம் ஏற்பட்டால் அது தீர்ந்து போகலாம். எப்படியும் பத்மினி தஹநாயகா இந்தத் துறையில் இவ்வளவு முன்னேறியதே பாராட்டுக்கு உரியதுதான். அவருக்கு நல்ல எதிர்காலம் உண்டு என்று துணிந்து கூறலாம்.

கச்சேரியை திருவாளர்கள் எம். எஸ். எம். சலீமும், மொரிஸ் தஹநாயகாவும் ஒழுங்கு செய்திருந்தார்கள். நாட்டின் பிரதமரும் பல்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களும் திரளாக வந்திருந்து நடனத்தைப் பார்த்து ரஸித்தார்கள்.

—கே. கே. ஆர்.

## தமிழ்ப் பட வருமானம்

தமிழ் நாட்டில் தயாரிக்கப்பட்டு இலங்கையில் திரையிடப்படும் தமிழ்ப் படங்களால் இந்தியாவுக்கு வருடம் ஒன்றுக்கு 25 லட்சத்துக்கு மேல் வருமானம் கிடைத்து வருகிறது.

1956-ல் ரூபா 28,66,517ம் 1957-ல் ரூபா 35,96,584ம் கடந்த வருடத்தில் ரூபா 22,75,421ம் இந்தியாவுக்கு இலங்கையிலிருந்து வருமானமாகக் கிடைத்திருக்கிறது. இந்த ஆண்டு வருமானம் முந்திய வருடங்களில் உள்ள தொகையைக் காட்டிலும் அதிகமாக இருக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.



"கலைவாணன்" என்ற படத்தில் அஞ்சலிதேவியும், நாகேஸ்வரராவும் தோன்றும் ஓர் காட்சி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழில் உள்ள சொல்வளம்

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

| சொல் | உருவம் | பருவமும் வண்ணமும் |
|---|---|---|
| தளிர் | இலை | குழந்தைப்பருவம் சாம்பல் வண்ணம் |
| கொழுந்து | ,, | இளமைப் பருவம் வெள்ளை வண்ணம் |
| இலை | ,, | நடுப் பவரும் பச்சை வண்ணம் |
| பழுப்பு | ,, | முதுமைப் பருவம் மஞ்சள் வண்ணம் |
| சருகு | ,, | கிழட்டுப் பருவம் சிவப்பு வண்ணம் |

தமிழில் உள்ள இச் சொற்கள் உருவம், பருவம், வண்ணம் ஆகிய மூன்றையும் ஒருங்கே காட்டுவதைக் கண்டுகளியுங்கள்.

### சொற் கொலைகள்

"GEM" என்று எழுதி அதையே ஜெம் என்றும் செம் என்றும் படிப்பர்...... "TALK" என்று எழுதி டாக் என்றும், "WALK" என்று எழுதி வாக் என்றும் படிப்பர் ஆனல், அதில் டால்க் என்றும் வால்க் என்றுமே இருக்கும். ஸ்ரேடயன் "STATION" என்று எழுதி அதை ஸ்டேசன் என சொல்லச் சொல்லுவர். SAN என்றும் SON என்றும் SUN என்றும் எழுதி இவை அனைத்தையுமே "சன்" எனப் படிக்கச சொல்லுவர். இத்தகைய சொற் கொலைகள் தமிழில் இல்லை.

### சொற் பஞ்சம்

அரிசியைக் குறிக்கும் ஆங்கிலச் சொல் "ரைஸ்" என்பது சோற்றைக் குறிக்கும் சொல்லும் "ரைஸ்"தான். இது ஆங்கில மொழியின் சொற் பஞ்சத்தையே காட்டுகிறது. இதனல் அரிசி கேட்பவர்களுககுச சோறும், சோறு கேட்பவர்களுக்கு அரிசியும் கிடைத்துவிடலாம்! உணவு விடுதிகள் பலவற்றில் "சோறு" எனக்கூறி வேகாத அரிசியையே படைக்கின்றனர். வயிறெறிந்த மக்கள் இது என்ன? எனக் கேட்டால் "ரைஸ்" என்கின்றனர்! இதை யாரால் மறுக்க முடியும்? இதுபோன்ற துன்பங்கள் தமிழ்ச்சொற்களால் வருவதில்லை.

### இருவகைச் சொற்கள்

தமிழில் பல பொருள் குறிக்கும் ஒரு சொல் என்றும், ஒரு பொருள் குறிக்கும் பல சொல் என்றும் உண்டு. "மா" என்பது ஒரு சொல், அது பல பொருள்களைக் குறிக்கும் அவை அழகு, அளவு, அறிவு, ஆணி, இடித்த மா, இடை, கட்டு கறுப்பு, ஒரு மரம், குதிரை, சீலை, செல்வம, தாய, நஞ்சுக்கொடி, நிறம், பரி, பெருமை, மேன்மை, வண்டு வயல், வலி, விலங்கு முதலியன.

அடுத்து, ஒரு பொருள் குறிக்கும பல சொற்களாவன வேழம், களிறு, கரி, கை, மா, நடை மலை, கை மலை, கறையடி, ஒருத்தல், அறுகு, ஆம்பல், நமதி, துபபி, துங்கல என்ற இச் சொற்கள் அனைத்தும் "யானை" ஒன்றையே குறிப்பன இவை தமிழின் சொல்வளத்தைக் காட்டுவனவாம்.

### ஒரு உதாரணம்

"இராம ஜெயம்" என்பது வட மொழியிலுள்ள இரு சொற்களைக் கொண்ட ஒரு சொற்றொடர், இதன் பொருள் என்ன? இது வேற்றுமை யுருபு அற்றது ஆதலின் பொருளை விளக்காது நிற்கிறது. தமிழில் வேற்றுமை யுருபு கலப்பதால் அது பொருளை நன்கு விளக்கிக் காட்டுகிறது.

| | |
|---|---|
| இராமனை | வெற்றி, |
| இராமனல் | வெற்றி, |
| இராமனுக்கு | வெற்றி, |
| இராமனின் | வெற்றி, |
| இராமனது | வெற்றி, |
| இராமனே | வெற்றி |

எனக் கூறலாம்.

"இராம ஜெயம்" என்பது இதில் எதைக் குறிக்கிறது? தமிழில் உள்ள சொல் வளத்தையும் பிற மொழிகளிலுள்ள சொற் பஞ்சத்தையும் காட்ட இது ஒன்றே போதுமானது.

### உரிமை

"தமிழ் வளம் பெற்ற ஒரு மொழி. அதன் சொற்சிறப்பு ஒரு தனிச் சிறப்பு. அது என் தாய்மொழியாதலின் நான் பெருமையடைகிறேன்" என்று கூற ஒவ்வொரு தமிழனுக்கும் உரிமையுண்டு. அவ்வாறு நெஞ்சுநிமிர்ந்துநின்று கூறத் தகுதியும் உரிமையும் உடையவன் தமிழன் ஒருவனே. ஆகவே,

"வானம் அளந்ததனைத்தும்
அளந்த தமிழ் எங்கள் தமிழ்!
வானம் அறிந்ததனைத்தும்
அறிந்த தமிழ் எங்கள்
தமிழ்!"

என்றும்,

"எங்கள் தமிழ் மொழி
எங்கள் தமிழ் மொழி
என்றென்றும் வாழியவே. அது
எங்கும் பரவிச் சுடரொளி வீசி
எழிலுடன் வாழியவே"

என்றும் வாய்திறந்து கூறுங்கள்.

வாழட்டும் தமிழ் மொழி!
வளரட்டும் தமிழ்ச்சிறப்பு!

# நகைச்சுவை நாடகம்

கொழும்பு அமெச்சூர் நாடகக் குழுவினர் 28-11-59 சனிக்கிழமை நகைச்சுவை நாடகம் ஒன்றை நடத்துகிருர்கள். பெயர் "டாக்டர் கல்யாணம்".

லயனல் வென்ட் ஞாபகார்த்த மண்டபத்தில் மாலை 6-மணிக்கு இந்நாடகம் நடைபெறுமென்று நாடகப் பொறுப்பாளர் திரு இராம் சுந்தரலிங்கம் சுதந்திரனுக்கு அறிவித்திருக்கிருர்.

# உலக முதல்வன்

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

ஆனல், 'உலகம் இறைவனை முதலாக உடையது; உலக முதல்வன் இறைவன்' என்று கூறுகின்றுர் திருவள்ளுவர் 'இறைவன், உலகையாளும் தலைவன் மட்டுமல்லன்; உலகத்துக்குக் காரணமான, அடிப்படையான, முதல்வன் அவனே' என்பது திருவள்ளுவர் கருத்தாகும்.

"...ஆதி பகவன் முதற்றே உலகு"

உலகம் இறைவனை முதன்மையாகவுடையது; உலக முதல்வன் இறைவனுவான்.

இதை ஓர் உவமையால் தெளியவைக்கிருர் வள்ளுவர்.

"அகர முதல எழுத்தெல்லாம்"

'எழுத்துக்களெல்லாம் அகரத்தை—'அ'வை—அடிப்படையாக, முதன்மையாக, உடையன. அதைப்போலவே உலகம், இறைவனை முதன்மையாகவுடையது' என்பது, திருவள்ளுவரின் முதற் குரலாகும்,

"அகர முதலே எழுத்தெல்லாம் ஆதி
பகவன் முதற்றே உலகு"

—தமிழ்மறை க.

—பா. ஆறுமுகம்

# நியமன....

(11-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஆபத்து

இலங்கை அரசியல் சட்டத்தைத் திருத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை அங்கத்தவர்களின் ஆதரவு தேவை. இந்நிலையில் 101-அங்கத்தவர்கள் இருக்கின்ற ஒரு சபையில், 6-நியமன அங்கத்தவர்களுமிருப்பார்களேயானுல், 62- அங்கத்தவரின் ஆதரவுடன் பதவி வகிக்கும் அரசாங்கத்திற்கு என்றும் மூன்றில் இரண்டு பெரும் பான்மை ஆதரவு இருக்கவே செய்யும். இந்த ஆபத்தில் அரசியல் திட்டம் சிக்காமலிருக்க வேண்டுமானுல், நியமன அங்கத்தவர்கள் பதவி வேட்கையற்று, சுதந்திரத்தோடு, மனச்சாட்சியை நீதிபதியாக்கி, நாட்டின் நலன் கருதித் தங்கள் விலை மதிப்பற்ற வாக்குகளை உபயோகிக்க வேண்டும்; அப்போது தான் நியமன அங்கத்தவர்கள் தமது கடமையைச் செய்தவர்களாவார்கள்.

கல்வியே கருந்தனம்


சிவாஜி கணேசன் வருகிருர்!
எல்பின்ஸ்டன் ★ கெயிட்டி
28-ம் தேதி சனிக்கிழமை
100-வது நாள்
வீரபாண்டிய கட்டபொம்மன்
3 காட்சிகள் பி. ப. 2, மாலை 6, இரவு 9-30
கட்டபொம்மன் 100-வது நாள் காட்சியில் கலந்து கொள்ள கட்டபொம்மன் சிவாஜி கணேசன், நவம்பர் 28-ம் தேதி சனிக்கிழமை 1-30 க்கு வருகிருர். தயாரிப்பாளரான பந்துலுவும்—நடிகர் எஸ் கிருஷ்ணசாமியும் இங்கு வருகை தருகிருர்கள்! 29-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை இந்தியா திரும்புகிருர்கள்.



இப்பொழுது காண்பிக்கப்படுகிறது!
சென்ட்ரல்
(மருதானை)
எம். ஜி. ராமச்சந்திரன்,
வீரப்பா, தங்கவேலு,
அஞ்சலிதேவி, வரலக்ஷ்மி
நடிக்கும்
சக்கரவர்த்தி திருமகள்





முருகன் (ஜிந்துபபிட்டி)
சிவாஜி கணேசன்-சந்திரபாபு
மாலினி-சரோஜாதேவி
நடிக்கும்
சபாஸ் மீனு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒளவை அமுதம்: 15.

## ஙப்போல் வளை

ஙகரம் உயிர்மெய் எழுத்துக்களில் ஒன்று இவ்வெழுத்துத்தான் பிரயோசனமற்ற தன் வர்க்கத்தைத் தழுவுதல்போல நீயும் பிரயோசனமுள்ளவனுயிருந்து உன் இனத்தைத் தழுவு என்பது இதற்குப் பொருள்.

'ங்' என்ற மெய்யெழுத்து உயிரெழுத்துக்களுடன் சேரும்போது பிறக்கும் அத்தனை உயிர்மெய் எழுத்துக்களுள்ளும் ஙகரமே பிரயோசனமுள்ளதாக இருக்கக் காண்கிறோம். அதன் வர்க்கங்களாகிய ஏனைய எழுத்துக்கள் எந்த வகையிலும் பிரயோசனப்படுவதில்லை. இருந்தும் ஙகரத்தின் காரணமாக அதன் ஏனைய வர்க்க எழுத்துக்களும் தமிழ்நெடுங் கணக்கில் இடம் பெறுகின்றன.

குடும்பமொன்றில் எல்லோரும் ஒரேமாதிரி இருப்பதில்லை. குணம், கல்வி, செல்வம் முதலியவற்றில் வேற்றுமையும் முரண்பாடும் இருக்கும். எவை எப்படி இருப்பினும் நல்ல குணம், செல்வம் படைத்த ஒருவனே தன் குடும்பத்துக்குப் பேரும் புகழும் தேடிக்கொடுக்கலாம்.

பணம் கிடைத்ததும் தம் ஏழைப் பந்துக்களைச் சிலர் ஏறெடுத்தும் பார்ப்பதில்லை. கல்வி கிடைத்தபோது சொந்தம் கொண்டாட எத்தனையோ பேர் தயங்குகின்றனர். ஏழைக் குடியானவன் ஒருவனைத் தன் தம்பி அல்லது அண்ணன் என்று பேசிக்கொள்ள எந்தச் செல்வந்தனுக்கும் மனம் ஏவுவதில்லை. எழுத்தறியா எவனையும் 'என் அய்யா, என் மாமா' என்று பேசிக்கொள்வதில் எத்தனையோ பேர் சோம்புகின்றனர்.

பணமும் கல்வியும் பெற்ற ஒருவன் தன் இனத்தவர்களுக்கும் பிறருக்கும் உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கிருன். இழைத்துப்போன குடும்பத்தாரை உயர்த்தி வைப்பதனுல் தனக்கும் தன் சுற்றத்துக்கும் மதிப்பும் நன்மையும் தேடிக்கொள்ளலாம். நாம் பிறருக்கு உதவும்போது அவர்கள் எம்மை மட்டுமல்லாது எம் இனபந்துக்களையும் தழுவுவார்கள்.

தன் குடும்பத்துக்குப் பேரும் புகழும் தேடிக்கொடுக்கும் ஒருவனின் பிறப்புத்தான் 'பிறப்பு' மற்றெல்லாம் வீண் பிறப்பு.

—ஏ. ஜீ. ஆனந்தம்




## சீதனப் போர்

—மதியமுதன்—

ஈழவள நாட்டிலேஇன்று நேற்றல்ல; பல நூற்ருண்டுகளாக மாருது-மடியாது வளம் பெறுவது "சீதனம்." இதனுல இன்னலடையும் ஏழைப் பெற்ருேர்களோ அதிகம் வாழ்வை இழந்து வாடும் பருவமங்கைகளோ! எண்ணிலடங்கார். சீதனப் பேயின் வாயிலிருந்து வளமான வாழ்வு பெறத் துடிக்கின்றனர் மக்கள். அவர்களுக்கு இன்றைய இளைஞர்களாகிய எம்போன்றவர்களாற்தான் விடிவுண்டு. திரண்டு வாருங்கள் 'சீதனப் போர்' தொடுப்போம்!

மனிதனை உருக்குலைக்கின்ற கடுங் கோபம் போன்ற வறுமையின் கொடுமை, வஞ்சனையும், பொய்யும் நெருப்பாக உருக்கொள்ளும் காலம். கூட்டினிலே பூட்டப்பட்ட பைங்கிளிபோன்று; பெண்மையைக் கொன்றழிக்கும் சீதனம் என்னும் பேயை எதிர்த்துப் போராடுங் காலம். வானோங்கி வளர்ந்த வளமற்ற காட்டிலே பொழியும் பொன்னிலவுபோல; படித்த இளம் வாலிபர்களாகிய நாம் வாழ்தல் நன்ரு? இதோ பாய்ந்து வரும் ஈட்டியாக மாறிச் சீதனக்கொடும் பேயை இப்போதே விரட்டியடித்து எம் உயிரான நாட்டைக் காப்போம்.

எழில் குலுங்கும் மலர்ப் பொழிலிலே வாரித் தேனையெடுக்கும் வண்டுகள்போல; வாழ்வு என்ற மலர்ப் பூங்காவிலே 'அன்பு' என்னும் தேனைச் சேர்ப்போம். புண்ணியமான இச் சேவை தனில் இன்பங் கண்டு, பூமியிலே நாம் புதிய மேலுலக இன்பமடைவோம். குருடர்களாய் இதயங்களைக் கல்லாக்கி பூமியில் ஏழைதுயர் அறியார் எண்ணத்தையெல்லாம் போக்கிடுவோம். கருணைச் சிந்தை ஈகையினுலெம் உயிரைவிட மேலான நாட்டைக் காப்போம். வாரீர்! வாரீர்!! என ஒரு இளம்வண்டமிழ்க் கவிஞன் தீட்டியுள்ள தீந்தமிழ்க் கவிதை இதோ இருக்கிறது.

"வாட்டுகின்ற வெஞ்சினம்போல்
வறுமைக் கோரம்
வஞ்சனைபொய் தீயெனவே
மூளும்நேரம்
கூட்டினிலே பைங்கிளிபோற்
பெண்மைக் கோலம்
கொன்றழிக்குஞ் சீதனப்
போராடுங் காலம்
காட்டினிலே பொன்மதியங்
காய்தல்போலே
கற்றுமிளங்காளையர் நாம்
வாழ்தல் மேலோ
ஈட்டியெனப் பாய்ந்திடுவோங்
கொடுமைப்பேயை
இக்கணமே சாய்த்துயிராம்
நாட்டைக் காப்போம்.

வண்ணமலர்ச் சோலைத்
தேனீக்கள் போல்
வாழ்வுமலர்க் காவினிலே
அன்பைச் சேர்ப்போம்
புண்ணியமாஞ்சேவை தனின்பந்
தேக்கிப்
பூமியிலே நாம் புதிய
சொர்க்கம் காண்போம்
கண்ணிருளாய்த் தம்மிதயங்
கல்லாக்கிக்
காசினியிலேழை துயர்
காணுத்தீயோர்
எண்ணமெலாம் மாய்த்
திடுவோங்கருணைச்சிந்தை
ஈகையினுலெம்முயிராம்
நாட்டைக் காப்போம்.

வள்ளுவர் குரல் 1:

## உலக முதல்வன்

நமது வீட்டுக்குத் தலைவராக—முதல்வராக—எமது தந்தையார் இருக்கிருர். பள்ளிக்கூடத்துக்கு முதல்வர், தலைமையாசிரியர் ஆவர். ஒவ்வொரு ஊருக்கும் ஊர்த் தலைவர் இருப்பதையும் நாம் அறிவோம். இங்ஙனமே ஒவ்வொரு நாட்டுக்கும் தலைவர் உளர்.

உலகத்துக்குத் தலைவன் யாவன்? பாரதத்துக்கு நேரு, உருசிய நாட்டுக்குக் குருசேவு, அமெரிக்காவுக்கு ஐசனேவர் தலைவர் என்றுசொல்லலாம்; ஆனுல், இவர்கள் ஒவ்வொரு நாட்டுக்குத் தலைவர்களேயன்றி, முழு உலகுக்குமல்லர். அன்றியும், இன்று இவர்கள் அவ்வற் நாட்டுக்குத் தலைவர்களாக இருக்கின்றனரேயன்றி, என்றும் அப்படியே இருப்பர் என எண்ணவும் முடியுமா? உலகம் முழுவதையும் ஆளும் தலைவர் எவரும் இலர்.

(13-ம் பக்கம் பார்க்க)

## தித்திப்பான தமிழ்

—ஆரையூர் அமரன்—

தெள்ளத் தெளிந்த தமிழிது
தேனின் இனிய தமிழிது
தேடித் தேடிப் படித்திட
தெவிட்டா இன்பத் தமிழிது

நானிலத்து மொழிக் குல
ஆணி வேராம் தமிழிது
ஊனில் கலந்து உளமெலாம்
உவகை யூட்டுந் தமிழிது

சங்கம் வளர்த்த தமிழிது
பொங்கு மிளமைத் தமிழிது
எங்களன்னைத் தமிழிது
எழிலைப் பொழியும் தமிழிது

கலைகள் நிறைந்த தமிழிது
கல்லை உருக்கும் தமிழிது
சிலைகள் பேசும் தமிழிது
அலைகள் கடந்த தமிழிது

அரசு செய்த தமிழிது
அயலார் மெச்சு தமிழிது
அறிவு ஊட்டு தமிழிது
ஆண்மை காட்டு தமிழிது

நீதி செறிந்த தமிழிது
நீண்ட ஆயுள் தமிழிது
தீது எறிந்த தமிழிது
தித்திப்பான தமிழிது

வளர்மதி — சுதந்திரன் மாணவர் மன்றத்தில் இருபது வயதுக்குட்பட்ட எல்லோரும் அங்கத்தவர்களாகச் சேரலாம். கீழே பிரசுரிக்கப்பட்டிருக்கும் மனுப்பத்திரத்தைப் பூரணப்படுத்தி அனுப்பவேண்டும். மனுப்பத்திரங்கள் தொடர் இலக்கங்களுடன் பிரசுரிக்கப்படும். வெவ்வேறு இலக்கங்களைக்கொண்ட மூன்று மனுப் பத்திரங்களை "வளர்மதி"யில் அங்கத்தவர்களாகச் சேர விரும்புவோர் பூர்த்தி செய்து "வளர்மதி" C/o சுதந்திரன், தபால் பெட்டி இலக்கம் 1183, கொழும்பு 12 என்ற விலாசத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும் இப்படிச் செய்வோர் பெயர்கள் வளர்மதியில் வெளியிடப்படுவதுடன் அவர்களுக்கு அங்கத்தவர் இலக்கமும் கொடுக்கப்படும். அத்துடன் அத்தாட்சிப் பத்திரமும் வழங்கப்படும்.

**வளர்மதி**

**சுதந்திரன் மாணவர் மன்றம்**

**அங்கத்தவர் மனுப்பத்திரம்**

இல. 9.

பெயர்..................................................

பாடசாலை..............................................

விலாசம்...............................................

..........................................

.................................... ....................................

பெற்ருேர் அல்லது ஆசிரியர் கையொப்பம்    கையொப்பம்

## ஏன் படித்தேன்?

படித்து விட்டேன்—தமிழைப் படித்து விட்டேன்—அதிலும் குறளைப் படித்து விட்டேன். இப்போதுதான் உணர்தேன் குறள் படித்ததனுலேற்பட்ட தீமைகளை. ஏன் படித்தேன் குறளை? என்று என்னை நானே கேள்வி கேட்கவேண்டியிருக்கிறது. படித்தவற்றை மறப்போமென்ருல் முடியவில்லை நம்மிடமுள்ள குறள் அறிவுரைகளைப் பிறரிடம் கொடுத்துக் குறைப்போமென்ருல் அதுவும் முடியவில்லை. வெள்ளத்தால் அழிய வைக்கவும் முடியவில்லை. வெந் தழலால் வேக வைக்கவும் முடியவில்லை. வேந்தர் யாராவது வேண்டுகிருருமில்லை. இக் கல்விப் பொருளைக் கவரக் கூடியவர்களையும் காணேம். இதற்குக் கட்டுமில்லை—காவலுமில்லை. என்ன செய்வது? ஒரு வழியும் தோன்றவில்லையே?

முன்பு சில நாட்களாய் ஒரு தொழிலுமின்றித் திண்டாடினேன். பிழைப்பதற்குச் சுருக்க வழிகளைக் கையாள நினைத்தேன். ஒரு நாள் ஒரு வீட்டிற்திருடுவதற்காகச் சென்றேன். "உள்ளத்தால் உள்ளலுந் தீதே பிறன் பொருளைக் கள்ளத்தால் கள்வேமெனல்" என்னுங் குறள் என் நெஞ்சினை இடித்தது. திரும்பி வந்து விட்டேன்.

மறுநாள் (சூது) விளையாடலாமென்று சென்றேன். "சிறுமை பல செய்து சீரழிக்கும் சூதின் வறுமை தருவதொன்றில்" என்னுங் குறள் குத்தியது. மீண்டு வந்து விட்டேன்.

அடுத்தநாள் சிறிது கள்ளருந்திப் பார்ப்போமென்று மெதுவாய் நகர்ந்தேன். "துஞ்சினர் செத்தாரின் வேறல்லர் எஞ்ஞான்றும் நஞ்சுண்பார் கள்ளுண்பவர்" என்னுங் குறள் என் உள்ளத்தைத் தாக்கியது. செல்லாது திரும்பிவிட்டேன்.

மற்ருேர்நாள் ஏதும் விலங்குகளை வேட்டையாடி வருவோமெனக் காட்டிற்குச் சென்றேன். "தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்க தான்பிரி தின்னுயிர் நீக்கும் வினை" என்னுங் குறள் என் சித்தத்தினைவாட்டியது. போகாது வந்துவிட்டேன்.

இன்னேர் நாள் பிச்சை எடுத்தாவது வாழ்வோமென்று புறப்பட்டேன். "ஆவிற்குநீர் என்றிரப்பினும் நாவிற்கு இரவின் இளிவந்ததில்" என்னுங் குறள் என்னை முன்னேறவிடாது பிடித்திழுத்தது. திரும்பிவிட்டேன்.

பின் ஓர் இடமும் போகவில்லை. என் இல்லத்தில் இருந்தே மேலும் யோசிக்கலானேன். இந்தப் பாழ்பட்ட குறளைப் படித்ததினுல ஒரு வேலையும் செய்ய முடியவில்லையே? என் மன விருப்பப்படி வாழ முடியவில்லையே? என்ன செய்வது என்றெல்லாம் சிந்தித்தேன். "இலமென்றசைஇ இருப்பாரைக் காணின் நிலமென்னும் நல்லாள் நகும்" என்னுங் குறள் என் மனதிற் பளிச்சிட்டது. "தெண்ணீர் அடுபுற்கையாயினும் தாள் தந்தது உண்ணலின் ஊங்கினியதில்" என்னுங் குறள் என்னை இருக்க விடவில்லை. எழுந்தேன். என் அண்ணன் மாருடன் வயலை நோக்கி நடந்தேன். "ஒட்டார் பின் சென்ருெருவன் வாழ்தலின் அந்நிலையே கெட்டான் எனப்படுதல் நன்று" என்னுங் குறளை உன்னி மாடுகளைப் பூட்டி அவர்களுடன் ஏர் உழுதேன். "ஏரினும் நன்ருல் எருவிடுதல் கட்டபின் நீரினும் நன்றதன் காப்பு" என்னுங் குறள் எங்களுக்குதவியது.. நெல்லை விதைத்தோம். வானமிழ்தம் பொழிந்தது. களை எடுத்தோம். நாட்கள் நகர்ந்தன. வெட்டினேம். உழைப் பின் பயனுன நெல் மணிக் குவியல்களைக் கண்டு நெஞ்சம் பூரித்தேன். "உழுவார் உலகத்தார்க் காணி" என்றுரைத்த வள்ளுவரின் பேரறிவை எண்ணிவியந்தேன். குறளை ஏன் படித்தேன்? என்பதன் விடையைக் கண்டு கொண்டேன். நீங்களும் குறளைப் படித்தீர்களா? ஏன் படித்தீர்கள்? விடை தருவீர்களா?

"தாமரைத் தீவான்"

மலைவீடு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கழகச் செய்திகள்

## இளைஞர் விவசாயக் கழகம்

இளைஞர் விவசாயக் கழகத்தின் 2-வது ஆண்டு நிறைவு விழா கடந்த 16-11-59-ல் அரிப்பு கிளிவெட்டியில் மிகச் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. உணவு உற்பத்தி உத்தியோகத்தர் திரு. கோ. பாக்கியராஜா கழகக் கொடியை ஏற்றி விளக்கேற்றி விழாவைத் திறந்து வைத்தார். தேசிய கீதத்துடன் அங்கத்தவர் அணிவகுப்பும் கொடி வணக்கமும் நடைபெற்றது. "நாட்டின் பொருளாதாரம் சிறந்து விளங்க வேண்டுமானால் கமம் எவ்வளவு முக்கியமோ அவ்வண்ணமே சிறந்த கமக்காரர்களும் நாட்டிற்கு அவசியமாகும். எனவே இளம் விவசாயிகளை நன் முறைக் கமத்தை நாடி அதைப் பழக்கத்தில் கொண்டுவருதல் நம் பிற் சந்ததிக்கும் நாம் செய்யும் அரிய பெரிய தொண்டாகும்." என திரு. பாக்கியராஜா பேசுகையில் கூறினர்.

கழகத் தலைவர் திரு. க. கந்தவனம் உணவு உற்பத்தி உத்தியோகத்தர் திரு. பாக்கியராஜாவின் சேவையைப் பாராட்டிக் கழகச் சார்பில் அன்னருக்கு ஓர் பொன் "ஏர்" பதக்கத்தை பரிசளித்தார்.

கழகக் காரியதரிசி திரு. பா. யோசேப் குரூஸ், திருமதி. மாக்கிறேற் மேரி பேம்ராஜ், திரு. சா. ஹென்றி, திரு. சங்கரதாஸ், ஆதியோரும் சொற்பொழிவாற்றினர். நடப்பு வருடக் கழக உத்தியோகத்தர்கள் தேர்வு நடை பெற்ற பொழுது கீழ்க் காண்பவர்கள் ஏக மனதாகத் தெரிவு செய்யப்பட்டனர்:—

தலைவர்: திரு. ப. சபாபதி, உப தலைவர்: திரு. க. அன்னத்துரை, செயலாளர்: சா. ஹென்றி, உப செயலாளர்: திரு. த. நல்லலிங்கம், பொருளாளர்: திருமதி மாக்கிறேற் மேரி பேம்ராஜ்.

---

## சன சமூக சமாச நிலையம்

புத்தளம்-சிலாபப் பகுதி சனசமூக நிலையங்களின் ஐக்கிய சமாச வருடாந்தப் பொதுக் கூட்டம் கடந்த 14-11-59-ல் சிலாபம் ஆனந்தாக் கல்லூரி மண்டபத்தில் வடமேல் மாகாண உள்ளூராட்சி உதவி அதிகாரி திரு ஈ. வீ. எஸ். டீ. அல்விஸ் தலைமையில் நடைபெற்றது.

மறைந்த பிரதமர் திரு எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயகாவின் ஆத்ம சாந்திக்காக இரு நிமிட நேரம் மௌனம் அனுஷ்டிக்கப்பட்டபின், காரியதரிசியவர்களால் கடந்த கூட்ட வரலாறும், வருடாந்த வரவு செலவறிக்கையும் வாசித்துக்காட்டி அங்கீகரிக்கப்பட்டது.

புத்தளப் பகுதிச் சனசமூக நிலையங்களின் சமாசக் காரியதரிசி ஆசிரியர் திரு வீ. எஸ். பிள்ளையவர்கள் நிகழ்த்திய சொற்பொழிவில் "தமிழ்ப் பாஷை பேசும் மக்களிடத்தில் அரசாங்கம் சிங்கள மொழியை பலாத்காரமாகத் திணிக்க முயல்கின்றதென்ற கூற்றுக்குத் தமிழ் மக்கள் வாழும் கிராமங்களிலுள்ள சனசமூக நிலையங்கட்குச் சிங்களத்தில் ஸ்ரீ லங்காப் பத்திரிகைகளை அனுப்பி வருவதொன்றே போதிய ஆதாரமாயுள்ளது. சங்கங்கள் பலமுறை மறுப்புத் தீர்மானங்களை நிறைவேற்றி அனுப்பிவைத்த போதிலும், தொடர்ந்து தகவல் இலாகா சிங்களச் ஸ்ரீலங்காவையும், பிரசுரங்களையும் விடாப்பிடியாக அனுப்பிக் கொண்டேயிருந்தால் அரசாங்கப் பணம் வீணாக விரையஞ் செய்யப்படுவதுடன் அரசாங்கத்தின் நோக்கமுமே பழுதாகிவிடுகின்றது. தமிழ் மக்களைப் புண்படுத்தும் தகவல் இலாகாவின் இச்செயல் உடனடியாக நிறுத்தப்பட வேண்டுமென்று" குறிப்பிட்டார்.

சிலாபப் பகுதி உள்ளூராட்சி ஆய்வு உத்தியோகத்தரும், திரு அத்தனுயக்கா அவர்களும் சிங்களத்தில் பேசியபின்னர் கீழ்க்காணும் முக்கிய தீர்மானங்களுட்படப் பல தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேறின:

1. புத்தளம்-சிலாபப் பகுதிகளிலுள்ள தமிழ்க் கிராமங்களின் சனசமூக நிலையங்கட்கு அரசாங்கப் பிரசுரங்களையும், ஸ்ரீலங்காப் பத்திரிகைகளையும் தமிழிலே அனுப்பிவைக்க ஏற்பாடு செய்யும்படி தகவல் இலாகா அதிகாரியைக் கேட்டுக்கொள்ளுதல்.

2 புத்தளம் சிலாபப் பெரும் பிரிவுகட்குக் கூடுதலாக இரு உள்ளூராட்சி உதவி அதிகாரிகளை நியமிக்க ஏற்பாடு செய்யும்படி கனம் உள்ளூராட்சி மந்திரியைக் கேட்டுக்கொள்ளுதல்.

3 இச் சமாசத்தின் கலை விழாவைச் சிறப்பானமுறையில் அடுத்த ஆண்டு சித்திரை மாதம் சலாபத்தில் நடத்துவது.

அடுத்து நடைபெற்ற நடப்பு வருட உத்தியோகஸ்தர் தேர்தலில் உள்ளூராட்சி உதவி அதிபர் திரு ஈ. வீ. எஸ். டி. அல்விஸ், ஜனுப் பீ. எஸ். எம். அப்துல்காதர், திரு சேனனுயக்கா ஆகியோர் போஷகர்களாகவும், திரு ஏ. எஸ். பதிராஜ் தலைவராகவும், ஆசிரியர் திரு வீ. எஸ். பிள்ளை, டி. எம். ஜி. சவரதிவாகர ஆகியோர் இணைக் காரியதரிசிகளாகவும், திரு பீ. மஞ்சநாயக்கா தனதிகாரியாகவும், தெரிவு செய்யப்பட்டனர். 19 பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது. ஈற்றில் காரியதரிசியவர்களின் நன்றி கூறலுடனும், சிற்றுண்டி உபசரணைகளுடனும் பிற்பகல் ஒரு மணிக்குக் கூட்டம் கலைந்தது.

---

## பண்டிதமணி பாராட்டு விழாச் சபை

பண்டிதமணி திரு சி. கணபதிப்பிள்ளையின் பாராட்டு விழாச் சபை சென்ற 10-11-59-ல் சைவாசிரிய கலாசாலை முன்னாள் அதிபர் திரு சி. சுவாமிநாதன் தலைமையில் யாழ்ப்பாண ஆசிரியர் சங்கக் கந்தோரில் கூடியது. ஆறுமுகநாவலருக்குப் பின்னர் இலங்கையிலே தோன்றிய ஒரேயொரு சைவத் தமிழ்ப் பேரறிஞர் பண்டிதமணி அவர்களே என்று தலைவர் தம் தலைமையுரையில்கூறினர்.

# தேர்தல் நிதி தருக

வட மாகாணத்தில் இரண்டு உப தேர்தல்கள் நடைபெறவிருக்கின்றன என்பது எல்லோருக்கும் தெரியும். திரு. வன்னியசிங்கத்தின் மரணத்தால் காலியான கோப்பாய்த் தொகுதியிலும், திரு ஸி. சுந்தரலிங்கத்தின் ராஜினுமாவினல் காலியான வவனியாத் தொகுதியிலும் அந்த உபதேர்தல்கள் நடக்கும்.

இந்த இரண்டு உப தேர்தல்களும் பொதுவாகத் தமிழர்களுக்கும் குறிப்பாகத் தமிழரசுக் கட்சிக்கும் விடப்பட்டிருக்கும் சவாலாகும். எங்கள் மக்களும் கட்சியும்தமிழுக்கும் தமிழருக்கும் பரிபூரண விசுவாசமாக இருந்து, தமிழர் நலனுக்காகப் போராடக் கூடிய தகுதி வாய்ந்த அபேட்சகர்களை உபதேர்தல்களுக்கு நிறுத்த முடியுமா என்பதுதான் அந்தச் சவால் ஆகும்.

குறிப்பாக வவனியா, நன்ருக உழைக்கக் கூடிய சிறந்த ஒரு தொண்டரை—அந்தப் பிராந்தியத்தைத் தமிழர் பிரதேசத்தின் ஒருபகுதியாகப் பாதுகாத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருக்க அயராது போராடக் கூடிய ஒரு வீரரை, தெரிவு செய்தாக வேண்டும். தமிழ் பிரதேசத்தின் எல்லைப்புற அரணுக அமைந்திருப்பது வவனியா.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைச் சுட்டிக் காட்ட வேண்டும். அதாவது ஒருவர் அரசியல் வாதியாக இருப்பதானுல் அவருக்கு கணிசமான அளவு ஓய்வும் சொந்த வருமானமும் வேண்டும். துரதிர்ஷ்டவசமாக தமிழர்களுள் சொந்த வருமானம் உள்ளவர்களிடம் இலங்கையில் தமிழினம் அழிந்து போகாது பாதுகாக்கப்படல் வேண்டும் என்ற எண்ணம், அதற்கான உணர்வு போதிய அளவில் இல்லை. அதே நேரத்தில் தமிழினத்தின் நலனிலும் நல் வாழ்விலும் அக்கறை கொண்ட ஆண்கள்பெண்கள்—இரு பாலரிடமும் தேர்தலில் போட்டியிட்டு தம் இனத்துக்காகத் தமது முழு நேரத்தையும் செலவிட பணபலம் இல்லை. அதாவது வருமானம் கிடையாது.

இந் நிலையில், தமிழரசுக்கட்சி திறமையும் பொதுப் பணி நாட்டமும் கொண்ட ஒருவரையே வவனியாத் தொகுதித் தேர்தலுக்கு அபேட்சகராகத் தெரிந்தெடுக்க வேண்டும்; அத்தோடு அவருக்காகத் தேர்தல் பிரசாரம் செய்வதையும் பணம் செலவு செய்து உழைப்பதையும் கட்சியே பொறுப்பேற்க வேண்டி இருக்கிறது.

இதே போன்ற நிலைமைதான் கோப்பாய்த் தொகுதியிலும். நாம் அங்கு நிறுத்தும் அபேட்சகரான திருமதி கோமதி வன்னியசிங்கத்துக்கு ஆதரவு தருவது மட்டுமல்ல, அவருக்காக தேர்தல் வேலைகளைச் செய்து செலவினங்களைக் குறைக்கவும் அந்தத் தொகுதி மக்கள் ஆயத்தமாக இருக்கிருர்கள். அப்படி இருந்தும், ஒருசில ஆயிரம் ரூபாய்கள் அங்கே செலவு செய்துதான் தீர வேண்டும். தேர்தல் பிரசாரத்தின் போது அந்தச் செலவினம் தவிர்க்க முடியாததாகும்.

ஆகவே இலங்கைத் தமிழரசுக் கட்சி நிதி உதவியையும் வேறு உதவிகளையும் கோரி நிற்கிறது. கட்சி கடந்த காலத்தில் தமிழ்பேசும் மக்களுக்கு சேவை செய்திருக்கிறது; வருங் காலத்திலும் அது தொடர்ந்து செய்து வரும் எனவே கட்சியின் தேர்தல் நிதிக்கு தாராளமாகத்தந்து உதவுங்கள்.

—எஸ். ஜே. வி. செல்வநாயகம்

நிதி அனுப்பவேண்டிய முகவரி:

16, அல்பிரட் ஹவுஸ் கார்டின்ஸ்,

கொழும்பு—3.

# தாயும் தாய் நாடும்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தான் உன்னையே நாளையப் போருக்குத் தலைமைதாங்க நியமித்தேன்!"

தலைவன் போய் ஒரு பத்து நிமிடங்கள் கூட ஆகியிருக்காது. திரும்பவும் அவன் அங்கு வந்தான். அவன் கையில் ஒரு தந்தி இருந்தது. அது சிவசாமிக்கு வந்திருந்தது.

"உன் தாயார் பாக்கியத்துக்குக் கடுமையான வருத்தம் உடனே வரவும்" என்றிருந்தது தந்தியில். தந்தியைப் பார்த்தபடி அப்படியே நின்முன் சிவசாமி. சற்று நேரம் அமைதி.

"என்ன சிவசாமி யோசிக்கிருய்?......'இன்றைய நிலையில் அதிலும் நாளை முக்கியமான போர் இருக்கும் போது எப்படிப் போவது? தலைவன் அனுமதிப்பானு?' என்று யோசிக்கிருயா?...... அந்தச் சந்தேகமே வேண்டாம் உனக்கு. நீ உன் தாயைப் பார்க்கப் போக விரும்பினுல் என்ன விதத்திலும் உன்னை நான் கட்டாயம் அனுப்பி வைக்கிறேன்" என்ருன் தலைவன்.

சிவசாமி எதுவும் பேசாமல் சிலை போல் அப்படியே நின்ருன்.

"ஆறுதலாக யோசித்து உன் முடிவை என்னிடம் வந்து சொல்லு!" என்று கூறிவிட்டு நகர்ந்தான் தலைவன்.

சிவசாமி அப்படியே உட்கார்ந்து விட்டான். அவனுக்கு என்ன செய்வதென்றே தோன்றவில்லை. அவன் மனம் நீண்ட போராட்டத்தில் சிக்கித் தத்தளித்தது. தாய்ப் பாசமும் தாய்நாட்டுப் பற்றும் அவன் முன் தோன்றித் தோன்றி அவனை முன்னும் பின்னும் இழுத்தன.

முடிவில் தாய் நாட்டுப் பற்று வெற்றி கண்டது. சிவசாமி தன் முடிவைத் தலைவனிடம் கூறப்போகும் போது சரியாக நடு இரவு, மணி பன்னிரண்டு.

* * *

இரண்டு நாட்களாக இடைவிடாது நடைபெற்ற அந்த இறுதிப்போர் இன்னும் தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருந்தது.

காதைத் துளைக்கும் பீரங்கிக் குண்டுகளின் சப்தமும், இதயத்தையே உருக்கும் "ஐயோ!...அம்மா!..." என்ற செத்து மடிபவர்களின் வேதனைக் குரல்களும், துப்பாக்கி வெடிச் சப்தங்களும், வண்டிகள் விரைந்து செல்லும் பயங்கர ஒலிகளுமே அந்த இடத்தில் கேட்டுக்கொண்டிருந்தன. புழுதிப் படலம் வானத்தை மூடியிருந்தது.

சிவசாமியின் வண்டி முன்னணியில் நின்று இன்னமும் முன்னேறிக்கொண்டிருந்தது. படைகள் அதைத் தொடர்ந்துகொண்டிருந்தன. தாய் நாட்டுப் படையில் தீவிர முன்னேற்றம் காணப்பட்டது.

பகைவர் பலர் பதை பதைத்து நிலத்தில் வீழ்ந்த வண்ணமிருந்தனர். எங்கும் ஒரே இரத்த வெள்ளம்! உயிரற்ற சடலங்களின் மேல் தாய்நாட்டுப்படை முன்னேறிக்கொண்டிருந்தது.

அன்னியப் படையில் அநேகர் செத்தொழிந்தார்கள். எஞ்சிய சிலர் தாக்குதலைத் தாங்கமாட்டாமல் சிதறி அஞ்சி ஓடினர். அவ்வளவுதான், தாய் நாட்டுப் படை இன்னமும் முன்னேறியது. அடுத்த சில நிமிடங்களில் தாய்நாட்டின் எல்லையில் காலடி வைத்தனர் வீர புருஷர்கள்.

ஆயத்தமாகத் தன் வண்டியுள் வைத்திருந்த தாய்நாட்டின் சுதந்திரக் கொடியை எடுத்துக் கைகளில் பிடித்து உயரத் தூக்கினுன் சிவசாமி. அதைத் தொடர்ந்து பல கொடிகள் உயர்ந்தன. "வெற்றி! தாய்நாட்டுக்கு விடுதலை!" என்ற கோஷங்கள் வானைப்பிளந்தன.


அதே நேரம்தான் அந்த முக்கிய நிகழ்ச்சி நடந்தது. யாரும் எதிர்பாராத வண்ணம் ஓர் மரத்தின் மறைவிலிருந்து வேகமாகப் பாய்ந்துவந்த ஒரு துப்பாக்கிக் குண்டுஇமைக்கும் நேரத்தில் 'லெப்டினன்ட்' சிவசாமியின் உடலை ஊடுருவிப்பாய்ந்தது. குருதி குபீரெனக் கொப்பளிக்கத் தொடங்கியது. "ஆ!..." என்ற பரிதாப ஒலி சிவசாமியின் தொண்டையிலிருந்து பிறந்தது. ஆனுல் அவன் விழுந்துவிடவில்லை. இடது கையில் கொடியை இறுக்கப் பற்றிக் குருதி கொப்பளிக்கும் இடத்தில் வைத்து அழுத்திய வண்ணம் வலது கையில் தனது கைத் துப்பாக்கியை எடுத்த சிவசாமி அந்த மரத்தின் மறைவில் மிக நுட்பமாகத் தெரிந்த ஓர் உருவத்தை நோக்கிச் சுட்டான். அடுத்த கணம் மரத்தின் மறைவிலிருந்து நழுவி ஓடிவிடப் பார்த்த அந்த அன்னிய உருவம் "ஆ!......" என்ற அலறலுடன் நிலத்தில் வீழ்ந்தது. அதைத் தொடர்ந்து 'லெப்டினன்ட்' சிவசாமியும் தாய் நாட்டின் கொடியை இறுகப் பற்றிய கைகளுடனும், "தாய்நாடு வாழ்க!..." என்ற இறுதிக் கோஷத்துடனும் சரிந்து வீழ்ந்தான் வண்டியில்.

பிரக்ஞை வந்ததும் ஒரே ஒரு தடவை கண்களைத் திறந்தான். அருகில் நின்ற இராணுவத் தலைவனைப் பார்த்தான். இருந்த வலுவையெல்லாம் கூட்டி ஒன்று கேட்டான்: "தாய் நாட்டு விடுதலை கண்டுவிட்டேன். நான் மற்றப்படி காண வேண்டியது என்னைப்பெற்றவளின் முகம். அதற்கு மட்டும் வழி செய்கிறீர்களா சாரி?"

இராணுவத் தலைவரும் ஒன்றும் பேசவில்லை. மற்றவர்களும் மௌனம் சாதித்தார்கள். சிவசாமி விஷயத்தைப் புரிந்துகொண்டான். "போய்விட்டாளா என் அம்மா?" என்று அவன் கத்தவில்லை. அதற்கு அவனிடம் வலுவிருக்கவில்லை. நெஞ்சிலே கையை வைத்தான். அழுத்தினுன். "ஆ" என்ற வேதனைக் குரல் வந்தது. தாய் நாடு காத்த வீரனின் வாழ்க்கை அத்தோடு முடிந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 7-வது இன்ப வாரம்!




## கிங்ஸ்லி பிளாஸா வெலிங்டன்
(கொழும்பு) (வெள்ளவத்தை) (யாழ்ப்பாணம்)

## சாகர சம்றொக் நியூசினிமா
(சிலாபம்) (வென்னப்புவ) (குருநாகல்)

## மொடர்ன் ஸ்ரீபாத சாயா
(பதுளை) (ஹட்டன்) (கேகாலை)

## காமினி இரத்னவெளி
(மத்துகமம்) (ஜாயலை)

## மற்றும் நான்கு திரைகளில்

நீண்ட நாட்களுக்குப் பிறகு அருமையான குடும்பக்கதை ஒன்று. திரை ஓவியமாக்கி அளிக்கப்பட்டிருக்கிறது. உள்ளத்தை உருக்குகிறது; உணர்ச்சிகளை மீட்டுகிறது; ஒரு கணமும் படத்தில் பதித்தகவனத்தைத் திருப்பாதிருக்கத் தூண்டுகிறது. பார்ப்பவர்களையே கதாபாத்திரங்களாக்கி திரையில் நடப்பதெல்லாம் நமக்கு நடப்பது போன்ற உணர்வில் மகிழவும், நெகிழவும், துவளவும் துணுக்குறவும், கண்ணீர் கொட்டவும் வைக்கிறது படம்.




ஆயிரமாயிரம் ரசிகர்கள்கண்டு களித்துவிட்டார்கள்!

கருத்து நிறைந்த படம்! கண் விழித்துக் காண வேண்டிய படம்.இது!!

வில்லனேயில்லாமல் விறுவிறுப்பான கட்டங்கள் சம்பவங்கள் நிறைந்தது!




## காணத் தவறுதீர்கள்!

**ஜெமினி கணேசன், சரோஜாதேவி,**

**விஜயகுமாரி, நாகேஸ்வரராவ், நம்பியார், தங்கவேலு, எம். சரோஜா**

நடித்தது

பின்னணி பாடியவர்கள்: ஏ. எம். ராஜா-ஜிக்கி-பி.சுசீலா-ஜமுனாராணி

**டைரக்ஷன்:** ஸ்ரீதர்

**சங்கீதம்:** ஏ. எம். ராஜா

இப் பத்திரிகை கொழும்பு தட்டாதெரு, 196-ம் இலக்கத்தில் வசிக்கும் எஸ். டி. சிவநாயகம் அவர்களால் சிலோன் நியூஸ் பேப்பர்ஸ் லிமிடெட் ஸ்தாபனத்தாரின் சார்பாக தட்டாதெரு, [illegible] 1959 நவம்பர் மாதம்29-ம் திகதி பிரசுரிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org